
சேலம் மாவட்டத்தில் கல்கி – 1
KALKI
22.3.87
ரூ. 1.50
கல்கி
ஒரு கிராமமே அழியப் போகிறது!


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின்— அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
LINTAS RIN 115 2416 TM



பரபரப்பான கேரளத் தேர்தல்...

புரட்சியைச் சித்தாந்தமாகக் கொண்ட கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்) கட்சியை, உலகிலேயே முதன்முதலில் வோட்டளித்துத் தேர்ந்தெடுத்து, அதனிடம் ஆட்சிப் பொறுப்பையும் ஒப்படைத்தவர்கள் கேரள மக்கள்தான். அது நடந்தது 57–ல். அப்போதுதான் யாருடைய கூட்டணியும் இல்லாமல், நம்பூதிரிபாட் முதலமைச்சரானார்.

நம்பூதிரிபாட் அமைச்சரவைக்குப் பிறகு, இப்போதுள்ள கருணாகரன் அமைச்சரவை வரை, அதன்பிறகு அமைந்த எல்லா அமைச்சரவைகளும் கூட்டணி அமைச்சரவைகள்தாம். எனவே, இன்றைய முதல்வர் கருணாகரன் உள்பட, எல்லா முதல்வர்களும் எப்போது கூட்டணிக் கட்சியினர் காலை வாரி விட்டுவிடுவார்களோ என்ற பயத்தில்தான், ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட கத்தி முனையில் நடக்கும் வித்தையைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாண்டு காலமும் வெற்றி



* கருணாகரன்



* பிரேம் நஸீர்

கரமாக நடத்திக் காட்டியவர்கள், கடந்த எழுபதுகளில் முதல்வராயிருந்த அச்சுதமேனனும் இன்றைய முதல்வர் கருணாகரனும்தான். மற்ற முதல்வர்களெல்லாம் இரண்டு மூன்றாண்டுகளுக்குக் கூடத்தாக்குப் பிடிக்க முடியாமல் கவிழ்ந்து போய்விட்டார்கள்.

இவையெல்லாம் கடந்த காலம். இப்போது 23–ம் தேதி நடக்கவிருக்கும் ஒன்பதாவது பொதுத் தேர்தலில், இ. காங்கிரஸ் முதல்வர் கருணாகரன் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (UDF) வெற்றி பெறப் போகிறதா அல்லது மார்க்ஸிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி (LDF) வெற்றி பெறப் போகிறதா என்பதுதான் இப்போதைய கேள்வி. சென்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கருணாகரன் தலைமையிலான கூட்டணி, தோல்வியுற்ற மார்க்ஸிஸ்ட் கூட்டணியை விட ஒரு சதவிகித வோட்டுக்கள்தான் அதிகம் பெற்றிருந்தது. அதனால்தான் இந்தத் தேர்தல், அரசியல் மட்டத்தில் ஒரு பெரும் பரபரப்பான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

பொதுவாக நோக்குமிடத்து மற்ற மாநிலங்களில் தேர்தல் நடப்பதற்கும் கேரளத்துக்கும் சில வித்தியாசங்கள் உண்டு. இங்கு மலைப் பிரதேசங்கள் மிகுதியாதலால் வாக்காளர்களிடம் பிரசாரம் சென்றடைய செலவு செய்ய வேண்டியது அதிகமாக உள்ளது. எனவே, பண பலம் தேர்தலில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. வேட்பாளர்கள் தேர்தல் கால வாக்குறுதிகளை எக்கச்சக்கமாக அள்ளி வீச மாட்டார்கள். காரணம், வாக்காளர்களிடையே படிப்பறிவு அதிகம். அவர்களைச் சுலபமாக ஏமாற்ற முடியாது. வாக்காளர்களும் தேர்தல் பிரசாரத்தை கேஷுவலாக எடுத்துக் கொள்வார்கள். பேரணிகள், மாபெரும் தேர்தல் பொதுக் கூட்டங்கள் முதலியவற்றைப் பார்க்க முடியாது.

இந்தத் தேர்தலில், மார்க்ஸிஸ்ட் தலைமையிலான கூட்டணி மிகச் சுலபமாக வெற்றி பெற்றுவிடும் என்று சிலர் கண்லை

* ராகவன்



மூடிக் கொண்டு அபிப்ராயம் சொல்கிறார்கள். காரணம், இந்தத் தேர்தலின் வாக்காளர் பட்டியலில் சுமார் இருபத்தெட்டு லட்சம் இளைஞர்கள் புதிதாகச் சேர்ந்திருக்கிறார்கள். இதைக் கவனத்தில் கொண்டுதான் மார்க்ஸிஸ்ட் கட்சிதான் போட்டியிடும் மொத்த இடங்களில், முப்பத்து மூன்று சதவிகித இடங்களை இளைஞர்களுக்கு ஒதுக்கியிருக்கிறது. இளைஞர்கள், இளைஞர்களுக்கே வோட்டளிப்பது இயற்கைதானே என்கிறார்கள் அவர்கள்.

இதோடு, மார்க்ஸிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி வெற்றி பெற்றால் கே.ஆர். கௌரிதான் முதலமைச்சர் என்றும் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். கே.ஆர். கௌரி என்பவர், கேரளாவில் உள்ள மெஜாரிட்டி ஜாதியான ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். அதனால் அந்த இனத்தவர், கே.ஆர். கௌரியை மனதில் கொண்டு, மார்க்ஸிஸ்ட் கூட்டணிக்கு வோட்டளிக்கவும் வாய்ப்பிருக்கிறது. இந்தக் கூடுதல் பாயிண்ட்களோடு மார்க்ஸிஸ்ட் கூட்டணிக்கு மைனஸ் பாயிண்ட்களும் உண்டு. அவற்றில் தலையாயது எம். வி. ராகவன் என்பவரைக் கட்சியிலிருந்து விலக்கியது!

மார்க்ஸிஸ்ட் கட்சியிலேயே மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கியவர் இந்த எம்.வி. ராகவன். அவர் இந்தத் தேர்தலில் கருணாகரன் கூட்டணியிலுள்ள முஸ்லிம்லீக்கையும், கேரள காங்கிரஸையும் மார்க்ஸிஸ்ட் கூட்டணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். ஆனால் மார்க்ஸிஸ்ட் கட்சியின் மாநில அமைப்போ, வகுப்பு வாதக் கட்சிகளையெல்லாம் தனது கூட்டணியில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று ஒரு தீர்மானமே போட்டுவிட்டது. அதன்பிறகும் ராகவன், 'இ. காங்கிரஸ் என்னும் எதேச்சாதிகாரக் கட்சியை எதிர்க்க, எப்படிப்பட்ட வகுப்பு வாதக் கட்சிகளோடும் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம்' என்று வெளிப்படையாகவே பேசினார்.

அதனால் கட்சியிலிருந்து வெளியேற்றப் பட்ட அவர், இப்போது, 'மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி' என்று ஒரு புதிய கட்சியை ஆரம்பித்து இத்தேர்தலில் மொத்தம் தொண்ணூறு இடங்களில் தமது வேட்பாளர்களைக் களத்தில் இறக்கிவிட்டார். அவருக்குக் கருணாகரன் கூட்டணி கூட மறைமுகமாக ஆதரவு கொடுக்கிறது. அதனால்தான் ராகவன் போட்டியிடும் அழிக்கோடு என்னும் தொகுதியிலும், அவருக்கு அடுத்தபடியாகக் கட்சியிலுள்ளவர் ஒருவர் போட்டியிடும் தளிப்பரம்பு என்னும் தொகுதியிலும் கருணாகரன் கூட்டணி தனது வேட்பாளர்களை வாபஸ் பெறச் செய்துவிட்டது. எனவே, மார்க்ஸிஸ்ட் கூட்டணி வோட்டுக்களில் ஒரு சிறு பகுதியையாவது, ராகவன் கட்சி சிதறச் செய்துவிடும் என்கிறார்கள் பலரும். இப்படி நடக்குமா அல்லது எஸ்.டி.எஸ். இங்கே அ.தி.மு.க.விலிருந்து வெளியேறி தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வி கண்டது போல்

கேரளாவின்....
தலையெழுத்தை
நிர்ணயிக்கும் தலைவர்கள்!



ஜோதி வெங்கடாசலம்

கேரள அரசியலின் தலையெழுத்தைநிர்ணயிக்கும் சில தலைவர்களைப் பற்றி இங்கே சொல்பவர், ஐந்து ஆண்டுகள் கேரளா கவர்னராக இருந்த ஜோதி வெங்கடாசலம்.

ஏ.கே. அந்தோணி : ரொம்ப எளிம்பிளான மனிதர். கேரள காமராஜ் என்று கூடச் சொல்லலாம். 1977—ல் நான் கவர்னர் பதவியேற்ற சில மாதங்களுக்குப் பிறகு, பதவியை ராஜினாமா செய்தார். 'ராஜினாமாவை நான் ஏற்கமாட்டேன்' என்று கூறி அவரது முடிவை மறு பரிசீலனை செய்யச் சொன்னேன். 'நமக்கு வேண்டாம்பா இந்தப் பதவி' யென்று தமது முடிவில் நிலையாக நின்று, பதவியை ராஜினாமா செய்தார். இவரது அபிமானிகள் என்று ஒரு பெருங்கூட்டம் உண்டு. இவர் என்ன சொன்னாலும் சிரமேற்கொண்டு செய்வார்கள்.

ஆகிவிடுமா என்பதை அறிய கேரள மக்களின் தீர்ப்புக்குத்தான் காத்திருக்க வேண்டும்.


கேரளாவிலுள்ள மொத்தம் நூற்று நாற்பது தொகுதிகளில், இருபத்தியொரு தொகுதிகளின் வெற்றியை முஸ்லிம் வோட்டுக்கள்தான் தீர்மானிக்கும். அதே போல், முப்பத்தாறு தொகுதிகளில் கிறிஸ்துவர்களின் வோட்டுக்கள்தான் தீர்மானிக்கும். இந்நிலையில், முஸ்லிம்கள் சார்ந்துள்ள முஸ்லிம் லீக்கும், கிறிஸ்துவர்கள் சார்ந்துள்ள கேரள காங்கிரஸும் கருணாகரன் கூட்டணியில் இருப்பதும் மார்க்ஸிஸ்ட் கூட்டணிக்கு மிகப் பெரிய மைனஸ் பாயிண்ட்தான் என்பதில் சந்தேகமில்லை.

சரி, மார்க்ஸிஸ்ட் கூட்டணிக்குத்தான் இத்தனை மைனஸ் பாயிண்ட்டுகளா, கருணாகரன் கூட்டணிக்குக் கிடையவே கிடையாதா என்றால், அங்கும் புகைச்சலுக்குக் குறைச்சலே இல்லை!

இ. காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டவுடனேயே, 'கிழவர்களை நிறைந்த மார்க்ஸிஸ்ட் கட்சியில் கூட இளைஞர்களுக்கு முப்பது மூன்று சதவிகிதத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இ. காங்கிரஸிலோ மூன்றரை சதவிகிதம் கூட இளைஞர்களுக்கு ஒதுக்கப்படவில்லை' என்று கூறி கேரள இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரமேஷ், மற்றும் பொதுச் செயலாளர் செரியன் பிலிப் ஆகிய இருவரோடு மற்றவர்களும்



* கே.எம். மாணி



* ஏ.கே. அந்தோனி

நாயனார் : கம்யூனிஸ்ட் ஆயிற்றே, எப்படியிருப்பாரோ என்னமோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன். மனிதர் ஏமாற்றிவிட்டார். மிக நல்ல மனிதராகப் பழகினார். எந்த முடிவெடுக்கும்போதும், என்னைக் கேட்பார். நீங்கள் இந்த முடிவை எடுத்தால் இந்த மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்று சொல்வேன். விரும்பத்தகாத விளைவு என்று கண்டால் திருத்திக் கொள்ளச் சிறிதும் தயங்கமாட்டார். ஆங்கிலம் அறிந்திருந்தாலும், மலையாளத்தில்தான் சம்சாரிப்பார். தமிழகத்துக்கு வர இருந்த கடற்பயிற்சிக் கல்லூரியை இலவசமாக நூறு ஏக்கர் இட்டு கொடுத்துத் தட்டிக் கொண்டு போனவர்.

கே.எம். மாணி : கேரளா காங்கிரஸ் என்ற கட்சியை ஸ்தாபித்தவர். இவருக்கு ரப்பர் எஸ்டேட்டுகள் உண்டு. கோட்டயம் வட்டாரத்தில் பிரபலமானவர். தாம் மட்டும் வராமல் குடும்பத்துடன் அடிக்கடி வந்து என்னைப் பார்ப்பவர்களுள் இவரும் ஒருவர்.

ஜோஸப் : மாணியிடமிருந்து பிரிந்து போய் கேரள காங்கிரஸ் (ஜோஸப்) என்ற கட்சியை ஆரம்பித்தவர். பழகுவதற்கு மிகவும் இனியவர். தொடுபுழா வட்டாரத்தில் இவருடன் நான் பல அரசாங்க சம்பந்தப்பட்ட விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறேன். அப்போது இவருக்கு உள்ள பாப்புலாரிட்டியைக் கண்டு பிரமித்திருக்கிறேன். நான் 1982—ல் கவர்னர் பதவியை விட்டுச் சென்னைக்கு வந்த பிறகும் என்னை அவ்வப்போது வந்து பார்த்துச் செல்பவர்களில் இவரும் ஒருவர்.

தங்கல் : கேரளாவில் எல்லாக் கட்சிகளுக்கும் இரண்டு பிரிவு உண்டு. அதேபோலத்தான் முஸ்லிம் லீக்கிலும் இரண்டு பிரிவுகள். கேரள முஸ்லிம் லீக்கின் தலைவர் தங்கல். கேரள அரசியலில் முஸ்லிம் லீக்கின் பங்கு கணிசமானது. கண்ணனூர், மலப்புரம், கள்ளிக்கோட்டை வட்டாரங்களில் லீக் பலமான கட்சி. தங்கல் சட்டமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும் மிகுந்த செல்வாக்கு படைத்தவர்.

கருணாகரன் : கேரளாவில் பிரபலமான 'ராஜன்' வழக்கில் பதவியை இழந்த இவர், மீண்டும் அரசியலில் பிரகாசிப்பாரா என்பதே கேள்விக்குறியாக இருந்தது. ஆனால் எப்படியோ முட்டி மோதி மீண்டும் பிரகாசிக்கத் தொடங்கி முதல்வராக ஐந்து ஆண்டுகளை ஓட்டிவிட்டார். 1982—ல் நான் பதவியில் இருந்து ஓய்வு பெறும் முன்பு இவருக்குத்தான் பதவிப் பிரமாணம் செய்து வைத்துவிட்டு வந்தேன். மிகுந்த கடவுள் பக்தி உள்ளவர். ஒரு தொழிற்சங்கவாதியாக அரசியலில் இறங்கிய கருணாகரன் அவசர முடிவுகளுக்குப் பேர் போனவர். தன் இஷ்டப்படி எல்லாம் நடக்க வேண்டுமென்று விரும்புபவர். அப்படிப்பட்ட கருணாகரன் கேரளாவில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முதல்வராக நீடித்தது மிகவும் ஆச்சரியப்படத்தக்க ஒன்று. டெல்லியில் உள்ள தலைவர்களிடம் நல்ல முறையில் உறவு வைத்துக் கொண்டிருப்பவர். எப்போதும் இரண்டு மூன்று தொகுதிகளில் போட்டியிடும் இவர் இந்த முறை 'மாலா' தொகுதியில் மட்டும் போட்டியிடுவது ஓர் ஆச்சர்யம்.

— கௌசல்யா

கூண்டோடு ராஜினாமா செய்ய, பிறகு ஒரு வழியாகச் சமாதானப்படுத்தி, ராஜினாமாவை வாபஸ் பெறவைக்கவேண்டியதாயிற்று. ஆயினும் அவர்களுடைய சமாதானம் முழுமையானதல்ல; கருணாகரன் தங்களைப் போன்ற இளைஞர்களை வளர விடுவதில்லை என்ற அதிருப்தி அவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது.

இளைஞர்களின் அதிருப்தியோடு, பெரியவர்களின் அதிருப்தியும் சேர்ந்தேதான் இருக்கிறது. கருணாகரன் அமைச்சரவையில் அமைச்சர்களாயிருந்த தச்சாடி பிரபாகரன், எம்.பி. கங்காதரன் (இவர் தமது மைனர் மகளுக்குத் திருமணம் செய்து வைத்து சர்ச்சைக்குள்ளானவர்.), பி.கே. வேலாயுதன் ஆகிய மூவரும், தங்களுக்கு எப்படியும் சீட் கிடைத்துவிடும் என்ற உறுதியான நம்பிக்கையில், தேர்தல் பிரசாரப் போஸ்டர்களையெல்லாம் சுவர்களில் ஒட்டிப் பிரசாரமே செய்ய ஆரம்பித்துவிட்டனர். அந்த நிலையில், அவர்களுக்கு சீட் கொடுக்கப்படாததால் பலமான அதிருப்திக்குள்ளாகியிருக்கின்றனர். அந்த அதிருப்தியில் மூவருமே இ. காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராக வேலை செய்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. தச்சாடி பிரபாகரன் கேரளாவிலுள்ள பெரும் பகுதி இனத்தவரான ஈழவர் சமூகத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் அந்த வோட்டுக்கள் கருணாகரன் கூட்டணியை பாதிக்க வாய்ப்புள்ளதாகவும் சொல்லப்படுகிறது. இதோடு, எம்.பி. கங்காதரன், தமது சொந்த மாவட்டமான மலப்புரம் மாவட்டத்தில், காதும் காதும் வைத்ததுபோல், இ. காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராகப் பத்து போட்டி வேட்பாளர்களை நிறுத்தியிருப்பதாகச் சொல்கிறார்கள். கங்காதரன் அதை மறுத்தாலும் அந்த மறுப்பு உண்மையல்ல என்கிறார்கள். இது கருணாகரன் கூட்டணிக்கு உள்ள இரண்டாவது மைனஸ் பாயிண்ட்.

மூன்றாவதாக, சென்ற பொதுத் தேர்தலின்போது, முற்பட்ட ஜாதியினரான நாயர் இனத்தவருக்குப் பொருளாதார அடிப்படையில் பதினைந்து சதவிகித இட ஒதுக்கீடு செய்வதாகக் கருணாகரன் தமது தேர்தல் அறிக்கையிலேயே சொல்லியிருந்தும் அதைச் செய்யவில்லை. அதனால், நாயர் இனத்தவர் கருணாகரன் மேல் அதிருப்தி கொண்டுள்ளனர். இதைப் போக்க நினைத்த கருணாகரன், மறுபடியும் இப்போது அந்த இட ஒதுக்கீட்டைச் செய்யப் போவதாகப் பிரகடனப்படுத்தினார். உடனே கருணாகரன் கூட்டணி அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் முஸ்லிம் லீக் அமைச்சர் இ. அஹமது, 'அப்படிச் செய்தால், முஸ்லிம் லீக் தனது கூட்டணியை வாபஸ் வாங்கிக் கொண்டுவிடும்' என்று வெளிப்படையாகவே தேர்தல் கூட்டணிக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்து அதை எதிர்த்தார். வேறு வழியின்றிக் கருணாகரன் வாயை மூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதில் நாயர் இனத்தவரின் அதிருப்தியை மட்டுமல்லாமல், முஸ்லிம் லீக்கின் பரவலான

அடுத்த இதழ்

சேலம் மாவட்டத்தில் கல்கி—II



வறண்டு வரும் ஏற்காடு

— ஸ்பெஷல் ரிப்போர்ட்

ஊனம் இவருக்கல்ல; அரசுக்குத் தான்!

— ஒரு சந்திப்பு

"பத்திரிகையாளராக அல்ல; சமூகப் பார்வையோடு வருகிறீர்கள்!"

— சேலம் கலெக்டர் பேட்டி



அதிருப்தியையும் சேர்த்தே பெற்றுக் கொண்டுவிட்டார் கருணாகரன்!

இந்நிலையில்தான், கருணாகரன் வேறொரு புதுக் கணக்குப் போட்டார். ஒருவேளை எதிர்காலத்தில் தாம் முஸ்லிம் லீக்கின் ஆதரவை இழக்க நேரிட்டாலும், எப்படியாவது முஸ்லிம்களின் பரவலான ஆதரவைப் பெற்றுவிட, அப்துல் காதர் என்கிற நடிகர் பிரேம் நஸீரின் செல்வாக்குப் பயன்படும் என்று நினைத்துத்தான், பிரேம் நஸீர் இ. காங்கிரஸில் சேர்ந்தபோது, அவரை இரு கரம் நீட்டி வரவேற்றார் கருணாகரன். ஆனால், கேரள இ. காங்கிரஸின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும் அமைச்சருமான வயலார் ரவிக்கு பிரேம் நஸீரைக் கண்டாலே பிடிக்காது. அதோடு, 'கேரளாவில் இ. காங்கிரஸ் வளர வேண்டுமானால், கருணாகரனை ஒரு போதும் முதலமைச்சராக்கக் கூடாது' என்று அடிக்கடி டெல்லி சென்று வத்தி வைத்துக் கொண்டிருப்பவரும்கூட! இந்தச் சிக்கலில் நான்காவதாக வரும் மைனஸ் பாயிண்டுக்குக் கேட்பானேன்!


இத்தனைக்கும் நடுவில், இந்து முன்னணி, பாரதீய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ். ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து மூன்றாவது கூட்டணி ஒன்றையும் உருவாக்கியுள்ளன. இது ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கான பலம் வாய்ந்த கூட்டணி அல்ல என்றாலும், இது பிரிக்கும் வோட்டுக்கள் கருணாகரன் கூட்டணியைத்தான் பாதிக்கும் என்கிறார்கள்.

இந்தச் சூழலில் ஜனவரியிலும் மார்ச்சிலும் இருமுறை சுற்றுப் பயணமாகக் கேரளா வந்த ராஜீவ் காந்தி, அவசரம் அவசரமாக எழிமலாவில் கடற்படைக் கல்லூரிக்கும், ஆலப்புழையிலிருந்து காயாங்குளம் வரையிலான கடலோரப் புதிய ரயில் பாதைக்கும் அடிக்கல் நாட்டியதோடு, திட்டத்தில் சேராத செலவினங்களுக்காகக் கேரள அரசுக்கு மத்திய அரசு நானூற்றுப் பதினைந்து கோடி ரூபாய் கொடுக்கும் என்றும் அறிவிப்புச் செய்திருக்கிறார். இவையெல்லாம் சுத்தமான தேர்தல் ஸ்டண்ட் என்பதைப் படிப்பறிவு மிக்க கேரள மக்கள் புரிந்து கொள்ளக் கூடும். அப்போது இவையும் கருணாகரன் கூட்டணிக்கு உதவுவதற்குப் பதில் ஒரு மைனஸ் பாயிண்ட்டாகவே மாறிவிடலாம்.

ஆக, இரு தரப்பிலும் இத்தனை மைனஸ் பாயிண்ட்களுக்கிடையில் — கருணாகரன் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறுமா அல்லது மார்க்ஸிஸ்ட் கூட்டணி வெற்றி பெறுமா? எது வெற்றி பெற்றாலும் வரப் போகிற முதலமைச்சர் மீண்டும் கூட்டணிக் கட்சிகளின் தயவில்தான் பதவியில் நீடிக்க முடியும்! ஒரு கட்சி பூரண மெஜாரிடி பெற்று பதவிக்கு வந்தது என்ற பேச்சுக்கே இடமில்லை!

— நமது நிருபர்

மார்ச் 1987 மாபெரும் அதிர்ஷ்டம் உங்களை நாடி வருகிறது!



ராயல் பூடான் அரசின்

பாரடைஸ் சூப்பர் பம்பர்

வென்றிடுவீர் நூ/ரூ. 1.67 கோடி

பரிசு பட்டியல்

பரிசு வகை	பரிசுகளின் எண்ணிக்கை	பரிசு சீட்டுதாரர் பரிசுத்தொகை	ஏஜெண்டுகளுக்கான போனஸ்	ஒவ்வொரு கவுண்டர்பாயிலுக்கான கமிஷன் தொகை	[illegible]
1வது பரிசு	1	10,00,000	1,00,000	1,00,000	10,000
2வது பரிசு	1	5,00,000	1,00,000	1,00,000	10,000
3வது பரிசு	10	1,00,000	50,000	50,000	2,000
4வது பரிசு	25	50,000	25,000	25,000	1,000
5வது பரிசு	125	5,000	1,000	1,000	500
6வது பரிசு	500	1,000	1,000	1,000	
7வது பரிசு	500	500	500	500	
8வது பரிசு	5,000	50	50	50	
9வது பரிசு	5,000	20	20	20	
10வது பரிசு	1,00,000	10	10	10	
11வது பரிசு	2,00,000	5	5	5	
மொத்தம்	3,11,162				

குலுக்கல் நாள்: 30.3.1987 டிக்கெட் விலை: நூ/ரூ. 5/-

ஆர்கனைஸிங் ஏஜெண்ட்:
பயனீர் லாட்டரீஸ்
பாலக்காடு-டில்லி-சென்னை.

YOUR FORTUNE IS OUR LOOK OUT

வெளியிடுவோர்: உதவி செயலாளர்,
லாட்டரி இயக்ககம்,
ராயல் பூடான் அரசு,
பண்ட்ஷோலிங், பூடான்.

* தேவராஜன்





* பாதியில் நிற்கும் கோழிப் பண்ணை ஷெட்டுகள்.



ஒரு கிராமமே அழியப்போகிறது!



* குப்பன்

மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் கூட, முன் யோசனையின்றிப் பிடிவாதத்தோடு செயல்படுத்தப்படும்போது, அவை எத்தனையெத்தனை நஷ்டங்களை ஏற்படுத்தும் என்பதற்கு, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் ஓர் உதாரணம்......

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். நோய்வாய்ப்பட்டு, சிகிச்சைக்காக அமெரிக்கா செல்வதற்குச் சில தினங்கள் முன்பு, அப்போது அமைச்சராக இருந்த நாமக்கல் அருணாசலத்தின் திருமணத்திற்காக நாமக்கல் வந்திருந்தபோது, 'அருணாசலத்தின் திருமணப் பரிசாக நீங்கள் என்ன தரப் போகிறீர்கள்?' என்று அமைச்சர் ராஜாராம் எம். ஜி. ஆரிடம் கேட்க, உடனே அவர், 'நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கிறேன்' என்று அறிவிப்புச் செய்துவிட்டார்.

இது முழுக்க முழுக்க வரவேற்கப்பட வேண்டிய விஷயம் தான். ஆனால், ஓரிடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரியும்

ஆராய்ச்சி மையமும் அமைப்பதென்பது, திருவல்லிக்கேணியில் ஒண்டுக் குடித்தனம் வைத்து நடத்துகிற சங்கதியல்ல; அதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடம் வேண்டுமே! அதற்காக இடம் தேடும் வேலையில் ஈடுபட்டார்கள் நமது அதிகாரிகள்.

இப்போதுள்ள நாமக்கல் அரசு கலைக்கல்லூரிக்கு அருகிலிருக்கும் சுமார் நூறு ஏக்கருக்கும் மேலான புறம்போக்கு நிலத்தைக் கண்டுபிடித்த அதிகாரிகள், இதுவே போதும்; இன்னும் சில ஏக்கர்கள் தேவைப்பட்டால், பக்கத்திலுள்ள விவசாய நிலங்களிலிருந்து





சந்திரமௌளீஸ்வரன்



கல்லூரி அமைக்கக் காட்டப்படும் அணியாபுரத்திலுள்ள மாற்று இடம் இதுதான்......

ஆர்ஜிதம் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, அரசுக்குத் தெரியப்படுத்தினார்கள். அரசும் அதை ஏற்றுக் கொண்டு, கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டப்படும் வரை தற்காலிகமாக, நாமக்கல் அரசு உயர்நிலைப் பள்ளிக்குள்ளேயே கால்நடை மருத்துவக் கல்லூரி இயங்கட்டும் என்று கல்லூரியையும் ஆரம்பித்துவிட்டது.

இடம் தயார். ஆனால் பணம்? அதற்காக உலக வங்கிக்கு அப்ளிகேஷன் போட்டது அரசு. உலக வங்கியிலிருந்து கடன் பெறுவதென்பது, 'பூஜாரி கடன்' மாதிரியான விஷயமில்லை. நாம் என்ன திட்டத்திற்காகக் கடன் கேட்கிறோமோ, அந்தத் திட்டம் பற்றிய முழு விவரங்களையும் நேரில் வந்து கண்டறிந்து திருப்தியடைந்த பிறகே, கடன் தரச் சம்மதிப்பார்கள் உலக வங்கியினர். அதன்படி, நாமக்கல்லில் அமையவிருக்கும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் அமையவிருக்கும் இடத்தைப் பார்வையிட வந்தனர் உலக வங்கியினர்.

நமது அதிகாரிகள் அழைத்துச் சென்று காட்டிய இடத்தைப் பார்வையிட்ட உலக வங்கிக் குழு, 'இந்த இடம் போதவே போதாது; ஓரிடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரியும் ஆராய்ச்சி மையமும் அமைக்க வேண்டுமானால் குறைந்தபட்சம் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பாவது வேண்டும்! என்று உறுதியாகச் சொல்லி விட்டது. உலக வங்கியின் ஆலோசனையைப் புறக்கணித்தால், அதனிடமிருந்து கடனுதவி பெற முடியாது என்பதால், நமது அரசும் அந்த இடத்திலேயே சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உத்தரவிட்டு விட்டது.

இப்படி, ஆர்ஜிதம் செய்யப் போவதாக அரசு அறிவித்துள்ள இடம் அத்தனையும் விவசாய நிலம். புன்செய் நிலம்தான் என்றாலும் ஒவ்வொன்றும் சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து தோண்டப்பட்ட நூற்றுக்கும் மேலான கிணறுகள்; காய்த்துக் குலுங்கும் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள். ஒரு லட்சம் 'பேப்காக்' இனக் கோழிகளைக் கொண்டு, தினசரி எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட முட்டைகளை விற்பனைக்கனுப்பும் சுமார் முப்பது கோழிப் பண்ணைகள்; இந்த ஒரு லட்சம் கோழிகளுக்காக, ஒவ்வொன்றும் சுமார் முப்பதாயிரம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்ட ஐம்பது ஷெட்டுகள்; நான்கு கோழித் தீவன அரவை ஆலைகள்; ஒரு சிறிய பேப்பர் மில்; அவரவரும் தத்தமது விவசாய நிலங்களுக்குள்ளேயே கட்டிக் கொண்டிருக்கும் வீடுகள்... என்று அத்தனையும் கால்நடை மருத்துவக் கல்லூரி கட்டப்படும்போது, அழிக்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். வேறு வழியே இல்லை.

சரி, நில ஆர்ஜிதம் செய்யும் போது, அந்த இடத்தைக் காலி செய்துவிட்டுச் செல்லும்

மக்கள், தங்களிடமுள்ள அசையும் பொருள்களைக் கையோடு கொண்டு சென்று விடுவார்கள்; அசையாப் பொருள்களுக்குத்தான் அரசாங்கம் நஷ்டஈடு கொடுத்துவிடுமே எனலாம். உண்மைதான். ஆனாலும் நஷ்டஈடு மார்க்கெட் நிலவரப்படி கிடைக்காது. அரசு நிர்ணயிக்கும் அளவில்தான் கிடைக்கும். இந்த நஷ்டம் ஒருபுறம் இருக்க மேற்சொன்ன அத்தனையையும் உருவாக்குவதற்காக அந்த மக்கள் பல்லாண்டு காலம் உழைத்திருக்கிறார்களே, அந்த உழைப்புக்கும் நேரத்திற்கும் என்ன நஷ்டஈடு கொடுத்துவிட முடியும்?

ஒரு நல்ல காரியத்திற்காகச் சில இழப்புக்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று சிலர் சொல்லலாம். அதில் யாருக்குமே இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனாலும் நாம் எதிர்கொள்ள வேண்டிய இழப்பை, எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, அந்த அளவுக்குக் குறைக்க வழி செய்யலாம் அல்லவா! அப்படி இங்கும் செய்திருக்கலாம் என்பதுதான் நமது வாதம்.

இப்போது, கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக நில ஆர்ஜிதம் செய்யவுள்ள லத்திவாடி கிராமத்தைத் தொடர்ந்தே வருவது அணியாபுரம் என்னும் ஊர். இவ்வூருக்குள் நுழையும்போதே, ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் வெறும் வானம் பார்த்த பூமியாகக் கிடப்பதைப் பார்க்க முடிகிறது. இதில் கிணறு, குட்டை என்று எதுவுமே இல்லை. தூரம் என்னும் பிரச்னைக்கும் இடமில்லை. அதோடு இப்போது ஆர்ஜிதம் செய்யப்படவுள்ள இடத்திற்கு அரசு சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் நஷ்டஈடு தர வேண்டுமென்றால், இங்கு சுமார் ஐம்பது லட்ச ரூபாய் கொடுத்தாலே போதும். தண்ணீர்ப் பிரச்னை வர வாய்ப்பிருக்கிறது என்றும் சொல்ல முடியாது. காரணம், லத்திவாடி பகுதியில் கல்லூரி அமைந்தாலும், பக்கத்திலுள்ள மோகனூரிலிருந்து காவிரித் தண்ணீரைத்தான் குழாய் மூலம் கொண்டு வரப் போகிறார்கள். அதுவும் நாம் சொல்லும் அணியாபுரம் வழியாகத்தான் கொண்டு வரப் போகிறார்கள். அப்படியிருந்தும் அரசு ஏன் இந்த இடத்தில் ஆர்ஜிதம் செய்ய முன்வரவில்லை?

“அதுதான் சார் எங்களுக்கும் புரியவில்லை. நாங்களும் அதுபற்றிச் சம்பந்தப்பட்ட பலரிடமும் எடுத்துச் சொல்லிப் பார்த்து விட்டோம். ஒன்றும் பயனில்லை. இப்போதுதான் நாங்கள் ஒவ்வொருவரும் கடனை உடனை வாங்கிக் கிணறு வெட்டி, அதில் முழுப் பயனில்லாமல் கோழிப் பண்ணைகள் வைத்து... ஒரு வழியாகச் செட்டில் ஆகியிருக்கிறோம். இந்த நிலையில் நாங்கள் வேறு இடத்திற்குச் சென்று செட்டில் ஆக வேண்டுமானால் இன்னும் எத்தனை வருஷங்கள் பிடிக்குமோ யார் கண்டது? இதுமட்டுமல்ல; ஆர்ஜிதம் செய்யப் போவதாக இரண்டாண்டுகளுக்கு முன்பே அரசு அறிவித்திருந்தாலும் இதுவரை ஆர்ஜிதம் செய்யவில்லை. எப்போது ஆர்ஜிதம் செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. அதனால் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் மாதிரி, பயத்திலேயே ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டியிருக்கிறது. நிச்சயமற்ற தன்மை நிலவுவதால் மனம் எந்த வேலையையும் செய்ய ஒப்புக்கொள்ளாமல் தவிக்கிறது. கட்டப்பட்டுக் கொண்டிருந்த கோழிப் பண்ணைகளுக்கான சில ஷெட்டுகள் கூட இந்த ஆர்ஜித பயத்தால் பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டன....” என்றார்கள் சந்திரமௌலீஸ்வரன், தேவராஜன், குப்பன் ஆகிய மூவரும்.

இவர்கள் மட்டுமல்ல, நாம் சந்தித்த பலரும் இப்படித்தான் சொன்னார்கள். மக்களுக்கும் அரசுக்கும் ஏற்படும் ஏராளமான இழப்புகளை உணர்ந்த நிலையிலும் இந்த இடத்தில்தான் கால்நடை மருத்துவக் கல்லூரியும் ஆராய்ச்சி மையமும் அமைய வேண்டும் என்பதில் அரசு ஏன் பிடிவாதமாக இருக்கிறது? அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது!

இந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தை எம். ஜி. ஆர். அறிவித்தது அருணாசலத்தின் திருமணப் பரிசாகத்தான். எனவே, அது அருணாசலம் எம். எல். ஏ. வாக உள்ள நாமக்கல் தொகுதிக்குள்தான் வரவேண்டும். அப்போதுதான் அருணாசலத்திற்குக் கொடுத்த பரிசாக இருக்கும். ஆனால், அந்த மக்களும் நாமும் சுட்டிக்காட்டும் அணியாபுரத்திலுள்ள மாற்று இடம், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி எல்லை முடிந்து, கபிலர்மலை சட்டமன்றத் தொகுதி எல்லை ஆரம்பமாகும் இடத்தில் இருக்கிறது. இதுதான் காரணம்.

இப்படிப்பட்ட உப்புச் சப்பில்லாத ஒரு காரணத்துக்காக வளமான நிலப்பகுதிகள் பலியிடப்படவிருக்கின்றன.... ‘கேணியருகினிலே தென்னைமரம் சிற்றுமிளநீரும்; நல்ல முத்துச் சுடர்போலே நிலாவொளி முன்பு வரவேணும்; அங்கு கத்துங் குயிலோசை சற்றே வந்து காதிற்படவேணும்; என்றன் சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளந்தென்றல் வரவேணும்...’ (அட்டைப்படம் பார்க்க) என்று பராசக்தியிடம் பாரதி வேண்டினார் அல்லவா? அத்தகைய இயற்கைஎழில் கொஞ்சும் எத்தனையோ காணி நிலங்கள் இங்கே பலியாகப் போகின்றன. இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை.. அரசு பிடிவாதத்தைத் தளர்த்தி, மக்கள் நலனை மட்டும் மனத்தில் கொண்டு செயல்பட்டால் அந்தக் காணி நிலங்களைக் காப்பாற்றி விடலாம். சிரமமேயில்லை.

—இளங்கோவன்

மேலட்டை வண்ணப்படங்களும், சேலம் மாவட்டம் தொடர்பான மற்ற படங்களும் எடுத்தவர்:

கே. வி. ஆனந்த்

ஏப்ரல் 12

கல்கி

புத்தாண்டு
சிறப்பிதழ்


பாலகுமாரன்

எழுதும்

நிழல் யுத்தம்



புதுமைத் தொடர்




முகுந்தன்

எழுதும்

ஆபத்தான விளைவுகள்

சிரிக்கவைக்கும்
மர்மத் தொடர்

அதிக பக்கங்கள்; அதே விலை


ராணுவத் தாக்குதல்
எரிபொருள் சப்ளை தடை நீக்கம்
யாழ்-தமிழர்
செயற்கை மழை விமானம்
இப்படி பஸ் கட்டணத்தை ஏத்தினா இந்த மாதிரி பஸ் பயணம் தான் கட்டுபடியாகும்!
செயற்கை மழை



கல்கி

1987 மார்ச் 22
மலர் 45 இதழ் 34
அக்ஷய பங்குனி 8



இரட்டை அசுரர்கள்: 115 J; 194 E

ஏதோ தேர்த் திருவிழாவுக்கு மக்கள் கூடுவது போல பால்கிவாலாவின் பேச்சைக் கேட்கச் சென்னையில் அறிஞர் பெருமக்கள் 'ஜே ஜே' என்று கூடியிருந்தனர். அத்தனை பேரும் பொருளாதார நிபுணர்கள், வர்த்தகத் தொழில் அதிபர்கள், வழக்கறிஞர்கள்! இவர்களுக்கு ஏற்கெனவே தெரியாத எந்தப் புதிய விஷயத்தையும் பால்கிவாலா கூறிவிடவில்லை. ஆயினும் பெரும் திரளாக மாபெரும் மைதானம் கொள்ளாத அளவுக்குப் பல்லாயிரக்கணக்கில் வந்து கூடுவானேன் என்றால், பால்கிவாலா சுவாரஸ்யமாகப் பேசுவார் என்பதற்காக மட்டுமல்ல, அவர் வெளியிடுகிற கருத்துக்களில் தங்களுக்கும் பூரண உடன்பாடு உண்டு என்பதை உணர்த்துவதற்காகத்தான். இத்தனை அறிஞர் பெருமக்கள் ஒன்று கூடி ஒரே மூச்சாக எதிர்ப்பது எதை?

பட்ஜெட்டில் 115 J என்றும் 194 E என்றும் இரு புதிய அசுரச் சட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. இவைதாம் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகின்றன. முதலில் 115 J என்ற அசுரனைப் பார்ப்போம். ஒரு நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக நஷ்டமடைந்து இந்த ஆண்டு லாபம் காணத் தொடங்கி இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனாலும் கடந்த சில ஆண்டு நஷ்டங்களுக்கு இந்த லாபத்தை ஒதுக்கினால் வருடாந்தர வரவு செலவுக் கணக்கில் நஷ்டமே காட்டப்படும். 115 J என்ன சொல்கிறது என்றால் அந்த நிறுவனம் அந்த ஆண்டில் அடைந்த லாபத்தில் முப்பது சதவீதத்துக்கு வருமான வரி செலுத்தட்டும் என்கிறது. ஒட்டு மொத்த நஷ்டம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இப்படி நஷ்டத்துக்கு வரி விதிக்கும் புதிய தத்துவத்துக்கு அரசு கூறும் காரணம் என்ன? 'நீங்கள் புதிய இயந்திரங்கள் நிறுவி 'முதலீடு சலுகை' என்றும் 'தேய்மானக் கழிவு' என்றும் சலுகைகள் பெறவில்லையா? அதனால் இந்த வரி விதிப்பதில் தவறில்லை' என்று வாதாடுகிறது. ஆனால் தொழில் சமூகம் என்ன சொல்கிறது என்றால், 'நாட்டின் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புப் பெருக்கம், பொருளாதார மேம்பாடு ஆகியன துரிதமடைய வேண்டும் என்பதற்காக இந்தச் சலுகைகளை அரசு தானாகவே முன்வந்து எங்களுக்குத் தந்தது. இப்படிச் சலுகை தந்துவிட்டு, அதன் மீது வரி விதிப்பது என்ன நியாயம்? அது அரசின் அடிப்படை நோக்கங்களுக்கே முரணானது இல்லையா?' என்று கேட்கிறது.

115 J—ஐ விடக் கொடுமையானது 194 E. இதன்படி எந்த நிறுவனம் யாருக்குப் பணம் கொடுத்தாலும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகத் தந்தால் அதில் ஐந்து சதவீதம் வரி பிடித்து அரசுக்குக் கட்டிவிட வேண்டும். பாக்கியைத்தான் தர வேண்டும். வரி என்பது லாபத்தின் பேரில்தான் விதிக்கப்பட வேண்டுமே தவிர, வருவாயில் அல்ல என்பது அடிப்படைத் தத்துவம். வருவாயிலிருந்து செலவினங்களைக் கழித்த பிறகு வருடக் கடைசியில்தான் லாபத்தைக் கணிக்க முடியும். எனவே, இந்த வரி அரசியல் சாசனம் அளிக்கிற அடிப்படை உரிமைகளுக்கே விரோதமானது. அது மட்டுமல்ல, இந்திரா காந்தி காலத்தில் ஒருமுறை விதிக்கப்பட்டு, காரிய சாத்தியமற்ற விஷயம் என்று கைவிடப்பட்டதும் கூட! பல வியாபாரிகள் மூன்று அல்லது நாலு சதம் லாபத்துக்குக் கூடப் பொருள்களைப் (உதாரணமாகப் பஞ்சு) பல சமயங்களில் விற்க நேரும். அவர்களிடமிருந்து ஐந்து சதத்தைப் பறித்துக் கொண்டால் வருஷக் கடைசியில் கணக்குக் காட்டி அரசிடமிருந்து தங்களுக்குச் சேர வேண்டியதை அவர்கள் திரும்பப் பெறுவதென்பது பிரும்மப் பிரயத்தனம்தான்!

'வரி முறைகளை எளிமையாக்குவது; வரி ஏய்ப்புக்கு அவசியமில்லாத வகையில் வரிகளைக் குறைப்பது; தொழில்—பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விதத்தில், தொழில்—பொருளாதாரக் கொள்கைகளைத் திருத்தி அமைப்பது போன்ற பிரதமரின் உயர்ந்த கொள்கைகளுக்கு முரணானவை உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வரிகள்' என்று எடுத்துக் காட்டினார் பால்கிவாலா. 'அதிகாரிகள் இந்த வரிகளின் பின்விளைவுகளை பிரதமருக்கு விளக்கிச் சொல்லியிருந்தால் பிரதமர் இதற்குச் சம்மதித்திருக்க மாட்டார்' என்று பிரதமரை நல்லவராக்கி அதிகாரிகள் மீது பழியைப் போட்டார். பால்கிவாலா, பிரதமரைத் தாஜா செய்ய இப்படி கூறலாம். ஆனால் அதிகாரிகள் மீது பழியைப் போட்டுவிட்டு ஒரு பிரதமர் தப்ப முடியாது. பின்விளைவுகளைச் சிந்திக்காமல் அல்லது கேட்டறியாமல் ஒரு வரியை விதித்தது பிரதமரின் தவறே. நல்லவேளை, சட்டமாவதற்கு முன்பே 194 E பற்றியேனும் மறுபரிசீலனை செய்வதாக இப்போது கூறியுள்ளார் பிரதமர். அந்த மட்டில் மகிழ்ச்சி.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

சேலம் ஒரு ரவுண்ட்-அப்

* சேலம் பஸ் ஸ்டாண்ட்



★☆ "டேய்.... வண்டியை எடுக்கறயா, இல்லையா?"

"முடியாது போய்யா...எங்கே வேணும்னு லும் போய்ச் சொல்லிக்கோ...."

"அஞ்சு மணிக்கு எடுக்க வேண்டிய நீ இப்படி வழியை மறிச்சு நிறுத்தினால் நாங்க என்னடா பண்ணுவோம்?

"நான் எடுக்கிறபோதுதான் எடுப்பேன்."

— இப்படித் தொடர்ந்து அரை மணி நேரம் வாக்குவாதம்; அச்சிட முடியாத வார்த்தைகள். 'காலைக் குளிரைச் சுகமாக அனுபவித்தபடி, சேலம் ஜங்ஷனை விட்டு வெளியில் வந்து டவுனுக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த போதுதான் இந்த அனுபவம்! எரிச்சல் அடைந்து பஸ்ஸை விட்டு இறங்கி வெளியில் வந்து பார்த்தால், சம்பந்தப்பட்ட இரண்டு பஸ்களின் டிரைவர்களும், கண்டக்டர்களும்தான் இப்படிக் கைகலப்பில் இறங்காத குறையாக ஒருவருக்கொருவர் வசைமாரி பொழிந்து கொண்டிருந்தார்கள். அதனால் சகல பயணிகளுக்கும் அரைமணிக்கு மேல் லேட்! ஒரு போலீஸ்காரரை நிற்க வைத்து பஸ்களையெல்லாம் அதனதன் நேரத்திற்குச் செல்லும்படி செய்தால் அநாவசிய மோதல்களையும் காலதாமதங்களையும் தவிர்க்கலாமே!

★☆ "ஆட்டோ!"

"எங்கே ஸார்?"

"செவ்வாய்ப்பேட்டை."

"பதினைந்து ரூபாய் குடுங்க!"

"என்னங்க... பதினைந்து ரூபாயா?" — மீட்டர் போடும் வழக்கம் சென்னையைத் தவிர தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளில் இல்லை என்பது நமக்குத் தெரிந்த விஷயம்தான், என்றாலும் டிரைவரின் வாயைக் கிளறினோம்.


"ஆமாங்க... மூன்று பேர் இருக்கீங்களே..."

"என்னது?"

"ஆமாங்க எக்ஸ்ட்ராவா ஒருத்தர் இருக்கீங்கல்ல...."

"ஆட்டோவில் மூணு பேர் போகலாம்னு அரசாங்கமே அனுமதி கொடுத்திருக்குங்க..."


"அதெல்லாம் எங்களுக்குத் தெரியாதுங்க. இங்கல்லாம் மூணு பேர் போனா, எக்ஸ்ட்ராவாகத்தான் கணக்கெடுத்துக்குவோம்...." — இந்தக் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது?



* பெரியசாமி



* கோவிந்தசாமி



* புது பஸ் ஸ்டாண்டுக்கு அடிக்கல் நாட்டப்பட்ட இடம்

★☆ சேலம் பஸ் ஸ்டாண்ட் என்பது, குழப்பத்தின் மறு பெயர். இட நெருக்கடி மட்டுமல்ல; காட்டூர் பஸ்ஸுக்காகக் கால் கடுக்க, அரை மணி நேரம் நின்றுவிட்டு, பஸ் வராமல் போகவே, ஒரு நடத்துனரை விசாரித்தபோது, 'காட்டூர் பஸ்ஸா? அது அங்கேங்க...' என்று இன்னொர் இடத்தைக் காட்டினார்.

"என்னங்க இங்கேதாங்க வரும்னு


போர்டு போட்டிருக்கு....'' என்று கேட்ட போது, ''நீங்க காட்டூருக்குப் போவணும்னு அங்கேதாங்க போவணும். சும்மா ராவடி பண்ணிக்கிட்டிருக்கிறதானு இங்கியே நில்லுங்க....'' என்றார் அந்தக் கண்டக்டர். அப்படியொரு குழப்பம். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் கதியே இப்படியென்றால்

* கலெக்டர் பங்களாவுக்குள் சாலே கேட்கிறார்கள்...



பாமர ஜனங்களைப் பற்றிக் கேட்பானேன்!

இக்குழப்பங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கத்தான் கடந்த 1984—ம் ஆண்டு புது பஸ் ஸ்டாண்டுக்காக ஒரு விஸ்தீரணமான இடத்தில் அடிக்கல் நாட்டினார்கள். ஆயினும் அது இன்னும் சேலத்துக்காரர்களுக்கு ஒரு கனவாகவேதான் இருந்து வருகிறது. காரணம்சேலம்முனிசிபாலிடிக்கும்அண்ணா போக்குவரத்துக் கழகத்துக்கும் இடையில் உள்ள தகராறுதான். 'பஸ் ஸ்டாண்டை நாங்கள்தான் நிர்வகிப்போம்' என்கிறது நக



* தண்ணீர் இருக்கும் கம்பா ஆழ்துளைக் கிணறு

ராட்சி. (இப்போது தி.மு.க. தலைவர்). 'நோ... நோ... எங்க கையில்தான் கொடுக்கணும்' என்கிறது அண்ணா போக்குவரத்துக் கழகம். தமிழகத்தின் மற்ற நகரங்களில் நகராட்சிதானே பஸ் ஸ்டாண்டுகளை நிர்வகித்து வருகிறது. இங்கேயும் அப்படிக் கொடுத்துவிட்டுப் போனால் என்ன?

★☆ உங்கள் மாவட்டத்தில் இரண்டு மந்திரிகள் இருக்கிறார்களே. அவர்களைக் கொண்டு, நிறைய நல்ல காரியங்களைச் செய்யலாமே!' என்று சேலத்துவாசிகளைக் கேட்டால், ''இரண்டுமந்திரிகள் இருப்பதுதாங்கபிரச்னையே. இவங்க இல்லேன்னா காரியம் சீக்கிரம் நடந்திருக்கும்'' என்கிறார்கள். அப்படியொரு கோஷ்டி மனப்பான்மை!

★☆ ''வாங்க மிஸ்டர் சுரேஷ்....''

''என்னங்க ஸார். சுப்ரீம் கோர்ட் வரை போய்க் கூட எங்க பிரச்னை தீரலீங்களே...!''

''ஓகோ... அண்ணா போக்குவரத்துக் கழக ஒர்க்ஷாப்பால ஏற்படற பாதிப்பைச் சொல்றீங்களா?''

''வேறே என்னங்க ஸார்? எங்க தலையெழுத்து... இது என்ன மாதிரி ஏரியா..., ராஜாஜி காலத்துல அற்புதமான 'லே—அவுட்' போட்டு உருவான குடியிருப்பு இடம்ங்க இது. இந்த இடத்தில் ஒர்க்ஷாப்பை வைத்து, டயர் ரீட்ரெடிங் செய்யறாங்க. அந்தப் புகையைத் தாங்கவே முடியாது. பெட்ரோலியக் கழிவுகளையும் சாக்கடையிலேயே கலந்திடறாங்க. இங்கே எல்லாம் திறந்த வெளிச் சாக்கடையா இருக்கிறதாலே அங்கங்கே அந்தப் பெட்ரோலியக் கழிவுகள் தேங்கி, சுற்று வட்டாரத்தில் உள்ள கிணறுகளில் இறங்கி விடுகிறது. அதனால் கிணற்றுத் தண்ணீரையும் உபயோகிக்க முடியறதில்லீங்க.... எங்கே தான் போய் முட்டிக்கிறது? மாசுக் கட்டுப்பாடு அதிகாரிகளிடம் சொன்னாக்க, அவுங்க வரும்போது மட்டும் அந்த ஒர்க்ஷாப்பை இயக்காம விட்டுடறாங்க, வர்றவங்களும், ஒண்ணும் நடக்கறதில்லையேன்னு போயிடறாங்க...'' — எரிச்சலோடு பொரிந்து தள்ளுகிறார் சுரேஷ்.



* சின்னசாமி



* தங்கவேலு

★☆ சேலம்—ஏற்காடு ரோடு. கலெக்டர் பங்களாவுக்குப் பின்புறம் இருக்கிறது, மாவட்ட ஆட்சித்தலைவர் மாளிகை வளாகக் குடியிருப்பு. வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு தான் இது. இங்கே குடியிருப்பவர்களுக்கு ஒரு மாபெரும் பிரச்னை, மெயின் ரோடுக்குச் செல்லும் பாதைதான். வனத்துறை அலுவலகத்துக்கும் ஜெயிலுக்கும் இடையில் உள்ள பாதை வழியாகத்தான் இப்போது



* கிருஷ்ணமூர்த்தி

மெயின் ரோடுக்கு வருகிறார்கள். இந்தப் பாதையில் இரவு ஏழு மணிக்கு மேல் வருவது என்பது தைரியத்துக்கு ஒரு சோதனை. வனத்துறை சந்தன மரங்களை அடுக்கி உள்ளதால் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் பாம்புகள். இந்நிலையில் வழக்கம்போல இங்கும் தெரு விளக்கு எரியாது. என்னதான் செய்வது? அதனால் நெடுநாட்களாகத் தொடர்ந்து, ஒரு மாற்றுப் பாதை கேட்கிறார்கள் இவர்கள். அந்த மாற்றுப் பாதை அமைய வேண்டுமென்றால் கலெக்டர் தமது பங்களாவை ஒட்டி இருக்கும் காலி இடத்தைக் கொஞ்சம் இழக்க வேண்டியிருக்கும். அதனால் சிக்கல்!

''எங்களுக்குப் பாதை விட்ட பிறகும் கலெக்டருக்கு நிறைய இடம் இருக்குங்க...'' என்று சொல்கிறார்கள் அந்தக் குடியிருப்பு மக்கள். நாங்கள் பார்த்தபோது, எங்களுக்கும் அது புரிந்தது. கலெக்டருக்கும் தெரியாமலிருக்குமா? தெரிந்துதான் இருக்கும். ஆயினும் அனுமதி கொடுப்பதில் என்ன சிரமம் என்றுதான் தெரியவில்லை.

★☆ சேலம்—பெங்களூர் பைபாஸ் சாலையில் சுமார் ஐந்து ஏக்கர் அளவுக்கு வைத்திருக்கும், கந்தம்பட்டியிலுள்ள சில சிறு விவசாயிகளின் பிரச்னை வித்தியாசமானது. மூன்று போகம் விளையும் அவர்களது நிலத்தைக் கையகப்படுத்த இருக்கிறது வீட்டு வசதி வாரியம். மொத்தம் முப்பத்தொன்பது ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த இருக்கிறார்களாம்.

பாதிக்கப்பட்ட எல்லோரும் ஆட்சேபணை தெரிவித்து இருந்தபோதும், குறிப்பிட்ட இரண்டு நபர்களின் (சொல்லாமலே புரியுமே!) ஆட்சேபணைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு, அவர்களின் நிலத்தை மட்டும் விட்டு விட்டு, மற்றதையெல்லாம் எடுத்துக் கொள்ளப் போகிறதாம் வீ.வசதி வாரியம்! ''வீடில்லாமல் இருப்பவர்களுக்கு வீடு கட்டித் தருவதுதான் வாரியத்தின் பணி. இங்கே கையகப்படுத்தும் இடத்தில் முப்பத்தைந்து வீடுகள் இருக்கின்றன. இதையெல்லாம் இடித்துவிட்டு, வாரியம் வீடு கட்டப் போகிறதாம். இருக்கும் வீட்டை இடித்து விட்டு இன்னொருவீடாம்... இதென்ன சார்நியாயம்? என்று கேட்கிறார்கள் அப்பகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமியும் பெரியசாமியும்.

★☆ கர்நாடகாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் இருக்கும் காவிரி, நீர்ப் பிரச்னை ஜகப்பிரசித்தி என்றால், சேலம் நகரை ஒட்டியுள்ள தாதம்பட்டி பஞ்சாயத்துக்கும் வடக்கு அம்மாபேட்டை பஞ்சாயத்துக்கும் இடையே உள்ள குடிநீர்ப் பிரச்னை அந்தப் பகுதியில் படு பிரசித்தி. அற்புதமான குழாய்க் கிணறு. வற்றாத தண்ணீர். இந்தக் குழாய்க் கிணறு தாதம்பட்டி பஞ்சாயத்துக்குள் இருந்தாலும், ரெகார்டுபடி வ. அம்மாபேட்டை பஞ்சாயத்துக்குள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால்வ. அம்மாபேட்டைக்கு இந்தக் குழாய்க் கிணறு மூலம் இரண்டு குழாய்கள் போடப்பட்டுத் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டுவந்தது. திடீரென்றுவ. அம்மாபேட்டை தலைவர் இன்னும் சில குழாய்களைப் போடத் தீர்மானித்தபோதுதான் பிரச்னை ஆரம்பமானது. தகராறு காரணமாய் கிணறு சும்மாவே கிடக்கிறது!


அப்படிப் போட்டால் தங்களுக்குத் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாகிவிடும். தங்கள் பஞ்சாயத்துக்குள்தான் கிணறே இருக்கிறது; தாங்களேதான் அந்தக் குழாய்க் கிணறு, மோட்டார்... என்று எல்லாவற்றையும் பராமரித்து வருவதால், அதிலிருந்து வடக்கு அம்மாப்பேட்டைக்குத் தண்ணீர் தர வேண்டியதில்லை என்கிறார் தி.மு.க.வைச் சேர்ந்த வார்டு உறுப்பினர் சின்னசாமி.

வடக்கு அம்மாப்பேட்டை பஞ்சாயத்துத் தலைவர் தங்கவேலைச் சந்தித்தோம். ''இது கூட்டுக்குடி நீர்த் திட்டத்தின் மூலம் தோண்டப்பட்ட கிணறு. எனவே அதை அனைவரும் தான் பயன்படுத்த வேண்டும். பராமரிப்புச் செலவுகளை ஏற்றுக் கொள்ளவும் தயாராய் இருக்கிறோம். இதற்கு அவர்கள்தான் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும்?'' என்றார் அவர்.

இவர்கள் தகராறு காரணமாக தண்ணீர் இருந்தும், இந்தப் பஞ்சக் காலத்தில் அந்தக் கிணறு பயன்படுத்தப்படாமல் கிடப்பது தான் வேதனை!

★☆ கடைசியில் மனத்துக்குச் சந்தோஷம் அளிக்கக் கூடிய ஒரு விஷயத்துக்கு வருவோமா? இந்தக் காலத்தில் அவனவன் சகட்டு மேனிக்குக் காடுகளிலும் சாலைகளிலும் இருக்கும் மரங்களையெல்லாம் வெட்டி, இயற்கையையே மாற்றிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், மரங்களை நேசிப்பதற்கும், வைத்துக் காப்பாற்றுவதற்கும் சேலத்தில் ஒரு சங்கம் இருக்கிறதென்பது சந்தோஷமானதுதானே! இதற்குத் தலைவர் மாவட்டக் கலெக்டர். சாரதா கல்லூரிச் சாலையில் இருக்கும் கிருஷ்ணமூர்த்தியின் முயற்சியில் உருவான இந்த **Tree Club** இதுவரை 1500க்கும் மேற்பட்ட மரங்களை நட்டிருக்கிறது. ''பெங்களூரிலுள்ள மரங்களடர்ந்த அழகான சாலைகளைப் பார்த்து, 'சேலத்திலும் இதுபோல் சாலைகளை அழகுபடுத்தலாமே என்ற எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்தக் கிளப்...'' என்று சொல்கிறார் கிருஷ்ணமூர்த்தி. சேலத்தைப் பசுமையாக்குவதுதான் இந்தக் கிளப்பின் ஒரே குறிக்கோள். வரவேற்கப்பட வேண்டியது மட்டுமல்ல; மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டிய விஷயமுமல்லவா இது!

— கௌசல்யா



விஜயா — ரவி பிரகாஷ்

பெங்களூர், கல்கி பிரதிநிதியும் பாரதீய வித்யா பவன் கௌரவக் காரியதரிசியும் ஹிந்து ஏஜெண்டுமான திரு எஸ். ஆர். வேங்கடாசலம் அவர்களின் அருமைக் குமாரி செல்வி விஜயாவுக்கும், பெங்களூர் ஐ.டி.ஸி. நிறுவனத்தின் உயர் அதிகாரி திரு எஸ். நாராயணன் அவர்களின் குமாரன் செல்வன் ரவி பிரகாஷுக்கும் கடந்த பிப்ரவரி 25—ம் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. காலை முகூர்த்தத்தின் போதும், மாலை வரவேற்பு வைபவத்துக்கும் பெங்களூர் பிரமுகர்கள் மட்டுமின்றி சென்னையிலிருந்தும் ஸ்ரீ சதாசிவம்—ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி தம்பதி உள்பட ஏராளமான நண்பர்கள் வந்திருந்து சிறப்பித்தனர். வரவேற்பினையொட்டி செம்மங்குடி ஸ்ரீ சீனிவாச அய்யரின் இசைக் கச்சேரி அற்புதமாக அமைந்தது. மணமக்களை வாழ்த்தவும் இசையை நுகரவும் கர்நாடகா மாநில முதல்வர் திரு ஹெக்டே உள்படப்பல அரசியல்தலைவர்கள், வர்த்தகப்பிரமுகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் முதலிய பல துறையினரும் வந்திருந்து மகிழ்ந்தனர்.

வாழ்க மணமக்கள்!

சிரிப்பிலும் ஒரு சோகம்...

* அட்டைப் படத்தில், என்னதான் பர்னுலா சிரித்தாலும், அந்தச் சிரிப்பில் ஒரு சோகம் இழையோடுவது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

பட்டிவீரன்பட்டி. கண்ணம்மா.

* 'பஞ்சாப் பாமர மக்களின் பலி பீடம்' என்று கட்டுரையில் தீவிரவாதிகளுக்கும் ஏமாற்றுக்கார மத குருமார்களுக்கும் இடையே மாட்டிக் கொண்டு பாமரர்கள் படுகின்ற அவஸ்தையைப் படம் பிடித்துக் காட்டி விட்டீர்கள்.

சிறுவாலக்காடு. எஸ். சுப்பிரமணியன்.

* பாரதி சிலை கோல்பிடித்திருப்பதால் வட நாட்டவர் அவரைக் கிழவர் என்று கூறக் கூடும் என்று 22.2.87 இதழில் 'நாலாவது தமிழர்' கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கோல் கைக் கொண்டு வாழ்' என்று உபதேசித்த பாரதியார், கையில் கோல் வைத்திருந்ததுண்டு. ஆனால், அரசனின் செங்கோல் போன்று உயர்த்திப் பிடித்திருப்பாரே தவிர, பூமியில் ஊன்றி இருக்க மாட்டார். தமிழக அரசு நிறுவியுள்ள சிலை இவ்வாறு இல்லாதது வருந்துதற்குரியதே!

திருவண்ணாமலை.
முருகபாரதி க. பகவத்சிங்.

* ரயில்வே பட்ஜெட் பற்றிய தலையங்கத்தில், தாங்கள் எடுத்துக் கூறிய உற்பத்திக்கு உதவாத அரசாங்கத்தின் அனாவசியச் செலவினங்கள் குறைய வேண்டும் என்ற கருத்தினையே, பட்ஜெட் பற்றிய தனது கருத்தாகவும், முன்னாள் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் தெரிவித்திருப்பதைக் கவனித்தீர்களா?

சென்னை—15. சைதை. வி. முரளி.

* முன்பு ஒருமுறை கண்டலைப் பற்றியும், அப்புறம் ஊறுகாயைப் பற்றியும் பதில் அளித்த தராசு, இப்போது நெல் மற்றும் டால்டாவைப் பற்றி, மைசூர்ப் பாகு மணத்தோடு பதில் அளித்துவிட்டார்! அடுத்த 'அயிட்டம்' என்னவோ? (ஹலோ, தராசு சார்.... இனி, பசியோடு உட்கார்ந்து பதில் எழுதாமல் நன்றாகச் சாப்பிட்டுவிட்டுப் பின்னர் பதில் எழுதவும்!)

நந்தியநல்லூர். நிலாப்ரியன்.

* கல்கி 22.2.87 இதழில் 'நெல்லைப் பெயர் மாற்றம் சரிதானா?' என்ற கேள்வியுடன் மூன்று பிரமுகர்களைப் பேட்டி கண்டு எழுதியிருக்கிறீர்கள். வழக்கமாக, நடுநிலை தவறாத கல்கி, நெல்லை மாவட்டப் பெயர் மாற்றம் கோரி அதற்காகப் போராடிய நெல்லைச் சீமையின் ஒரு பகுதி மக்கள் சார்பில் ஒருவரைக் கூடப் பேட்டி காணாமல் ஒருதலைப் பட்சமாக எழுதலாமா? இந்தப் பெயர் மாற்றம் தேவையில்லை என்று இவர்கள் கூறுவதற்குப் பெற்றுள்ள உரிமையே போராடித்தான் பெறப்பட்டது என்பதையும் அந்தப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவனே கட்டபொம்மன்தான் என்பதையும் மறக்கலாமா?

சென்னை—55. என். சீனிவாசன்.

* அ.தி.மு.க.வுக்கு ஓட்டு போடுபவர்களுக்கெல்லாம் ஆளுக்கொரு இலவச மொப்பெட் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வருமானால், மூடு விழாக் காணக் காத்திருக்கும் 'மயூரம் மொப்பெட்' நிறுவனம் களை கட்டும். இப்படித்தான் தமிழகத்திலுள்ள அரசுத் துறை நிறுவனங்கள் லாபகரமாக நடக்க முடியும்.

தோப்புத்துறை. ஹெச்.கே. நாசர்.

* என்கொயரி என்ற பெயரில் நடத்தப்படும் கேலிக் கூத்தினை க. சமுத்திரம் நன்றாகவே கிண்டல் செய்திருக்கிறார். 'நீதி (இல்லாத) விசாரணை' கதையில்!

சென்னை—28. எம். தியாகராஜன்.

* தராசு கேள்வி பதிலில் (1.3.87 இதழ்) 'கிங் சாலமன்ஸ் மைன்ஸ்' திரைப்படத்தின் மூலக் கதையை எழுதியவர், 'டார்ஜான் கதைகளை எழுதிய ரைடர் ஹகார்ட்ஸ்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டார்ஜான் கதைகளை எழுதியவர்: 'எட்கார் ரைஸ் பர்ரோஸ்.' இரு எழுத்தாளர்களுமே ஆப்பிரிக்காவை மையமாக வைத்து எழுதினர்.

சென்னை—18. கே.ஆர். சேஷாத்திரி.

* அட்டைப் படத்திற்குக் கவிதைகள் இயற்றிய அந்த மூவரின் கைகளையும் எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. என் இதயமெனும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே குடி கொண்டு விட்டன அவை.

திருச்சி—30. ராஜேந்தர்பிரியன்.


* 'மாதம் ஒரு மாவட்டம்' பகுதியில் முதல் மாவட்டமாக எங்கள் மதுரை தேர்ந்தெடுக்கப்பட்டு, எங்கள் கலெக்டரிடம் பேசும்போது மதுரை மாநகரில் ஆட்டோக்களில் முறைப்படி மீட்டர் கட்டணம் வசூலிப்பதில்லை எனக் கூறினீர்கள். நடவடிக்கை எடுப்பதாகக் கடந்த ஆண்டு கலெக்டர் கூறியிருந்தார். அதன்படி, இந்த பிப்ரவரி 15 முதல், மதுரை ஆட்டோக்களில் முறைப்படி மீட்டர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உங்கள் பணியால் எங்களுக்குக் கிடைத்த மற்றொரு வசதி இது என்பதில் பெருமை அடைகிறார்கள் மதுரை மாநகர மக்கள்.

மதுரை—1. எம். ஆனந்த்குமார்.

* நெடுமாறன் தமது பேட்டியில் கூறியிருப்பதுபோல் (கல்கி 8.2.87) மதுரை திருக்கோயில் ரிஷப வாகனம், உலகத் தமிழ் மாநாடு நடந்த சமயம் எடுத்துச் செல்லப்படவில்லை. மற்ற வாகனங்களோடு ஒப்பிட, அதிக நாள் உலா வருவது ரிஷப வாகனமே. அதனால் தளர்வு ஏற்பட்டது. அசைவுகளால் விழாக் காலத்தில் அசம்பாவிதம் நிகழாதிருக்க, உலா வருவது நிறுத்தப்பட்டு, மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

மதுரை. எஸ். ராஜரத்தினம்,
அர்ச்சகர், மீனாட்சி திருக்கோயில்.





க்ரீம் வளம்கொழிக்கும் அமுல் பால். நலம் தரும் மால்ட். இன்சுவைமிக்க கோக்கோ. ஆம்மாதும்! இவற்றின் நற்பயனுகத் தான் வலிவூட்டுகிறது நியூட்ராமுல். எதனுலும் மிஞ்சமுடியாத நயவிலையிலே கிடைக்கிறது!

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ராமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.



நியூட்ரமுல்

விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக

விற்பனைதல் விற்பனை:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிட்.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/135/86 TAM

21

சின்னச் சின்ன

நந்தகுமார் மீன் போல் நெளிந்தான். மாயகிருஷ்ணனின் பாரத்தில் மூச்சுத் திணறியது. மாயகிருஷ்ணனுக்கு வெகு பின்னால், ராட்சஸப் பட்டாசுகள் வெடித்து, அக்னியின் நாக்குகள் வானத்தை நோக்கி நீண்டு நீண்டு துழாவின. அந்த நெருப்பில், அதன் ஆவேசப் பசியில் பாண்டியன் சிக்கிக் கொண்டிருந்தது அவன் நெஞ்சில் உறைக்க, நந்தகுமார் பதறி, எழுந்திருக்க முயற்சி செய்தான். எந்நேரமும் தன்னைக்கூட அந்த நெருப்பில் எறிந்துவிட இந்த முரடன் முடிவு செய்யலாம் என்று பயந்தான்.

'தப்பித்து ஓடு, தப்பித்து ஓடு' என்று இருதயம் அலறியது.

மாயகிருஷ்ணனின் கருட்டு நாற்ற மூச்சு அவன் முகத்தில் வீசியது. சட்டென்று வாயைத் திறந்தான். அவருடைய கன்னச் சதையைப் பலங்கொண்ட மட்டும் பற்களால் கவ்விக் கடித்தான். அதே நேரம் சுதந்திரமாகிவிட்ட தன் கைகளால் அவர் கண்களைப் பிறாண்ட ஆரம்பித்தான்.

மாயகிருஷ்ணன் உதறிக் கொண்டு விலக, நந்தகுமார் சரேலென்று எழுந்தான். காடாய் மண்டிக் கிடந்த புதர்களுக்குள் பாய்ந்தான். அம்புக்குத் தப்பிய முயல் போல ஓட ஆரம்பித்தான்.

"மொதலாளி... என்ன ஆச்சு?" பதற்றமான குரல் அருகில் கேட்டது.

சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். மாசிலாமணி! வெடிகுண்டு அறையில் வேலை செய்பவன்.

"அந்தப் புதருக்குள்ளாற புகுந்து ஒரு பையன் ஓடுறான், பாரு... மொதல்ல அவனைப் பிடிடா... ஓடு..."

மண்ணெண்ணெய் ஊற்றப்பட்ட எறும்புப் புற்று போல ஃபாக்டரி முழுக்கக் கலைந்தது. குச்சிகளை அடுக்கும் பெண்கள் யாவற்றையும் இறைத்துக் கொண்டு, தத்தம் குழந்தைகளை அவசரமாய்த் தேடி அள்ளிக் கொண்டு வாசல்புறம் ஓடினார்கள். சிறுவர், சிறுமியரை ஒரு சூபர்வைசர் ஆடுகளைப் போல் விரட்டி அனுப்பினார். ஆண்கள் ஆர்வமும், பயமும் சரி விகிதத்தில் கலந்து தோட்டத்துப் பக்கம் விரைந்தார்கள்.

நெருப்பு மஞ்சளும் சிவப்புமாய் உருண்டு கிளம்ப, கறுப்பு நுரை போலப் புகை மண்டி, எழும்பி, பரவிக் கலைந்தது.

"தண்ணி கொண்டாங்க... தண்ணி கொண்டாங்க..."

"ஃபயர் ஆபிஸுக்கு போன் பண்ணிட்டாங்களாப்பா?"

"உள்ளே ஆளுங்க, யாரோ மாட்டிட்டிருக்காங்கப்பா..."

"ரெண்டு பேராம்! முத்துவும், இன்னொருத்தர் யாரு தெரியலையே?"

"பாண்டியன்பா. நம்ம சூப்ர்வைசரு பாண்டியன்!"

"நம்ப பாண்டி அண்ணனா மாட்டிக்கிட்டாரு?"

"நம்ப பாண்டி அண்ணனா மாட்டிக்கிட்டாரு?"

அந்தத் தலைப்புச் செய்தி காற்றைப் போல் பரவியது.

வாசலில் ஙிய்ங் ஙிய்ங் என்று போலீஸ் சைரன்கள். காண்டாமணி ஓசையோடு தீயணைப்பு வண்டிகள். பூட்ஸ்களின் தடதட சத்தம்.

அந்த அறையில் என்னென்னவோ வெடித்தது. அந்த வெடிப்பினால் ஏற்பட்ட சிதறலில் ஒரு மனிதக்கை அறையிலிருந்து வீசப்பட்டுக் கூட்டத்தின் மேல் வந்து விழ, கூட்டம் பதறிச் சிதறியது. சற்றுத் தள்ளி நின்று மறுபடி வேடிக்கை பார்த்தது.

சைக்கிளை அப்படியே வாசலில் சரித்துவிட்டுத் தங்கராஜ் ஓடிவந்தான். கூட்டத்தைப் பிளந்து முன்னேறினான்.

தீயணைப்பு லாரியிலிருந்து தண்ணீர் அருவி போல் சீறிக் கொண்டிருந்தது. முகத்தை மூடிய ஹெல்மெட்டுகளுடன் தீயணைப்பு ஊழியர்கள் சிலர் அந்த ரூமுக்குள் நுழைந்தார்கள்.

தங்கராஜ் படபடக்கும் இதயத்தோடு வெறித்தான்.

ஐயோ, பாண்டியனாய் இருக்கக் கூடாதே!

ஓர் ஊழியர் இரண்டு கைகளுக்குமாக ஓர் உடலை அவசரம் அவசரமாகத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடிவந்ததை, கூட்டம் மொத்தமும் மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்த்தது.

"பாண்டியன்தாண்ணே... நம்ப பாண்டியன்தாண்ணே..."

தங்கராஜ் தள்ளாடி ஓரடி எடுத்து முன் வைத்தான்.

பாண்டியன் பாதி எறிந்த விறகுக்கட்டை போல் இருந்தான். அவனுடைய திறந்திருந்த விழிகள், பொசுங்கிவிட்ட சுருட்டை முடி, நாற்றம் கலந்த மெலிதான உஷ்ணம்...

"பாண்டி அண்ணே..." தங்கராஜின் அலறல் சூரியன் வரை போய் எதிரொலித்தது.

"நீங்கதான் ஃபாக்டரி ஓனரா?"

காக்கி உடுப்புப் போட்ட அதிகாரி, கழியை உள்ளங்கையில் தட்டிக் கொண்டே துருவும் குரலில் கேட்டார்.

"ஆமா..."

மாயகிருஷ்ணன் நாற்காலியை இறுகப் பற்றிக் கொண்டு பதில் சொன்னார்.

"எப்படித் திடீர்னு இந்தத் தீவிபத்து நடந்தது, மிஸ்டர் மாயகிருஷ்ணன்?" அதிகாரி

கனவுகள்

கண்களைச் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

''எப்படின்னு என்னைக் கேட்டா?'' மாயகிருஷ்ணன் சாமர்த்தியமாக ஒரு விரக்திப் புன்னகையை அணிந்து கொண்டார். ''திமிர்னு நடக்கறதுக்குப் பேருதானே விபத்து?''

''அந்த ரூம்ல என்ன இருந்தது, சொல்லீங்களா?''

''சில கெமிக்கல் பொருளுங்க...''

''வெடிகுண்டு தயார் பண்ற கெமிக்கலா?''

மாயகிருஷ்ணன் அடிபட்டவர் போல நிமிர்ந்து பார்த்தார். ''வெடிகுண்டா! இது தீப்பெட்டித் தொழிற்சாலைங்க... லைசென்ஸ் வாங்கியிருக்கேன். எங்க மாட்ச் பாக்ஸ் அஸ்ஸாம் வரைக்கும் போவுது. என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்டீங்களே...''


''நீங்க சட்டவிரோதமா வெடிகுண்டு தயார் பண்றதா, எங்களுக்குத் தகவல் வந்திருக்கு மாயகிருஷ்ணன்... ஃபாக்டரியை செக் பண்ணத்தான் நாங்க வந்தோம். வந்த எடத்தில இந்த ஆக்ஸிடெண்ட்... ஒண்ணும், ஒண்ணும் ரெண்டு.''

''செய்தி கொடுத்தது யாருங்க?''

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்...''

''ஆபிஸர் சார்,. நீங்க தாராளமா செக் பண்ணிக்குங்க. தொழில் ரீதியில் எனக்கு எத்தனையோ பேர் ஆகாதவங்க இருக்காங்க. யாரோ சொன்னாங்கன்னு நீங்களும் புறப்பட்டு வந்துட்டீங்க. உங்க கடமையைச் செய்ங்க.''

சுபா





''நீங்க எப்படி இவ்வளவு பெரிய பணக்காரரானீங்க?''

''ஏன், உழைச்சுத்தான்!''

''அது தெரியும்! உழைச்சது யார்ன்னு தான் கேட்கிறேன்!''

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

''தீப்பெட்டித் தொழிற்சாலைக்குச் சம்பந்தமில்லாம, பின்னால் ரகசியமான எடத்தில விபத்து நடந்திருக்கு. கெமிக்கல் ரூம்ல பொட்டாஷியம் குளோரேட்டும், சல்பரும் ஒண்ணோட ஒண்ணு கலந்திருக்கும்னு சொல்றீங்க. ஆனா நீங்க வெடிகுண்டு தயார் பண்ணிட்டிருந்தா, இந்த விபத்தால அதை மறைச்சுட முடியாது மாயகிருஷ்ணன். எரிஞ்சு போன எடத்திலேர்ந்து டெஸ்ட் பண்ண சாம்பிள் எடுத்திருக்கோம். நீங்களா ஒத்துக்கிட்டா நல்லது...''

மாயகிருஷ்ணன் கண்களை மூடிச் சிறிது நேரம் யோசித்தார். இந்த அதிகாரிகளுக்கு என்ன விலை கொடுக்க வேண்டும்? தெரியவில்லை. ஏதாவது கொடுக்கப் போய் நேர்மையாய் இருந்து தொலைத்தால், அது வேறு விவகாரமாகி விடும். ஒப்புக் கொண்டு விட்டால் சுருக்குக் கயிற்றில் கழுத்தை நுழைத்தது போல் ஆகிவிடும்.

''இத பாருங்க ஆபீஸரு, என்னை அடிச்சாலும், உதைச்சாலும் பொய் சொல்ல மாட்டேன். சத்தியம்தான் என் நாக்குல வரும். வெடிகுண்டுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்ல. அதுதான் கடைசி வார்த்தை.... நீங்க எங்கேர்ந்து வரீங்க — ஸ்டேட்டா? சென்ட்ரலா? கூல் டிரிங்கைக் குடியுங்க — வெயில்ல வந்திருக்கீங்க...'' என்று நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

தங்கராஜ் மெல்ல மெல்ல அந்தக் கூட்டத்திலிருந்து உதிர்ந்து கொண்டான். சக்கரத்துக்குக் கீழே மாட்டிக் கொண்டவனைப் போல் மனம் நசுங்கியிருந்தது. ''கலெக்டரு... கலெக்டரு...'' என்று எல்லா இடத்திலும் தேடிவிட்டான். நந்தகுமாரைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

இந்தச் செய்தியை இந்திராவிடம் போய் எப்படிச் சொல்வது? இப்போதுதானே அவள் பூ வைக்கத் தொடங்கினாள்? இப்போதுதானே அவள் மைதீட்டத் தொடங்கினாள்? இப்போதுதானே சந்தோஷமாய்ப் புன்னகை பூக்கத் தொடங்கினாள்? இப்போதுதானே....

மாயகிருஷ்ணன் தன் பிரத்தியேக அறையில் இருந்தார். வெள்ளை விரிப்பு மெத்தை முழுக்கச் சுருட்டுச் சாம்பல் உதிர்ந்திருந்தது. அதை அலட்சியம் செய்தார்.

பின் கதவு சத்தமின்றித் திறக்கப்பட்டு, அவன் உள்ளே நுழைந்தான்.

''மொதலாளி...''

''வா, ரத்தினம்'' ஆறுதலாய் ஒரு பெருமூச்சை விடுவித்தார். ''மெட்ராஸ்லேர்ந்து கார் பிடிச்சுக்கிட்டு வந்தியா?''

''ரொம்ப அவசரம்னு சொன்னீங்களாமே, மொதலாளி...''

''நடக்கக் கூடாததெல்லாம் நடந்திருச்சிடா...''

''என்ன ஆச்சி மொதலாளி...?''

''எல்லாம் அந்தப் பாண்டியன் பய வேலைடா. நாம வெடிகுண்டு தயாரிக்கிற விஷயத்தை மோப்பம் பிடிச்சு, போலீசுக்கு எழுதிப் போட்டுட்டான்....''

''யூனியன் லீடர் பாண்டியனா?''

''அவனேதான். போலீஸ் வர்றதுக்குள்ளே அந்த ரூமைச் சரிக்கட்டிடலாம்னு நான் ஓடறேன், குறுக்க நின்னு மறிக்கறான்! கையும் களவுமா மாட்டிக் கொடுக்காம விடமாட்டேன், அதுஇதுன்னு கலாட்டா பண்ணிட்டான். அந்த ரூம்ல முத்து காவல் இருக்கறப்ப, உள்ள நுழைய முடியுமா? முத்துவுக்கும் அவனுக்கும் தகராறு ஆயி, முத்துவை ரூமுக்குள்ளார போட்டு அடிச்சிருக்கான். அதுல, எப்படியோ ஒரு நெருப்புப் பொறி கௌம்பிச்சி போல இருக்கு... பாவம்டா முத்து.'' மாயகிருஷ்ணன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''முத்து என்ன ஆனான் மொதலாளி?''

''வெளிலே யாரும் சொல்லலியாடா?'' மாயகிருஷ்ணன் எழுந்து போய் ரத்தினத்தின் தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டார்.

''ஏதாவது பேசுங்க அண்ணி...'' தங்கராஜ் காய்ந்து போன குரலில் சொன்னான்.

''அவரு இப்ப எங்கே?'' இந்திரா கட்டில் களை வெறித்துக் கொண்டே கேட்டாள். ஒருநாள் கூடச் சேர்ந்து படுக்காத கட்டில்கள். இந்திராவின் நெற்றியைப் போல, முடியாத கூந்தலைப் போல, படுக்கை கலைந்து கிடந்தது.

''டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருப்பாங்க அண்ணி.... பாடியை நாளைக்குக் காலையில்தான் கொடுப்பாங்களாம்...'' தங்கராஜ் திணறித் திணறிப் பேசினான்.

இந்திரா பைத்தியக்காரத்தனமாக இரண்டு கைகளையும் மோதிக் கொண்டாள். கண்ணாடி வளையல்கள் நொறுங்கி உதிர்வதை உணர்ச்சியில்லாமல் பார்த்தாள். மணிக்கட்டுகளில் விரியும் ரத்தக் கோடுகளை அலட்சியம் செய்தாள்.

''அவரு இப்ப எங்கே?'' என்றாள் மறுபடியும்.

தங்கராஜ் என்ன பேசுவது என்று புரியாமல் தவித்தான். அவனுடைய

•• நிசப்தத்தின் ஆழ்ந்த அமைதியிலேயே கடவுளின் குரலைக் கேட்க முடியும்.

அண்ணன் ஜெயபாலின் வீடு பூட்டிக் கிடந்தது. ஏதோ கல்யாணத்திற்குப் போயிருக்கிறார்கள் என்று பக்கத்து வீட்டில் சொன்னார்கள். உறவுக்காரர் யாராவது இருந்தால், இன்னும் உரிமையாக அவனைச் சமாதானப் படுத்த முடியுமோ என்னவோ என்று நினைத்தான்.

இந்திரா மெல்லப் பார்வையை நிமிர்த்தினாள். ''நந்துகிட்டே சொல்லியாச்சா? அவன் இப்ப எங்கே?''

தங்கராஜுக்குத் துணுக்கென்றிருந்தது. ராத்திரி சூழ ஆரம்பித்த பின்னும் நந்தகுமார் வீடு வந்து சேராதது கவலையாக இருந்தது. ஒருவேளை தன் வீட்டிற்குப் போயிருப்பானோ? போயிருந்தாலும் நேரே இங்கேதானே வருவான்?

நந்தகுமார் எங்கே?

ரத்தினம் காலியான சாராய பாட்டிலை உருட்டி விட்டான். முதலாளி படித்துப் படித்துச் சொன்னதெல்லாம் அவனைச் சுற்றிச் சுற்றிக் கும்மியடிப்பது போல் இருந்தது.

''முத்துவோட அநியாயச் சாவுக்குக் காரணமே அந்தப் பாண்டியன்தாண்டா ரத்தினம்.. அவன் குடும்பமே நம்மளை அழிக்கக் கௌம்பியிருக்குடா... அந்த அறுத்தவனோட பையன் இருக்கானே... நந்தகுமாரா அவன் பேரு? — எனக்கும் பாண்டியனுக்கும் விவகாரம் நடக்கிறப்ப பாத்திட்டே நின்னிருக்கான். வெடி மருந்து, அது இதுன்னு நாங்க பேசினதெல்லாம் கேட்டுட்டான். கோழி அமுக்கற மாதிரி அமுக்கினேன். அவனோட ஆத்தாளைப் போலவே பல்லு கூர்மை, பையனுக்கு. கடிச்சுட்டு ஓடிட்டான். போலீஸ் ஸ்டேஷன்ல விசாரிச்சுட்டேன்... அங்கேயும் வரலை. போலீஸ் கையில அவன் மாட்டினா நமக்குத்தான் ஆபத்து ரத்தினம்...''

''நாளைக்குப் பொழுது விடியறதுக்குள்ள அந்தக் குட்டி நாயை உங்க கால்ல கொண்டு வந்து தள்ளறேன், மொதலாளி...''

''எங்கேடா போயிட முடியும் உன்னால?'' ரத்தினம் உரக்கவே சவால் விட்டான். சிவப்பேறிய கண்களில் வெறி மின்ன எழுந்தான்.

நந்தகுமாருக்குப் பசித்தது. வயிற்றைச் சுருட்டி இழுத்தது. ஒளிந்திருந்த மரக் கிளையிலிருந்து மெல்ல இறங்கினான்.

காலையிலிருந்து ஒளிந்து ஒளிந்து ஓடி, உடம்பு அசதியாகிவிட்டிருந்தது. தங்கராஜ் வசிக்கும் தெருவிலேயே மாயகிருஷ்ணனின் அடி ஆட்கள் உலவ ஆரம்பித்ததை அதிர்ச்சியோடு கவனித்திருந்தான். அம்மா வீட்டு வாசலிலும் நிச்சயம் அவனைப் பிடிக்க ஆள் காத்திருக்கும் என்று பயந்தான்.

பாண்டியன் எட்டி உதைக்கப்பட்டு நெருப்புக்குள் தள்ளப்பட்ட காட்சி மனத்தில் அடிக்கடி புரண்டு உடம்பை உதற வைத்தது.

சற்றுத் தள்ளியிருந்த ஐயனார் சிலையைப் பார்த்தான். குளிர்காற்றில் சலங்கை மணிகள் அசைந்து ஒலியெழுப்பி, அவனை வா என்று அழைத்தன. வேறெங்கோ ஓடி ஒளிவதை விட அம்மன் சன்னிதிக்குள் இந்த நீளமான ராத்திரியைக் கழிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று தோன்றியது..

திடீரென்று அனாதையாகி விட்டது போல் உணர்ந்தான்.

மேலே நிலா எழுந்திருந்தது. தங்கராஜ் அண்ணன் எப்படியும் தன்னைத் தேடிக் கண்டுபிடித்து விடுவார் என்று ஓரத்தில் ஜரிகையளவு நம்பினான்.

சருகுகளைச் சப்திக்காமல் மெல்ல நடந்தான்.

''எங்கேடா ராஜா கௌம்பிட்டே?''

திடீரென்று மிக அண்மையில் அந்தக் குரல் வந்ததும் 'ஹ்ஹாக்' என்று பயத்தில் முனகித் திரும்பினான்.


விரித்த கைகளும், ஆவேசக் கண்களும், பொருந்தாத விகாரச் சிரிப்புமாக ரத்தினம் அவனை இரண்டே எட்டில் நெருங்கினான்.

(தொடரும்)

** இளமை இளைஞர்களிடம் வீணடிக்கப்படுகிறது.

மாதம் ஒரு மாவட்டம்


திருச்சி மாவட்ட மக்களுக்கு, நினைவூட்டுகிறோம்!



கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் பதினான்காவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது திருச்சி மாவட்டம்தான். எனவே, உங்கள் மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும், அக்கிரமங்களும் தவிர, சாதனைகளும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசித் தேதி: 20.3.87 என்பதை மீண்டும் நினைவு படுத்துகிறோம்.

உடனடியாக எழுதியனுப்புங்கள்!

— ஆசிரியர்



கைவண்டியில் இருந்த சாமான்களைப் பார்த்த மாத்திரத்திலேயே சரவணனின் குடும்ப நிலைமையை ஓரளவு யாரும் ஊகித்து விட முடியும்.

அதுவும் இப்பொழுது வீடு மாற்ற எல்லாரும் செய்வது-மாதிரி ஒரு வேனோ, லாரியோ வைத்துக் கொள்ளாமல், ஒரு கை வண்டியின் ஒரே நடையில் அடங்கிப்போகிற மாதிரிதான் அவன் சேமித்து வைத்திருந்தான்.

ஒரு பிரைவேட் கம்பெனியில் ஏழு வருஷக் கடுமையான உழைப்புக்குப் பின், இப்பொழுதுதான் சம்பளம் தொள்ளாயிரத்தைத் தொட்டிருக்கிறது.

அதிலும் பி.எப். அது இது என்று நூற்றைம்பது ரூபாய்ச் சொச்சம் போக என்ன வரும்? கண்ணீர்தான் வரும், மாசக் கடைசியில்!

இதில் மனைவி, வயதான தாய், இரு பெண் குழந்தைகள் ஜீவிதம் நடத்த வேண்டும்...

சலிப்படைந்த தாய்.... விரட்டும் மனைவி. விவரம் புரியாத குழந்தைகள்...

பழைய வீட்டின் வாடகை வெறும் எண்பது ரூபாய் மட்டும்தான், ஏழெட்டு வருடங்களுக்கு முன்னாலேயே வந்துவிட்டபடியால். வசதி குறைச்சல்தான் என்றாலும் பழகிவிட்டது.

அந்தக் காம்பவுண்டிற்குள் இருந்த அனைவருமே சரவணனைப் போலவே சம்பாத்தியம் உள்ளவர்கள். எனவே அந்தஸ்து பேதம் இல்லாமல் அன்யோன்யமாகப் பழகக்கூடியவர்கள். உறவுக்காரர்கள் மாதிரி பழகிவிட்டார்கள்.

இப்பொழுது வீடு மாற்றியது, 'இந்த வீடு ராசியில்லைங்க!' என்ற மனைவியின் நச்சரிப்பால்தான்.

அம்மாவிற்கு இஷ்டமில்லைதான். இருந்தாலும் அதை வெளிப்படுத்துகிற தைரியம் இல்லை. அம்மா சத்தம் போட்டுப் பேசி வளைய வந்த மனுஷி இல்லை.

சரவணனுக்கும் இரைச்சலாகப் பேசினாலே அலர்ஜியாக இருக்கும்.

பாக்கியம் இதற்கு நேர் எதிர். சட்டென்று சத்தம் அதிகரித்துவிடும். தன் தலைவிதி... அது. இது என்று கூக்குரலெடுத்து அழ ஆரம்பித்து விடுவாள். அதுவும் சரவணன் இப்படி என்று தெரிந்தபின் அவளின் பிடிவாதம் இன்னும் அதிகமாகியது.

பழைய காம்பவுண்டை விட்டுக் காலி செய்து வரும்போது ஏறக்குறைய அழாத குறைதான். முதலில் பாக்கியத்தை அழைத்து வந்து வீடு பிடித்திருக்கிறதா என்று காட்டி விட்டுத்தான் அட்வான்ஸ் கொடுத்தான்.

அதை வீடு என்று சொல்வதைவிட அவுட் ஹவுஸ் என்றுதான் சொல்ல வேண்டும். பெரிய வீட்டின் பின்பக்கம் விளையாட்டுக்குச் செய்து வைத்த மாதிரி அழகாய்... சின்னதாய்... காற்று வருவது கஷ்டம்தான். மனித நடமாட்டம் கிடையாது. வீட்டு மனிதர்கள் மட்டும்தான். சத்தம் கிடையாது. பிரச்னை கிடையாது.

பாக்கியத்திற்குப் பிடித்துப் போனது. வீட்டு ஓனரின் கடைசிப் பெண் வந்து வீட்டைத் திறந்து காண்பித்தாள்.

அவர்கள் வீட்டில் வேறு யாரும் வெளியில் தலை காட்டவில்லை. நகரின் பெரிய பணக்காரர்களில் இவன் வீட்டு உரிமையாளரும் ஒருவர். ஒரு பெரிய ஜவுளிக் கடை, ஹோட்டல் இது போக ஒரு தியேட்டரில் பங்கு: அத்தனை வருமானமும் போதாதென்று சின்னச் சின்ன காம்பவுண்டுகளாய் நிறைய வளைத்துப் போட்டிருந்தார்.

இந்தச் சின்ன வீட்டிற்குக் கூட இருநூற்று ஐம்பது ரூபாய் வாடகை. சரவணன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பாக்கியம் பிடிவாதமாக இருந்துவிட்டாள்.

அம்மாவிற்கு வாடகையைக் கேட்டதும் மயக்கம் வந்துவிட்டது. "எப்படிடா சரவணா சமாளிக்கப் போறே?" என்று பாக்கியம் இல்லாத சமயம் கேட்டாள்.

காம்பவுண்டில் சில பேர் வாடகையைக் கேட்டுவிட்டு ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். 'பெண்டாட்டி சொல் கேட்டு சிரமத்தில் விழுகிறான். அவளை அடக்கத் தெரியாதவன்' என்று தன்னைப் பற்றி அவர்கள் நினைத்திருப்பார்கள் என்று புரிந்தது.

அந்தப் பெரிய வீட்டின் முன் கைவண்டி வந்து நிற்பதே கேவலம் மாதிரிதான் அவனுக்குத் தோன்றியது.

திரைச்சீலை விலக்கி பெரிய ஜன்னலின் வழியாக ஓரிரண்டு முகங்கள் தெரிந்தன. ஒரு வயதான ஆச்சி கதவைத் திறந்து மேற்பார்வை பார்க்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மா என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்க, பாக்கியம் அந்த ஆச்சியைப் பார்த்து வணக்கம் சொன்னாள்.

குழந்தைகளுக்கு இடமாற்றம் உடனே புரியவில்லை. ஏதோ தாற்காலிகமாக தங்கிப் போகத்தான் இங்கே வந்திருக்கிறோம் என்று நினைத்தன போலும்.

பாக்கியம் கையோடு கொண்டு வந்திருந்த பாலைக் காய்ச்சினாள். சாமான்கள் அங்கங்கே இறக்கி வைக்கப்பட்டிருந்தன. அம்மா ஸ்வாமி படங்களை எடுத்துத் துடைத்து வைத்துக் கொண்டிருந்தாள்,

பாக்கியம் பால் காய்ச்சியதும், "பாக்கியம் முதல்ல ஸ்வாமிக்கு நைவேத்யம் பண்ணு" என்று சொன்னதை, பாக்கியம் ஒரு முறைப்புடன் பார்த்துவிட்டு, பின் பாலைக் கொண்டு வந்து வைத்தாள்.

"ஏன்க்கா . எனக்குப் பால் கிடையாதா?" என்று அப்பாவித்தனமாகக் கேட்டுக் கொண்டே ஓனரின் கடைசிப் பெண் நுழைந்தாள். நல்ல நிறம். சின்ன முகம். செய்து வைத்த மாதிரி கண், உதடுகள், மூக்கு. லட்சணமாக இருந்தாள். நேர்த்தியாக உடுத்தியிருந்தாள். கவலையில்லாத

நா.நாகராஜன்

•• கடவுள் இல்லையென்றாலும் மனிதன் அவனை உருவாக்க நேர்ந்திருக்கும்.

முகம். பனிச்சென்ற சிரிப்பு. சரவணனுக்கு அவளிடம் ஏதாவது பேச வேண்டும் போலிருந்தது.

அம்மா அவளிடம் கேட்டாள். ''ஸ்கூல் போறியா?''

''ஸ்கூலா? காலேஜ் பாட்டி. பி.எஸ்ஸி. இரண்டாவது வருஷம்...'' என்றாள்.

அம்மாவுக்கு ஆச்சரியம்.

சரவணன் ஏதோ கேட்க வாயெடுத்தான். அதற்குள் அவள் கவனம் இரண்டாவது பெண் குழந்தையிடம் சென்றது. தூக்கி வைத்துக் கொண்டாள். ''என்ன பேரு?''

''கார்த்திகா...''

''ஐ... கார்த்திக் கண்ணு, நல்ல பேரு. சரி, நான் கார்த்திக்கைத் தோட்டம், ஊஞ்சல், எல்லாம் காட்டிட்டுக் கொண்டு வர்றேன்'' என்று சொல்லித் தூக்கிக் கொண்டு ஓர் அரை வட்டம் அடித்துத் தாவணி பறக்கக் கிளம்பினாள். சின்ன ஆறுதல். மனித நேசம்!

முதல் ஒரு வாரத்திற்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது சரவணனுக்கு. வீடு — ஆபீஸ் — வீடு.

அம்மா கோவிலுக்குப் போகிறேன் என்ற சாக்கில் அடிக்கடி பழைய காம்பவுண்டிற்கு விஜயம் செய்து வந்தாள்.

அவள் கொண்டு வருகிற சங்கதிதான் பேச்சு. பாக்கியம் ஓனரின் சின்னப் பெண்ணிடம் கேட்டு ஏதாவது புஸ்தகங்கள் ஓசிக்கு வாங்கி படிக்க ஆரம்பித்து விடுவாள்.

சரவணன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு தெருவில் நடந்து வருவான். தெருவும் பணக்காரத்தனமாகத்தான் இருந்தது. பெரிய பெரிய பங்களாக்கள். இவனை மாதிரி கைலியும் பனியனுமாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு யாரும் வெளிப்படவில்லை. மனித நடமாட்டம் இல்லை. வீடுகளின் உள்ளே கூடப் பேசுகிறார்களோ என்னவோ....

பாக்கியம் சின்னப் பெண்ணின் மூலமாக நிறைய விஷயங்கள் தெரிந்து வைத்திருந்தாள். பக்கத்து வீடுகளில் யார், யார்; அவர்களின் சொத்து விவரம் என்ன, என்ன...

''வீடு சின்னதா இருந்தாலும் வசதியப் பார்த்தீங்களா... நம்ம ராஜ்யம்தான். ஒரு பய பார்த்துப் பொருமமுடியாது. என்ன... வாடகை கொஞ்சம் கூடத்தான். இருந்தாலும் சொந்த வீடு மாதிரில்ல இருக்கு....'' என்றாள்.

ஒருவகையில் அந்தக் கருத்து அவனுக்கு உடன்பாடாய் இருந்தது. அவன் நினைவு தெரிந்து இந்த மாதிரி புதிய வீட்டில் இருந்ததில்லை. ஒருவகையில் இது சொந்த வீட்டு மனப்பாங்கையும் கொடுக்கிறதுதான். பாக்கியத்தின் எல்லாப் பேச்சுக்களும் எதிர்க்

அருள்வாக்கு

பாலை வனங்களில் நிறைய மான் கூட்டங்கள் இருக்கும். அவற்றுக்கு வெயில் காலத்தில் ''ஹா ஹா'' என்று தாஹம் எடுக்கும். ஆனால் பாலைவனத்தில் ஜலம் கிடைக்குமா? கிடைக்காவிட்டால் போகிறது. அங்கே ஜலமே கிடைக்காது என்பதாவது தெரிந்துவிட்டால் மான் கூட்டம் பாலை வனத்தை விட்டு வெளியிலே உள்ள நீர் வளமுள்ள நாட்டுக்கு ஓடி வந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் இதையும் செய்ய முடியாமல் ஜலமே இல்லாத பாலை வனத்தில் ஜலம் இருக்கிற மாதிரி ஓர் ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அதுதான் கானல் நீர் என்பது. ப்ரதி பிம்பம் (Reflection) ஒளிச் சிதறல் (Refraction) தியரிகளைக் கொண்டு ஸயன்ஸில் இதை விளக்குகிறார்கள். மொத்தத்தில் இது என்னவென்றால், பாலைவனம் மாதிரியான ஒரு விஸ்தாரமான



வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப் போய்; காற்றுப் பிரதேசம் லேசாகி விடுகிற போது, தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே பிரதிபிம்பம் தெரிகிற மாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிற மாதிரி தெரியும். அதை நோக்கிப் போகப் போக, அதுவும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும்.

இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் வாஸ்தவமான ஜலம் என்று நினைத்து, அதைத் தேடித் தேடி ஓடிக் கடைசியில் ஓட முடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல், ரொம்பவும் பரிதாபமாக ஜீவனை இழக்கும். ..ஸம்ஸ்கிருதத்தில் 'ம்ருக்' என்றால் 'தேடுவது' என்று அர்த்தம். ஓயாமல் எதையாவது தேடி ஓடிக் கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்.' கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ருகத்தின் பரிதாபமான கார்யமாக இருக்கிறது.

லோகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ''அதெப்படி மாயை? லோகம்தான் கண்ணுக்குத் தெரிகிறதே!'' என்று கேட்டால் கானல் நீர் கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது நிஜமாகி விடுமா? அப்படித்தான் இந்த லோகமும் ஒரு கானல் நீர் என்று அத்வைதகிரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

விஸ்ட்ரம்

ஒரு டயபடிக் உணவு



TAS

நீரிழிவுக்காரர்களுக்கென்றே பிரத்யோகமாக வடிவமைக்கப்பட்டது.

சோர்வை நீக்கி, சக்தியை கொடுத்து தெம்பை ஊட்டுகின்றது

கொழுப்புச் சத்து சிறிதும் இல்லாதது

முழுவதும் தானிய, பருப்பு வகைகளால் ஆனது

செயற்கை வண்ணமோ, மணமோ, ருசியோ சேர்க்கப்படாதது இயற்கை தந்த பாதுகாப்புடன் அளிக்கப்படுகிறது

ஸ்பென்ஸர்ஸ், சிந்தாமணி, நீல்கிரீஸ் மற்றும் எல்லா மருந்துக் கடைகளிலும், டிபார்ட்மெண்டல் கடைகளிலும் கிடைக்கும்.

பரிசு ரூ. 200/-

பொன்மொழிப் போட்டி — 11

உள்பக்க மார்ஜின்களில், இந்த இதழில் தரப்பட்டுள்ள ஐந்து பொன்மொழிகளைக் கீழே உள்ள ஐந்து பெயர்களுடன் பொருத்தம் பார்த்து இணைத்து, அந்தந்தப் பெயருக்கு அருகே உள்ள வெற்றிடத்தில் பொன்மொழியை முழுமையாகப் பிழையின்றி எழுதுங்கள். விலாசத்தைப் பூர்த்தி செய்து, இந்த அரைப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். உறையின் மேல் "பொன்மொழிப் போட்டி — 11" என்று குறிப்பிடவும். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும்.



கிளைதயில் கண்ணன்

வால்டேர்

பெர்னார்ட் ஷா

ஸி.வி. ராமன்

சத்யசாயி பாபா

முடிவு தேதி: 1.4.87

என் பெயர்: ....

விலாசம்: ....

....

கிற கருத்துக்களல்ல. அவளின் சிந்தனையோட்டம், பார்க்கிற விதம் வேறொரு மாதிரி இருக்கிறது. அவ்வளவுதான்.

"கொஞ்சம் சிக்கனமா இருந்தா, நாமே இந்த வாடகை கொடுக்க முடியாதா என்ன? கைக்குழந்தை கொஞ்சம் பெரிசானா நான் கூட வேலைக்குப் போனேன்னா...."

"பாக்கியம் நான் அதுக்கு...."

"இல்லே....ஒரு யோசனைதான்" என்றாள்.

சரவணனுக்கு இப்படி நினைக்கையில் தெம்பாக இருந்தது. மனைவியை அணைத்துக் கன்னத்தில் தட்டிக் கொடுத்தான்.

பயந்தே வாழ்க்கையைப் பார்க்கப் பழகி விட்ட தன் பார்வையையும் துணிச்சலாக எதையும் அணுகுகிற அவள் பார்வையையும் நினைத்துக் கொண்டான்.

முதல் மாத வாடகை கொடுத்தபோது, நிறையப் பணத்தை இழந்த மாதிரிதான் இருந்தது சரவணனுக்கு.

அம்மா ஒரு பெருமூச்சுடன் சிரித்தாள்.

மறுநாள் ஆபீஸ் விட்டு வீட்டுக்குத் திரும்பிய சரவணனுக்கு நிறையவே செய்திகள் காத்திருந்தன.

அம்மாதான் முதலில் பேச ஆரம்பித்தாள்.

"சரவணா நீ போன உடனே ஒரு ஆட்டோ ரிக்ஷா வந்து நின்னுது. வீட்டு ஓனரோட இரண்டாவது மகனாம். எப்போதும் குடியாம். மத்த எல்லாக் கெட்ட பழக்கங்களும் உண்டாம். ஆடி ஆடி இறங்கினான். உள்ளே நுழைஞ்சதுமே இங்கேதான் வந்தான். இது அவன் இடமாம். அவன் அப்பா அவனை ஏமாத்தி வாடகைக்கு விட்டுட்டாராம். இனிமேல் வாடகையை அவன்கிட்டேதான் கொடுக்கணுமாம்...."

பாக்கியம் பேச ஆரம்பித்தாள்.

"இது புதுப் பிரச்னையாக இருக்குதுங்க. அப்பா என்னடான்னா பணம் பணம்னு அலையறாரு. பையன் இப்படிச் செலவழிக்கிறானே சுத்தறான். குடி, கூத்தி, மருந்து, மாத்திரை எல்லாம் உண்டாம். நமக்கு இந்த இடம் தோதுப்படாதுங்க. நீங்க காலைல போனீங்கன்னா சாயங்காலமாகுது திரும்ப... அம்மாவையும் பார்த்துண்டு, இரண்டு பொட்டைக் குழந்தைகளையும் வைச்சுண்டு மனுஷங்க உதவி இல்லாம நான் எப்படிச் சமாளிக்கறதுங்க... காலைல அப்படி ஒரு சம்பவம் நடந்த மாதிரியே அவங்க காட்டிக்கலே. பையன் வந்து சத்தம் போட்டபோது கூடப் பக்கத்திலிருந்த யாரும் வந்து எட்டிப் பார்க்கலே. சீக்கிரம் இந்த இடத்தைக் காலி பண்ணணுங்க. நமக்கு ஒத்து வராது...." என்றாள்.

பாக்கியத்தின் குரலில் பயம் இருந்தது. சரவணனுக்கு அவளை அப்படிப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. நேற்று வேறுவிதமாக நம்பிக்கை நிறைந்தவளாகப் பேசிய பாக்கியமா என்று ஆச்சரியமாக இருந்தது.

மறுநாள் சரவணன் லீவு போட்டுவிட்டு வீட்டுக்கு அலைய ஆரம்பித்தான்.

பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி


இருபத்திரண்டாம் அத்தியாயம்

வேளக்காரப் படை

முதலில், பல்லக்கின் வெளிப்புறத் திரை — பனைமரச் சின்னம் உடைய துணித் திரை — விலகியது. பின்னர் உள்ளிருந்த பட்டுத் திரையும் நகரத் தொடங்கியது. முன்னொரு தடவை வல்லவரையன் பார்த்தது போன்ற பொன் வண்ணக் கையும் தெரிந்தது. வந்தியத்தேவன் இனி தான் குதிரை மேலிருப்பது தகாது என்று எண்ணி ஒரு நொடியில் கீழே குதித்தான். சிவிகையின் அருகில் ஓடிவந்து, ''இளவரசே! இளவரசே! பல்லக்குச் சுமக்கும் ஆட்கள்...'' என்று சொல்லிக் கொண்டே அண்ணாந்து பார்த்தான். மீண்டும் உற்றுப் பார்த்தான்; கண்ணிமைகளை மூடித் திறந்து மேலும் பார்த்தான்! பார்த்த கண்கள் கூசின! பேசிய நாக் குழறியது. தொண்டையில் திடீரென்று ஈரம் வற்றியது. ''இல்லை, இல்லை! தாங்கள்!...... பழுவூர் இழவரசி!...... பளுவூர் இரவளசி!...... உங்கள் ஆட்களின் குதிரை என் பல்லக்கை இடித்தது!......'' என்று உளறிக் கொட்டினான்.

இதெல்லாம் கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் நடந்தது. பல்லக்கின் முன்னும் பின்னும் சென்ற வேல் வீரர்கள் ஓடிவந்து வல்லவரையனைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள் என்பது வல்லவரையனுக்கும் தெரிந்தது. அவனுடைய கையும் இயல்பாக உறைவாளிடம் சென்றது. ஆனால் கண்களை மட்டும் பல்லக்கின் பட்டுத் திரையின் மத்தியில் ஒளிர்ந்த மோகனாங்கியின் சந்திர பிம்ப வதனத்தினின்றும் அவனால் அகற்ற முடியவில்லை!

ஆம்; வல்லவரையன் எதிர்பார்த்ததற்கு மாறாக, இப்போது அப்பல்லக்கில் அவன் கண்டது ஒரு நிஜமான பெண்ணின் வடிவந்தான்! பெண் என்றாலும், எப்படிப்பட்ட பெண்! பார்த்தவர்களைப் பைத்தியமாக அடிக்கக் கூடிய இத்தகைய பெண்ணழகு இவ்வுலகில் இருக்கக் கூடும் என்று வந்தியத்தேவன் எண்ணியதே இல்லை!



நல்லவேளையாக, அதே நிமிஷத்தில் வந்தியத்தேவனுடைய மூளை நரம்பு ஒன்று அசைந்தது. அதிசயமான ஓர் எண்ணம் அவன் உள்ளத்தில் உதயமாயிற்று. அதை உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

ஒரு பெருமுயற்சி செய்து, தொண்டையைக் கனைத்து, நாவிற்குப் பேசும் சக்தியை வரவழைத்துக் கொண்டு, "மன்னிக்க வேண்டும்! தாங்கள் பழுவூர் இளையராணிதானே! தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இத்தனை தூரம் வந்தேன்!" என்றான்.

பழுவூர் இளைய ராணியின் பால் வடியும் முகத்தில் இளநகை அரும்பியது. அதுகாறும் குவிந்திருந்த தாமரை மொட்டு சிறிது விரிந்து உள்ளே பதித்திருந்த வெண்முத்து வரிசையை இலேசாகப் புலப்படுத்தியது. அந்தப் புன்முறுவலின் காந்தி நமது இளம் வீரனைத் திக்குமுக்காடித் திணறச் செய்தது.

அவனருகில் வந்து நின்ற வீரர்கள் தங்கள் எஜமானியின் கட்டளைக்கு எதிர்பார்த்துக் காத்திருந்ததாகத் தோன்றியது. அந்தப் பெண்ணரசி கையினால் ஒரு சமிக்ஞை செய்யவே, அவர்கள் உடனே அகன்று போய்ச் சற்றுத் தூரத்தில் விலகி நின்றார்கள். இரண்டு வீரர்கள் பல்லக்கின் மீது மோதிக் கொண்டு நின்ற குதிரையைப் பிடித்துக் கொண்டார்கள்.

பல்லக்கிலிருந்த பெண்ணரசி வந்தியத்தேவனை நோக்கினாள். வந்தியத்தேவனுடைய நெஞ்சில் இரண்டு கூரிய வேல் முனைகள் பாய்ந்தன!

"ஆமாம்; நான் பழுவூர் இளைய ராணிதான்!" என்றாள் அப்பெண்மணி. இவளுடைய குரலில் அத்தகைய போதை தரும் பொருள் என்ன கலந்திருக்க முடியும்? ஏன் இக்குரலைக் கேட்டு நமது தலை இவ்விதம் கிறுகிறுக்க வேண்டும்?

"சற்று முன்னால் நீ என்ன சொன்னாய்? ஏதோ முறையிட்டாயே! சிவிகை சுமக்கும் ஆட்களைப் பற்றி?"

காசிப் பட்டின் மென்மையும், கள்ளின் போதையும், காட்டுத் தேனின் இனிப்பும், கார்காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண் குரலில் கலந்திருக்க முடியுமா?....... அவ்விதம் இதோ கலந்திருக்கின்றனவே!

"பல்லக்கைக் கொண்டு வந்து அவர்கள் உன் குதிரை மீது மோதினார்கள் என்று சொன்னாய்?..."

பழுவூர் ராணியின் பவள இதழ்களில் தவழ்ந்த பரிகாசப் புன்னகை, அந்த வேடிக்கையை அவள் நன்கு ரசித்ததாகக் காட்டியது. இதனால் வந்தியத்தேவன் சிறிது துணிச்சல் அடைந்தான்.

"ஆம், மகாராணி! இவர்கள் அப்படித்தான் செய்தார்கள்; என் குதிரை மிரண்டுவிட்டது!" என்றான்.

"நீயும் மிரண்டு போய்த்தானிருக்கிறாய்! துர்க்கையம்மன் கோயில் பூசாரியிடம்போய் வேப்பிலை அடிக்கச் சொல்லு! பயம் தெளியட்டும்!"

இதற்குள் வந்தியத்தேவனுடைய பயம் நன்கு தெளிந்துவிட்டது. அவனுக்குச் சிரிப்புக்கூட வந்துவிட்டது.

பழுவூர் ராணியின் முகபாவம் இப்போது மாறிவிட்டது. குறுநகையின் நிலவு கோபக் கனலாயிற்று.

"வேடிக்கை அப்புறம் இருக்கட்டும்; உண்மையைச் சொல்! எதற்காகப் பல்லக்கின் மேல் குதிரையைக் கொண்டு வந்து மோதி நிறுத்தினாய்?"

இதற்குத் தக்க மறுமொழி சொல்லித்தான் ஆகவேண்டும். சொல்லாவிட்டால்...? நல்லவேளையாக, ஏற்கெனவே அந்த மறுமொழி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதயமாகியிருந்தது. சற்றுத் தணிந்த குரலில், பிறர் கேட்கக் கூடாது என்று வேண்டுமென்றே தணித்த அந்தரங்கம் பேசும் குரலில், — "தேவி! நந்தினி தேவி! ஆழ்வார்க்கடியார்...... அவர்தான், திருமலையப்பர்...... தங்களைச்

சந்திக்கும்படி சொன்னார். அதற்காகவே இந்தச் சூழ்ச்சி செய்தேன். மன்னிக்க வேண்டும்!'' என்றான்.

இவ்விதம் சொல்லிக் கொண்டே பழுவூர் ராணியின் முகத்தை வந்தியத்தேவன் கூர்ந்து கவனித்தான். தன்னுடைய மறுமொழியினால் என்ன பயன் விளையப் போகிறதோ என்னும் ஆவலுடன் பார்த்தான்.

கனி மரத்தின்மேல் கல் எறிவது போன்ற காரியந்தான். கனி விழுமா? காய் விழுமா? எறிந்த கல் திரும்பி விழுமா? அல்லது எதிர்பாராத இடி ஏதாவது விழுமா?

பழுவூர் ராணியின் கரிய புருவங்கள் சிறிது மேலே சென்றன. கண்களில் வியப்பும் ஐயமும் தோன்றின. மறுகணத்தில் அந்தப் பெண்ணரசி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்.

''சரி; நடுச்சாலையில் நின்று பேசுவது உசிதம் அல்ல. 'நாளைக்கு நம் அரண்மனைக்கு வா! எல்லா விஷயமும் அங்கே விவரமாகச் சொல்லிக் கொள்ளலாம்'' என்றாள்.

வந்தியத்தேவனுடைய உள்ளம் பூரித்தது. நினைத்த காரியம் வெற்றி பெற்று விடும்போலே காண்கிறது! ஆனால், முக்கால் கிணறு தாண்டிப் பயனில்லை. மற்ற 'கால்பங்குக் கிணற்றையும் தாண்டியாக வேண்டும்.

''தேவி! தேவி! கோட்டைக்குள் என்னைவிட மாட்டார்களே! அரண்மனைக்குள்ளும் விடமாட்டார்களே? என்ன செய்வது?'' என்று பரபரப்புடன் சொன்னான்.

பழுவூர் ராணி உடனே பல்லக்கில் தன் அருகில் கிடந்த ஒரு பட்டுப் பையைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு தந்த மோதிரத்தை எடுத்தாள்.

''இதைக் காட்டினால் கோட்டைக்குள்ளும் விடுவார்கள்; நம் அரண்மனைக்குள்ளும் விடுவார்கள்!'' என்று சொல்லிக் கொண்டே கொடுத்தாள். வந்தியத்தேவன் அதை ஆவலுடன் வாங்கிக் கொண்டான். ஒருகணம் பனை இலச்சினை பொறித்த அந்தத் தந்த மோதிரத்தைப் பார்த்தான். மறுபடி நிமிர்ந்து ராணிக்கு வந்தனம் கூற எண்ணிய போது பல்லக்கின் திரைகள் மூடிக் கொண்டிருந்தன.

ஆகா! பூரண சந்திரனை ராகு கவ்வும் போது சிறிது சிறிதாகக் கவ்வுகிறது. ஆனால் இந்தப் பல்லக்கின் திரைகள் அந்தப் பேசும் நிலா மதியத்தை ஒரு நொடியில் கபளீகரம் செய்து விட்டனவே!

''இனியாவது என்னைப் பின் தொடர்ந்து வராதே! அபாயம் நேரும். நின்று மெதுவாக வா!'' என்று பல்லக்குத் திரைக்குள்ளிருந்து பட்டுப் போன்ற குரல் கேட்டது.

பிறகு பல்லக்கு நகர்ந்தது. வீரர்கள் முன்போலவே அதன் முன்னும் பின்னும் சென்றார்கள்.

வந்தியத்தேவன் குதிரையின் தலைக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு சாலையோரமாக ஒதுங்கி நின்றான். பழுவூர் ஆட்களில் தன்னை அணுகி வந்து பேசியவன் இரண்டு மூன்று தடவை திரும்பித் திரும்பிப் பார்த்ததை அவனுடைய கண்கள் கவனித்து உள்மனத்துக்குச் செய்தி அனுப்பின.

ஆம்; அவனுடைய வெளி மனம் பல்லக்கிலிருந்த பழுவூர் ராணியின் மோகன வடிவத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. இத்தனை நேரம் கண்டது, கேட்டது எல்லாம் உண்மைதானா? அல்லது ஒரு மாய மனோகரக் கனவா? இப்படியும் ஒரு அழகி., ஒரு சௌந்தரிய வடிவம், இந்தப் பூவுலகில் இருக்க முடியுமா?

அரம்பை, ஊர்வசி, மேனகை என்றெல்லாம் தேவமாதர்கள் இருப்பதாகப் புராணங்களில் சொல்வதுண்டு. அவர்களுடைய அழகு முற்றும் துறந்த முனிவர்களின் தவத்தையும் பங்கம் செய்ததாகக் கேட்டதுண்டு. ஆனால் இந்த உலகத்தில்!...... பெரிய பழுவேட்டரையர் இந்த மோகினியின் காலடியில் அடிமை பூண்டு கிடப்பதாக நாடு நகரங்களில் பேசுவதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். இருந்தால், அதில் வியப்பு ஒன்றும் இராது! நரைதிரை மூப்புக் கண்டவரும், தேகமெல்லாம் போர்க்காயங்களுடன் கடூரமான தோற்றங் கொண்

டவருமான பழுவேட்டரையர் எங்கே? ஸுகுமாரியும் கட்டழகியுமான இந்த இளம் மங்கை எங்கே? இவளுடைய ஒரு புன்னகையைப் பெறுவதற்காக அந்தக் கிழவர் என்ன காரியந்தான் செய்ய மாட்டார்?......

வெகு நேரம் சாலை ஓரத்தில் நின்று இவ்விதச் சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த பிறகு வந்தியத்தேவன் குதிரைமேல் ஏறிக் கொண்டு மெள்ள மெள்ள அதைத் தஞ்சைக் கோட்டையை நோக்கிச் செலுத்தினான்.

சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் பிரதான கோட்டை வாசலை அடைந்தான். கோட்டைக்குச் சற்றுத் தூரத்திலேயே நகரம் ஆரம்பமாகியிருந்தது. விதவிதமான பண்டங்கள் விற்கும் கடைவீதிகளும், பலவகைத் தொழில்களில் ஈடுபட்ட மக்கள் வாழும் தெருக்களும், கோட்டையைச் சுற்றி அடுக்கடுக்காக அமைந்திருந்தன. வீதிகளில் போவோரும் வருவோரும் பண்டங்கள் வாங்குவோரும் விலை கூறுவோரும் மாடு பூட்டிய வண்டிகளும் குதிரை பூட்டிய ரதங்களும் நிறைந்து எங்கும் ஓரே கலகலப்பாயிருந்தது.



அந்த வீதிகளுக்குள்ளே புகுந்து சென்று சோழநாட்டுப் புதிய தலைநகரத்தில் வாழும் மக்களையும் அவர்கள் வாழும் விதத்தையும் பார்க்க வந்தியத்தேவனுக்கு மிக்க ஆவலாயிருந்தது. ஆனால் அதற்கெல்லாம் இப்போது அவகாசம் இல்லை. வந்த காரியத்தை முதலில் பார்க்கவேண்டும். வேடிக்கை பார்ப்பதெல்லாம் பிற்பாடு வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தீர்மானத்துடன் வந்தியத்தேவன் தஞ்சை நகரின் பிரதான வாசலை அணுகினான். கோட்டை வாசலின் பிரம்மாண்டமான கதவுகள் அச்சமயம் சாத்தியிருந்தன. வாசலில் நின்ற காவலர்கள் மக்களை ஒதுங்கச் செய்து வீதி ஓரங்களில் நிற்கும்படி செய்துகொண்டிருந்தார்கள். மக்களும் ஒதுங்கி நின்றார்கள்; ஆம், அவரவர்கள் தங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு போவதற்குப் பதிலாக ஏதோ ஊர்வலம் அல்லது பவனி பார்ப்பதற்காகக் காத்திருப்பவர்களைப்போல் நின்றார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிகர் எல்லோருமே ஆவலுடன் நின்றார்கள்.

கோட்டை வாசலுக்கு முன்னால் சிறிது தூரம் வரை வெறுமையாகவே இருந்தது. வாசலண்டை காவலர்கள் மட்டும் நின்றார்கள்.

விஷயம் என்னவென்று தெரிந்துகொள்ள வந்தியத்தேவன் ஆவல் கொண்டான். எல்லோரும் ஒதுங்கி நிற்கும்போது, தான் மட்டும் கோட்டை வாசல் காப்பாளரிடம் சென்று முட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை. அதிலிருந்து வீண் வாதமும் சண்டையும் மூளலாம். இப்போது தனக்குக் காரியம் முக்கியமே தவிர வீரியம் பெரிது அல்ல. வீண் சண்டைகளில் இறங்க இது தருணமல்ல.

எனவே, வந்தியத்தேவன் கோட்டை வாசலைக் கவனிக்கக் கூடிய இடத்தில் வீதி ஓரத்தில் ஒதுங்கி நின்றான். பக்

கத்தில் கம்மென்று மலரின் மணம் வீசியது. திரும்பிப் பார்த்தான். ஒரு வாலிபன், திருநீறு ருத்ராட்சம் முதலிய சிவச் சின்னங்கள் தரித்தவன், இரண்டு கைகளிலும் இரண்டு பூக் கூடைகளுடன் நிற்பதைக் கண்டான்.

"தம்பி! எல்லாரும் எதற்காக வீதி ஓரம் ஒதுங்கி நிற்கிறார்கள்? ஏதாவது ஊர்வலம் கீர்வலம் வரப் போகிறதா?" என்று கேட்டான்.

"தாங்கள் இந்தப் பக்கத்து மனிதர் இல்லையா, ஐயா?"

"இல்லை, நான் தொண்டை நாட்டைச் சேர்ந்தவன்!"

"அதனால்தான் கேட்கிறீர்கள். நீங்களும் குதிரை மேலிருந்து இறங்கிக் கீழே நிற்பது நல்லது."

வாலிபனோடு பேசுவதற்குச் சௌகரியமாயிருக்கட்டும் என்று வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து குதித்தான்.

"தம்பி! எதற்காக என்னை இறங்கச் சொன்னாய்?" என்று கேட்டான்.

"இப்போது வேளக்காரப் படை அரசரைத் தரிசனம் செய்துவிட்டு கோட்டைக்குள்ளிருந்து வரப்போகிறது. அதற்காகத்தான் இத்தனை ஜனங்களும் ஒதுங்கி நிற்கிறார்கள்."

"வேடிக்கை பார்க்கத்தானே?"

"ஆமாம்."

"நான் குதிரைமேல் உட்கார்ந்து கொண்டு பார்த்தால் என்ன?"

"பார்க்கலாம். ஆனால் வேளக்காரப் படை வீரர்கள் உங்களைப் பார்த்து விட்டால் ஆபத்து."

"என்ன ஆபத்து? குதிரையைக் கொண்டு போய்விடுவார்களா?"

"குதிரையையும் கொண்டு போவார்கள். ஆட்களையே கொண்டு போய் விடுவார்கள். பொல்லாதவர்கள்."

"குதிரையையும் ஆளையும் கொண்டு போனால் சும்மா விட்டுவிடுவார்களா?"

"விடாமல் என்ன செய்வது? வேளக்காரப் படையார் வைத்ததே இந்த நகரில் சட்டம். அவர்களைக் கேள்வி கேட்பார் கிடையாது. பழுவேட்டரையர்கள்கூட வேளக்காரப் படை விஷயத்தில் தலையிடுவது கிடையாது."

இச்சமயத்தில் கோட்டைக்கு உட்புறத்தில் பெரிய ஆர்ப்பாட்ட ஆரவாரங்கள் கேட்டன. நகரா முழங்கும் சத்தம், பறைகள் கொட்டும் சத்தம், கொம்புகள் ஊதும் சத்தம் இவற்றுடன் பலநூறு மனிதர் குரல்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகளும் கலந்து எதிரொலி செய்தன.

வேளக்கார வீரர் படைகளைப்பற்றி வந்தியத்தேவன் நன்கு அறிந்திருந்தான். பழந்தமிழ் நாட்டில், முக்கியமாகச் சோழ நாட்டில் இது முக்கிய ஸ்தாபனமாக இருந்து வந்தது. 'வேளக்காரர்' என்பவர் அவ்வப்போது அரசு புரிந்த மன்னர்களுக்கு மெய்க்காப்பாளர் போன்றவர். ஆனால் மற்ற சாதாரண மெய்க்காப்பாளருக்கும் இவர்களுக்கும் ஒரு 'வித்தியாசம் உண்டு. இவர்கள் 'எங்கள் உயிரைக் கொடுத்தாவது அரசரின் உயிரைப் பாதுகாப்போம்' என்று சபதம் செய்தவர்கள். தங்கள் அஜாக்கிரதையினாலோ, தங்களை மீறியோ அரசர் உயிருக்கு அபாயம் நேர்ந்து விட்டால், துர்க்கையின் சந்நிதியில் தங்களுடைய தலையைத் தங்கள் கையினாலேயே வெட்டிக் கொண்டு பலியாவதாகச் சபதம் எடுத்துக் கொண்டவர்கள். அத்தகைய கடூர சபதம் எடுத்துக் கொண்ட வீரர்களுக்கு மற்றவர்களுக்கு இல்லாத சில சலுகைகள் இருப்பது இயல்புதானே?

கோட்டை வாசலின் கதவுகள் இரண்டும் படார், படார் என்று திறந்து கொண்டன.

முதலில் இரண்டு குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களது வலக் கையில் உயரப் பறந்த கொடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொடியின் தோற்றம் விசித்திரமாக இருந்தது. செந்நிறமான அக்கொடியில் மேலே புலியும், புலிக்கு அடியில்

கிரீடமும் சித்திரிக்கப்பட்டிருந்தன. கிரீடத்துக்கு அடியில் ஒரு பலி பீடமும், கழுத்து அறுபட்ட ஒரு தலையும், ஒரு பெரிய பலிக் கத்தியும் காட்சி அளித்தன. கொடியைப் பார்க்கச் சிறிது பயங்கரமாகவே இருந்தது.

கொடி தாங்கிய குதிரை வீரர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய ரிஷபம் இரண்டு பேரிகைகளைச் சுமந்து கொண்டு வந்தது. இரண்டு ஆட்கள் நின்று பேரிகைகளை முழங்கினார்கள்.

ரிஷபத்துக்குப் பின்னால் சுமார் ஐம்பது வீரர்கள் சிறு பறை, பெரும் பறை, தம்பட்டம் ஆகியவற்றை முழக்கிக் கொண்டு வந்தார்கள்.

அவர்களைத் தொடர்ந்து இன்னும் ஐம்பது பேர் நீண்டு வளைந்த கொம்புகளை 'பாம் பாம் பபாம்' என்று ஊதிக் கொண்டு வந்தார்கள்.

அவர்களுக்கும் பின்னால் வந்த வீரர்கள் ஆயிரம் பேர் இருக்கலாம். அவர்களில் பெரும்பாலோர் பின் வரும் வாழ்த்தொலிகளை இடி முழக்கக் குரலில் எழுப்பிக் கொண்டு வந்தார்கள்.

"பராந்தக சோழ பூமண்டல சக்கரவர்த்தி வாழ்க!"

"வாழ்க, வாழ்க!"

"சுந்தர சோழ மன்னர் வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"கோழி வேந்தர் வாழ்க!"

"வாழ்க, வாழ்க!"

"தஞ்சையர்கோன் வாழ்க!"

"வாழ்க, வாழ்க!"

"வீரபாண்டியனைச் சுரம் இறக்கிய பெருமாள் வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"மதுரையும் ஈழமும் தொண்டை மண்டலமும் கொண்ட கோஇராஜகேசரி வாழ்க!"

"வாழ்க வாழ்க!"

"கரிகால் வளவன் திருக்குலம் நீடூழி வாழ்க!"

"வாழ்க! வாழ்க!"

"துர்க்கை மாகாளி பராத்பரி பராசக்தி வெல்க!"

"வெல்க! வெல்க!"

"வீரப் புலிக்கொடி பாரெலாம் பரந்து வெல்க!"

"வெல்க! வெல்க!"

"வெற்றி வேல்!"

"வீர வேல்!"

நூற்றுக்கணக்கான வலிவுள்ள குரல்களிலிருந்து எழுந்த மேற்படி கோஷங்கள் கேட்போரை மெய் சிலிர்க்கச் செய்தன. கோட்டை வாசலின் வழியாக வந்தபோது அந்த கோஷங்கள் உண்டாக்கியபிரதித்வனிகளும் சேர்ந்து கொண்டன. வீதி ஓரங்களில் நின்ற மக்களில் பலரும் கோஷத்தில் கலந்து கொண்டார்கள்.

இவ்விதம், *வேளக்காரப் படை வீரர்கள் தஞ்சைக் கோட்டை வாசல் வழியாக வெளிவரத் தொடங்கி, வீதி வழியாகச் சென்று, தூரத்தில் மறையும் வரையில் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது.

இருபத்திமூன்றாம் அத்தியாயம்

அமுதனின் அன்னை

வேளக்கார வீரர் படை பெரிய கடைவீதியின் வழியாகப் போயிற்று. படையின் கடைசியில் சென்ற சில வீரர்கள் கடைத் தெருவில் சில திருவிளையாடல்களைப் புரிந்தார்கள். ஒருவன் ஒரு பட்சணக் கடையில் புகுந்து ஒரு கூடை நிறைய அதிரசத்தை எடுத்துக் கொண்டு வந்து மற்ற வீரர்களுக்கு விநியோகித்தான். பிறகு வெறுங்கூடையைக் கடைக்காரனுடைய தலையிலே கவிழ்த்தபோது, வீரர்களும் வீதியில் சென்றவர்களும் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று இரைந்து

* தமிழ்நாட்டின் தெய்வமான முருகனுக்கு 'வேளக்காரன்' என்று ஒரு பெயர் உண்டு என்பதை வாசகர்கள் அறிந்திருக்கலாம். 'பக்தர்களைக் காப்பாற்றுவதாகச் சபதம் பூண்ட தெய்வம்' என்பதனால் முருகனுக்கு அப்பெயர் வந்தது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

சிரித்தார்கள். இன்னொரு வீரன் வழியில் எதிர்ப்பட்ட ஒரு மூதாட்டியின் கையிலிருந்த பூக்கூடையைப் பிடுங்கினான். பூவையெல்லாம் வாரி வாரி இறைத்துக் கொண்டே, "பூமாரி



பொழிகிறதடா!" என்றான். அவன் வாரி வீசிய பூக்களைப் பிடிக்க முயன்ற வீரர்கள் குதித்தும் சிரித்தும் கொம்மாளமடித்தார்கள். எதிரில் வந்த ஒரு மாட்டு வண்டியை இன்னொரு வீரன் நிறுத்தி, மாட்டை வண்டியிலிருந்து பூட்டு அவிழ்த்து விரட்டி அடித்தான். மாடு மிரண்டு மக்கள் கூட்டத்திடையே புகுந்து சிலரைத் தள்ளிக் கொண்டு ஓடியது. மீண்டும் ஒரே கோலாகலச் சிரிப்புத்தான்!

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன், "ஆகா! பழுவேட்டரையரின் வீரர்களைப் போல் இவர்களும் விளையாடுகிறார்கள்.

இவர்களுடைய விளையாட்டு மற்றவர்களுக்கு வினையாக இருக்கிறது. நல்ல வேளை, இவர்களுடைய பார்வை நம்மீது விழாமல் ஒதுங்கி நின்றோம். இல்லாவிடில் ஒரு சண்டை ஏற்பட்டிருக்கும். வந்த காரியம் கெட்டுப்போயிருக்கும்'' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசமும் அவனுக்குப் புலனாயிற்று. வேளக்காரப் படை வீரர்களின் விளையாடல்களை இங்குள்ள ஜனங்கள் அவ்வளவாக வெறுக்கவில்லை. அவர்களுடைய கொம்மாளத்தில் ஜனங்களும் சேர்ந்து சிரித்துக் குதூகலித்தார்கள்!

இதைப் பற்றிக் கேட்கலாம் என்று திரும்பிப் பார்த்தபோது பூக்குடலைகளுடன் நின்ற சிறுவனை வந்தியத்தேவன் காணவில்லை. கூட்டத்திலும் கோலாகலத்திலும் அந்த வாலிபன் எங்கேயோ போய்விட்டான். ஒரு வேளை அவனுடைய வேலையைப் பார்க்கப் போயிருக்கக் கூடும்.

வேளக்காரப் படை மாலையில் கோட்டையிலிருந்து வெளியேறிய பிறகு மற்ற யாரையும் உள்ளே விடுவதில்லையென்று வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இரவு பகல் எந்த நேரத்திலும் கோட்டைக்குள் பிரவேசிக்கும் உரிமை பெற்றவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அமைச்சர்களும், தண்டநாயகர்களுந்தான். பழுவேட்டரையர்களின் குடும்பத்தாருக்கும் அவ்வுரிமை உண்டு என்று வந்தியத் தேவன் தெரிந்து கொண்டான். எனவே, இராத்திரியே கோட்டைக்குள் போக வேண்டும் என்ற உத்தேசம் அவனுக்கு மாறிவிட்டது. தன்னிடமிருந்த இலச்சினை மோதிரத்தைக் காட்டிச் சோதனை செய்ய வந்தியத்தேவன் விரும்பவில்லை. அதைவிட இரவு கோட்டைக்கு வெளியிலேயே தங்கி நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு நாளை உதயத்துக்குப் பிறகு கோட்டைக்குள் செல்வதே நல்லது. இராத்திரியில் அப்படியே கோட்டைக்குள் பிரவேசித்தாலும் அரசரைத் தரிசித்து ஓலை கொடுப்பது இயலாத காரியமேயல்லவா?

கோட்டை மதிளைச் சுற்றிலும் இருந்த வீதிகளின் வழியாக வந்தியத்தேவன் வேடிக்கை பார்த்துக் கொண்டே மெதுவாகச் சென்றான். அன்று பல காத தூரம் பிரயாணம் செய்திருந்த அவனுடைய குதிரை மிகக் களைத்திருந்தது. சீக்கிரத்தில் அதற்கு ஓய்வு கொடுக்க வேண்டியது தான். இல்லாவிடில் நாளைக்கு அவசியம் ஏற்படும்போது இக்குதிரையினால் பயனில்லாமல் போய்விடும்! வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் விரைவில் கண்டுபிடித்தாக வேண்டும்!

தஞ்சைபுரி அப்போது புதிதாகப் பல்கிப் பெருகிப் பரந்து வளர்ந்து கொண்டிருந்த நகரம். அதிலும் அப்போது மாலைநேரம். நூற்றுக் கணக்கான வீதி விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிவீசத் தொடங்கியிருந்தன.

வீதிகளெல்லாம் ஜே ஜே என்று ஒரே ஜனக்கூட்டம். வெளியூர்களிலிருந்து பல அலுவல்களின் நிமித்தமாக வந்தவர்கள் அங்குமிங்கும் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் சோழநாட்டுப் பட்டணங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் வந்தவர்களும் இருந்தார்கள். புதிதாகச் சோழ சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்த நாடுகளிலிருந்து வந்தவர்களும் காணப்பட்டார்கள். பொருனை நதியிலிருந்து பாலாற்றங்கரை வரையிலும் கீழைக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரையிலும் பரந்திருந்த தேசங்களிலிருந்து தலைநகருக்குப் பலர் வந்திருந்தார்கள். விந்திய மலைக்கு வடக்கேயிருந்து வந்தவர்களும் கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்தவர்களுங் கூடச் சிலர் அம்மாநகரின் வீதிகளில் ஆங்காங்கே தோன்றினார்கள்.

ஆப்பம், அதிரசம் முதலிய தின் பண்டங்கள் விற்ற கடைகளில் மக்கள் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்து அப் பண்டங்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். வாழைப் பழங்களும் வேறு பலவிதக் கனிகளும் மலை மலையாகக் குவிந்து கிடந்தன. பூக்கடைகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை.

முல்லையும் மல்லிகையும் திரு ஆத்தியும் செண்பகமும் புஷ்பக் குன்றுகளைப் போல் காட்சி தந்தன. அந்த மலர்க் குன்றுகளைச் சுற்றிப் பெண்மணிகள் வண்டுகளைப் போல் ரீங்காரம் செய்து கொண்டு மொய்த்தார்கள்

புஷ்பக் கடைகளினருகில் சென்றதும் வந்தியத்தேவன் அந்தப் பூக்கார வாலிபனை நினைத்துக் கொண்டான். அவனை மறுபடியும் பார்க்கக் கூடுமானால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்? இந்த நகரில் வசதியாகத் தங்குவதற்கு ஓரிடம் அவனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமல்லவா?...... இப்படி எண்ணியபோதே சற்றுத் தூரத்தில் அந்த வாலிபன் வந்து கொண்டிருப்பதை வந்தியத்தேவன் கண்டான். குதிரையிலிருந்து இறங்கி அவனை அணுகினான்.

''தம்பி! பூக்குடலைகளில் ஒன்றையும் காணோமே? பூவெல்லாம் எங்கே? விற்றாகி விட்டதா?'' என்றான்.

''விற்பதற்காக நான் பூக்கொண்டு வரவில்லை. கோயில் பூஜைக்காகப் பூக்கொண்டு வந்தேன். பூவைக் கொடுத்தாகி விட்டது. வீட்டுக்குத் திரும்பிப் போகிறேன்.''

''எந்தக் கோயிலுக்கு நீ இந்தப் புஷ்பக் கைங்கரியம் செய்கிறாய்?''

''தளிக்குளத்தார் ஆலயம் என்று கேட்டதுண்டா?''

''ஓகோ! தஞ்சைத் தளிக்குளத்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கோவில்தான் போலிருக்கிறது. பெரிய கோவிலா அது?''

''இல்லை; சிறிய கோவில்தான். கொஞ்ச காலமாக இத்தஞ்சையில் துர்க்கையம்மன் கோவிலுக்குத்தான் மகிமை அதிகம். அங்கேதான் பூஜை, பொங்கல், பலி, திருவிழா ஆர்ப்பாட்டங்கள் அதிகம். அரச குடும்பத்தாரும் பழுவேட்டரையர்களும் துர்க்கை அம்மன் கோவிலுக்குத்தான் அதிகமாகப் போகிறார்கள். தளிக்குளத்தார் கோயிலுக்கு அவ்வளவு மகிமை இல்லை. தரிசனம் செய்ய ஜனங்கள் அவ்வளவாக வருவதில்லை...''

''நீ இந்தப் புஷ்பக் கைங்கரியம் செய்து வருகிறாயே? இதற்காக, ஏதேனும் சன்மானம் உண்டா?''



''எங்கள் குடும்பத்துக்கு இதற்காக மானியம் இருக்கிறது. என் பாட்டனார் காலத்திலிருந்து கண்டராதித்த சக்கரவர்த்தி விட்ட நிவந்தம் உண்டு. தற்சமயம் நானும் என் தாயாரும் இந்தக் கைங்கரியத்தைச் செய்து வருகிறோம்.''

''தளிக்குளத்தார் கோயில் செங்கல் திருப்பணியா? அல்லது கருங்கல் பணி செய்திருக்கிறார்களா?'' என்று வல்லவரையன் கேட்டான். அவன் வருகின்ற வழியில் பல செங்கல் கோயில்களுக்குக் கருங்கல் திருப்பணி நடந்து கொண்டிருப்பதைப் பார்த்திருந்தபடியால் இவ்விதம் கேட்டான்.

''இப்போது செங்கல் கோயில் தான். கருங்கல் திருப்பணி விரைவில் தொடங்கும் என்று கேள்வி. இந்தத் திருப்பணியை உடனே நடத்த வேண்டும் என்று பழையாறைப் பெரிய பிராட்டியார் விரும்புகிறாராம். ஆனால்...'' என்று அந்த வாலிபன் தயங்கி நிறுத்தினான்.

''ஆனால் என்ன?......''

''பராபரியாகக் கேள்விப்பட்டதையெல்லாம் சொல்வதில் என்ன பயன்? பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இதுவோ நாற்சந்தியும் கூடும் இடம். நம்மைச் சுற்றிலும் ஜனங்கள்.....''

''இந்த மாதிரி இடத்திலே நின்றுதான் தைரியமாக எந்த ரகசியமும் பேசலாம். இந்தப் பெருங்கூட்டத்

திலும் இரைச்சலிலும் நம்முடைய பேச்சு யார் காதிலும் விழாது.''

''பேசுவதற்கு ரகசியம் என்ன இருக்கிறது?'' என்றான் அந்த வாலிபன், வந்தியத்தேவனைக் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்த்து.

ஆகா! இந்தப் பிள்ளை நல்ல புத்திசாலி! இவனுடன் சிநேகம் செய்து கொள்வதில் லாபம் உண்டு! பல விஷயங்களை அறியலாம்! ஆனால் இவன் மனத்தில் வீண் சந்தேகத்தை உண்டாக்கக் கூடாது. — இவ்விதம் வந்தியத்தேவன் எண்ணி, ''ஆமாம்; இரகசியம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லைதான். போனால் போகட்டும், தம்பி! இரவு எங்கேயாவது நான் நிம்மதியாகத் தூங்க வேண்டும். வெகு தூரம் பிரயாணம் செய்து மிகவும் களைப்படைந்திருக்கிறேன். எங்கே தங்கலாம்? ஒரு நல்ல விடுதிக்கு வழி காட்டி எனக்கு உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

''இந்த நகரில் தங்குவதற்கு இடங்களுக்கு என்ன குறைவு? சத்திரங்கள் எத்தனையோ இருக்கின்றன. அயல் நாடுகளிலிருந்து வருகிறவர்களுக்கென்று ஏற்பட்ட இராஜாங்க விடுதிகளும் இருக்கின்றன. ஆனால், உங்களுக்கு இஷ்டமாயிருந்தால்......''

''தம்பி! உன் பெயர் என்ன?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''அமுதன்; சேந்தன் அமுதன்.''

''அடாடா! எவ்வளவு நல்ல பெயர்? கேட்கும்போதே என் நாவில் அமுது ஊறுகிறதே... எனக்கு இஷ்டமாயிருந்தால் உன்னுடைய வீட்டுக்கு வந்து தங்கலாம் என்றுதானே நீ சொல்லத் தொடங்கினாய்?''

''ஆமாம், அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''என்னிடம் மந்திரவித்தை இருக்கிறது. அதனால் தெரிந்து கொண்டேன். உன் வீடு எங்கே இருக்கிறது?''

''நகர எல்லையைத் தாண்டிக் கூப்பிடு தூரத்தில் எங்கள் பூந்தோட்டம் இருக்கிறது. தோட்டத்துக்குள்ளேயே எங்கள் வீடும் இருக்கிறது'' என்றான் அமுதன்.

''ஆகா! அப்படியானால் உன் வீட்டுக்கு நான் வந்தே தீருவேன். இந்தப் பட்டணத்துச் சந்தடியில் என்னால் இன்றிரவைக் கழிக்க முடியாது. மேலும் உன்னைப் போன்ற உத்தமப் புதல்வனைப் பெற்ற உத்தமியைத் தரிசிக்க விரும்புகிறேன்.''

''என்னைப் பெற்ற அன்னை உத்தமிதான்; ஆனால் துர் பாக்கியசாலி...''

''அடாடா! ஏன் அவ்வாறு சொல்கிறாய்? ஒருவேளை உன் தந்தை......''

''என் தந்தை இறந்துதான் போனார். ஆனால் அதுமட்டுமில்லை. என் தாய் பிறவியிலேயே துர்ப்பாக்கியசாலி. பார்த்தால் தெரிந்து கொள்வீர்கள். வாருங்கள் போகலாம்.''

அரை நாழிகை நேரம் நடந்து அவர்கள் நகர்ப்புறத்துக்கு அப்பாலிருந்த பூந்தோட்டத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இரவில் மலரும் பூக்களின் இனிய மணம் வந்தியத்தேவனுக்கு அபூர்வ சுக மயக்கத்தை உண்டாக்கியது. நகரத்தின் வீதிகளில் எழுந்த கோலாகல இரைச்சலும் சந்தடியும் அங்கே அவ்வளவாகக் கேட்கவில்லை.

பூந்தோட்டத்தின் மத்தியில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. பக்கத்தில் இரு குடிசைகள் இருந்தன. தோட்ட வேலையில் உதவி செய்த இரு குடும்பத்தார் அக்குடிசைகளில் இருந்தார்கள். அவர்களில் ஒருவனை அமுதன் அழைத்து வந்தியத்தேவனுடைய குதிரைக்குத் தீனி வைத்து மரத்தில் கட்டி வைக்கும்படி கூறினான்.

பிறகு, வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். அமுதனுடைய தாயாரைப் பார்த்ததும் வந்தியத்தேவனுக்கு அவளுடைய துர்ப்பாக்கியம் இத்தகையது என்று தெரிந்துவிட்டது. அந்த மூதாட்டி பேசும் சக்தியற்ற ஊமை. காதும் கேளாது என்று தெரிந்தது. ஆனால் அந்த மாதரசியின் முகத்தில் கருணையும் அன்பும் நிறைந்து ததும்பியதை வந்தியத்தேவன் கண்டான். கூரிய அறிவின் ஒளியும் அம்முகத்திலிருந்து வீசியது. பொதுவாக, ஏதாவது ஒரு அங்கத்தில் ஊனமுள்ளவர்கள் மற்றபடி சிறந்த

அறிவுக்கூர்மையுள்ளவர்களாகவிளங்குவது சிருஷ்டி விசித்திரங்களில் ஒன்று அல்லவா?

அமுதன் சில சமிக்ஞைகள் செய்ததும் அந்த மூதாட்டி வந்திருப்பவன் அயல் தேசத்திலிருந்து வந்த விருந்தாளி என்று தெரிந்து கொண்டாள். முகபாவத்தினாலேயே தன்னுடைய பரிவையும் வரவேற்பையும் தெரிவித்தாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் இலை போட்டு அந்த அம்மாள் உணவு பரிமாறினாள். முதலில் இடியாப்பமும் இனிப்பான தேங்காய்ப்பாலும் வந்தன. அந்தமாதிரி இனிய பலகாரத்தை வந்தியத்தேவன் தன் வாழ்நாளில் அருந்தியதில்லை. பத்துப் பன்னிரண்டு இடியாப்பமும், அரைப்படி தேங்காய்ப்பாலும் சாப்பிட்டான். பிறகு புளிக்கறியும் சோளமாப் பணியாரமும் வந்தன. அவற்றையும் ஒரு கை பார்த்தான். அப்படியும் அவன் பசி அடங்கவில்லை. கடைசியாக, கால்படி அரிசிச் சோறும் அரைப்படி தயிரும் நுங்கினான்! பிறகுதான் அவன் இலையிலிருந்து எழுந்தான்.

சாப்பிடும்போதே சில விஷயங்களை அமுதனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். தஞ்சைக் கோட்டைக்குள்ளே அப்போது சுந்தர சோழ சக்கரவர்த்தியையும் அவருடைய அரண்மனைப் பரிவாரங்களையும் தவிர, இன்னும் முக்கியமாக யார் யார் இருக்கிறார்கள் என்று விசாரித்தான்.

பெரிய பழுவேட்டரையர், சின்னப் பழுவேட்டரையர் இவர்களின் மாளிகைகளும் பரிவாரங்களும் அங்கு இருந்தன. தன பொக்கிஷம், தானிய பண்டாரம் இரண்டும் கோட்டைக்குள் இருந்தபடியால் அவற்றைப் பரிபாலிக்கும் அதிகாரிகளும் கணக்கர்களும் இருந்தார்கள். சுந்தர சோழரின் அந்தரங்க நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் பாத்திரரான **அநிருத்த பிரமராயர்** என்னும் அமைச்சரும் திருமந்திர ஓலை நாயகரும் கோட்டைக்குள்ளேதான் வசித்தார்கள். மற்றும் சின்னப் பழுவேட்டரையரின் தலைமையில் தஞ்சைக் கோட்டையைக் காவல் புரிந்தவீரர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும் அங்கேயே தங்கியிருந்தார்கள். பொன் வெள்ளி நகை வியாபாரிகளும், நவரத்தின வியாபாரிகளும், பொன்னுசாரிகளும் கோட்டைக்குள் இடம் அளிக்கப்பட்டிருந்தார்கள். பெரிய பழுவேட்டரையரின் கீழ் வரி விதிக்கும் வேலை பார்த்த நூற்றுக்கணக்கான அலுவலர்கள் இருந்தனர். துர்க்கையம்மன் கோவில் கோட்டைக்குள்ளேதான் ஒரு மூலையில் இருந்தது. கோவில் பூசாரிகளும் பணிவிடையாளரும் கணிகையரும் கோவிலுக்கு அருகில் குடியிருந்தார்கள்.

இதையெல்லாம் தெரிந்து கொண்ட பிறகு, "அமைச்சர்கள் அனைவரும் தற்சமயம் கோட்டையில் இருக்கிறார்களா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"எல்லாரும் எப்படி இருப்பார்கள்? பற்பல காரியமாக வெளியிலே போய்க் கொண்டும் வந்து கொண்டுந்தான் இருப்பார்கள். அநிருத்த பிரமராயர் சில காலமாகவே நகரில் இல்லை. அவர் சேர நாடு சென்றிருப்பதாகக் கேள்வி. பெரிய பழுவேட்டரையர் நாலு தினங்களுக்கு முன்னால் வெளியே சென்றார். கொள்ளிடத்துக்கு வடக்கே நடுநாட்டுக்குச் சென்றதாகக் கேள்வி."

"போனவர் ஒருவேளை திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? உனக்குத் தெரியாதாக்கும்!"

"இன்று சாயங்காலம் பழுவூர் இளையராணியின் பல்லக்கு வந்தது. கோட்டை வாசலில் நானே பார்த்தேன். ஆனால் பழுவேட்டரையர் வரவில்லை. ஒருவேளை வழியில் எங்கேனும் தங்கிவிட்டு நாளை வரக்கூடும்."

"தம்பி! இளவரசர் மதுராந்தகத் தேவரும் கோட்டைக்குள்ளேதானே தங்கியிருக்கிறார்?"

"ஆமாம்; பழுவேட்டரையர் அரண்மனைக்குப் பக்கத்தில் மதுராந்தகரின் மாளிகை இருக்கிறது. சின்னப் பழுவேட்டரையரின் திருமகளை மணம் புரிந்த மருகர் அல்லவா?"

"ஓஹோ! அதுவும் அப்படியா? எனக்கு இதுவரையில் தெரியாதே?"

"ரொம்பப் பேருக்குத் தெரியாது

தான். சக்கரவர்த்தியின் தேக அசௌகரியத்தை முன்னிட்டுத் திருமணத்தைக் கோலாகலமாக நடத்தவில்லை.''

''நல்லது; மதுராந்தகத் தேவர் இப்போது கோட்டைக்குள்ளேதானே இருக்கிறார்?''

''கோட்டைக்குள்ளேதான் இருக்க வேண்டும். ஆனால் மதுராந்தகத் தேவர் சாதாரணமாக வெளிவருவதில்லை. மக்கள் அவரைப் பார்க்க முடிகிறதும் இல்லை. சிவ பக்தியில் ஈடுபட்டுப் பெரும்பாலும் யோகத்திலும் தியானத்திலும் பூஜையிலும் காலங்கழிப்பதாகக் கேள்வி...''

''ஆனாலும் இத்தனை நாளைக்குப் பிறகு கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாரே?''

''ஆமாம்; அது கொஞ்சம் வியப்பான காரியந்தான். கலியாணத்துக்குப் பிறகு மாப்பிள்ளைத் தேவரின் மனமே மாறிப் போயிருப்பதாயும் சொல்கிறார்கள். நமக்கென்ன அதைப் பற்றி? பெரிய இடத்துப் பேச்சுப் பேசாமலிருப்பதே நல்லது...''

சேந்தன் அமுதனிடம் இன்னும் பல விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் வந்தியத் தேவனுக்கு இருந்தது. ஆனால் அதிகமாக ஏதேனும் கேட்டுச் சந்தேகத்தைக் கிளப்பிவிட அவன் விரும்பவில்லை. இத்தகைய சாதுப்பிள்ளையின் சிநேகம் தனக்குப் பேருதவியாயிருக்கும். தஞ்சையில் தங்க இம்மாதிரி ஒரு வீடு அகப்பட்டதும் தன்னுடைய அதிர்ஷ்டந்தான். அதையெல்லாம் கெடுத்துக் கொள்வானேன்? மேலும், நீண்ட பிரயாணக் களைப்புடன் முதல் நாள் இரவு கண் விழித்ததும் சேர்ந்து கொண்டது. கண்ணைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. சேந்தன் அமுதன் அவனுடைய நிலையை அறிந்து விரைவில் படுக்கைபோட்டுக் கொடுத்தான்.

தூக்க மயக்கத்தில் கடைசியாக வந்தியத்தேவனுடைய மனத்தில் பழுவூர் இளையராணியின் திருமுகம் வந்தது! அப்பப்பா! என்ன அழகு! என்ன ஜொலிப்பு! அந்தமாயமோகன வடிவத்தைத் திடீரென்று அவன் பார்த்ததும் அடியோடு செயல் இழந்து கண்கொட்டாமல் திகைத்து நின்றது இன்னொரு அனுபவத்தை அவனுக்கு நினைவூட்டியது. சிறு பிராயத்தில் ஒரு சமயம் காட்டு வழியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென்று படமெடுத்து ஆடிய பாம்பு ஒன்று அவன் முன் எதிர்ப்பட்டது. அதன் அழகே அழகு! கவர்ச்சியே கவர்ச்சி! வந்தியத்தேவனால் பாம்பின் படத்திலிருந்து கண்ணை அகற்றவே முடியவில்லை. கண் கொட்டவும் முடியவில்லை. பார்த்தது பார்த்தபடி நின்றான். பாம்பும் ஆடிக் கொண்டேயிருந்தது! பாம்பு ஆடிய போது அதற்கிணங்க, இவன் உடம்பும் ஆடியது. — இதன் முடிவு என்ன ஆகியிருக்குமோ தெரியாது. திடீரென்று ஒரு கீரிப்பிள்ளை வந்து பாம்பின் மீது பாய்ந்தது. இரண்டும் துவந்த யுத்தம் தொடங்கின. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வந்தியத்தேவன் ஒரே ஓட்டமாக ஓடிவந்துவிட்டான்!......

சிச்சி! என்ன உதாரணம்! இந்தப் புவனமோகினியான சுந்தராங்கியைப் படமெடுத்த பாம்புக்கா ஒப்பிடுவது? இவளுடைய பால்வடியும் முகத்தை ஒருதடவை பார்த்தாலும் பசி தீர்ந்துவிடுமே?... நாளைக்கு அவளை மறுபடி காணப் போகிறோமல்லவா! அவளுடைய குரலிலேதான் என்ன மதுரம்! இவள் ஒரு அபூர்வமான அழகிதான். ஆனால் குடந்தை ஜோதிடர் வீட்டிலும் அரிசிலாற்றங்கரையிலும் பார்த்த அந்த இன்னொரு பெண்?...... அவளுடைய முகத்திலும் காந்தி ஒளிவிட்டது! அழகு சுடர் விட்டது!... இரண்டு முகங்களும் சுந்தர முகங்களாயினும் அவற்றுக்குள் எத்தனை வேற்றுமை! அதில் கம்பீரமும் பெருந்தன்மையும்; இதில் மோகனமும் கவர்ச்சியும்... இப்படி அவன் உள்ளம் அந்த இரு மங்கையரின் முகங்களையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்த போது, மற்றொரு மங்கை வந்து குறுக்கிட்டாள். சர்வாதிகாரக் கொடுங்கோல் அரசியான நித்திரா தேவி வந்தியத்தேவனைப் பரிபூரணமாக ஆட்கொண்டாள்.

(தொடரும்)

தங்கமும் தருதலையும்

"அடடே பரசுவா வா... வா... எப்பப்பா வந்தே டெல்லியிலிருந்து?" என்னை பலமாக வரவேற்றான் என் நண்பன் சங்கரன்.

"நேத்து சாயங்காலம்தான் வந்தேன். பொண்ணு கல்யாணத்தை ஜாம்ஜாம்னு நடத்தினேன்னு கேள்விப்பட்டேன். சந்தோஷமாயிருந்தது. அந்தச் சமயம் பார்த்து, என் பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை. அதுதான் வர முடியலை..."

"அது சரி, புவனா இப்போ எங்கிருக்கா?"

"மெட்ராஸிலதான் இருக்கா. பார்வதம், பரசு வந்திருக்கான் பாரு. காப்பி கொண்டு வா!" உள்ளே நோக்கிக் குரல் கொடுத்தான் சங்கரன்.

பார்வதம் என்னிடம் காப்பியைக் கொண்டு வந்து நீட்டினாள்.

"பொண்ணு எப்படியிருக்கா மாமி?" என்று நான் கேட்டதுதான் தாமதம்.

"பொண்ணு சௌக்யமா இருக்கா. மாப்பிள்ளை அவளை அருமையா வெச்சிண்டிருக்கார். இந்த ஆறு மாதத்துல நாலு புடைவை வாங்கித் தந்திருக்கார். புதுசா ஒரு நெக்லஸ் கூட வாங்கிண்டிருக்காளாம். போன மாசம் இந்த ரெண்டு பசங்களும்கூட ஒரு வாரம் அங்கே போய் இருந்துட்டு வந்தா!" பார்வதத்தின் குரலில் பெருமிதம் பொங்கி வழிந்தது.

"இதைப் பாருங்க மாமா" சங்கரனின் இரண்டாவது பெண் நந்தினி ஒரு பையை நீட்டினாள்.

வாங்கிப் பார்த்தேன்.

அதில் "ஆரஞ்சுக் கலரில் பூப்போட்ட பாவாடைத் துணியும் சட்டைத் துணியுமிருந்தன.

"பலே! பலே! அத்திம்பேர் வாங்கிக் கொடுத்தாரா?"

"ஆமாம் மாமா. விசுவுக்கும் ஒரு 'பென் ஸெட்' வாங்கிக் கொடுத்தார்!" நந்தினியின் சந்தோஷம் எனக்குப் புரிந்தது.

"ஹீ ஈஸ் எ நைஸ் ஜென்டில்மேன் மாமா. கொஞ்சம்கூட கர்வமில்லை. என் கூடக் கிரிக்கெட் விளையாடினார். அக்காவை 'புவன், புவன்'னு கூப்பிடறதே சந்தோஷமாயிருக்கு" விசு தன் பங்குக்குக் கூறினான்.

எனக்கும் எல்லாவற்றையும் கேட்டு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

"என்ன மாமி, ஏதாவது விசேஷம் உண்டா?"

"நேத்துத்தான் லெட்டர் வந்தது. மூன்று மாசமாறதாம். ஒரே தலை சுத்தலும் வாந்தியுமாயிருக்குன்னு எழுதியிருக்கா. அதுதான் கவலையாயிருக்கு."

"நீ என்னத்துக்குக் கவலைப்படறே? அதுதான் அவளே எழுதியிருக்காளே மாப்பிள்ளையே சமைச்சுடறார். நீ கவலைப்படாதேன்னு" சங்கரனின் சந்தோஷம் அவர் சர்வாங்கத்திலும் தெரிந்தது.



"சரி சங்கரா, அப்ப நான் வர்றேன். உன் மாப்பிள்ளையைப் பத்திக் கேட்கக் கேட்க என் மனம் ரொம்பச் சந்தோஷப்படறது". எழுந்தேன்.

"தங்கமான மாப்பிள்ளை கிடைச்சுட்டார் பரசு. அடுத்து, பெரியவன் முரளிக்குத்தான் கல்யாணம் பண்ணணும்!" வாசல் வரை வந்து என்னை வழியனுப்பினான் சங்கரன்.

அடுத்த மாதமே அவன் பெரிய பிள்ளை முரளிக்கும், அமோகமாகத் திருமணம் நடந்தது.

இரண்டு, மூன்று மாதங்களாக ஆபிஸில் வேலை அதிகமாக இருந்ததால் சங்கரன் வீட்டுப் பக்கமே போக முடியவில்லை.

சரி இன்றாவது போய் வருவோமென்று கிளம்பினேன்.

"வா, பரசு!"

வழக்கமாகக் கலகலப்பாக இருக்கும் சங்கரன் தீன ஸ்வரத்தில் என்னை வரவேற்றான்.

பார்வதத்தின் முகமும் சரியாக இல்லை.

"என்ன மாமி டல்லடிக்கறான் சங்கரன்?"

"பின்னே, இந்த மாதிரி ஊதாரிப் பிள்ளையைப் பெத்ததுக்குப் பெருமிதத்தோடவா இருக்க முடியும்?" வெடித்தாள் பார்வதம்.

"முரளியையா சொல்றீங்க!" எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஆமாம். அவனையேதான் சொல்றேன். கல்யாணமாகி ஆறு மாசம்தானே ஆறது. அதுக்குள்ளே நாலு புடைவை வாங்கிட்டான் பெண்டாட்டிக்கு. அவளுக்குப் புதுசா மோதிரம் ஒண்ணும் பண்ணிப் போட்டிருக்கானும். தேவைதானா இதெல்லாம்! இன்னும்...." பார்வதத்தைத் தொடரவிடவில்லை சங்கரன்.

"இதெல்லாம் வுடும். பெண்டாட்டிக்கு மசக்கைன்னு இவனே சமைக்கறானும். ஊர் உலகத்துல எவனுமே பிள்ளை பெத்துக்கலையா? என்னவோ ஆட்டமா ஆடறான். இதைப் பார்த்துட்டு வந்த எங்க மாமா என் கிட்ட சொன்னப்போ, நாக்கைப் பிடுங்கிக்கலாம் போலிருந்தது!" சங்கரன் குரலில் வெறுப்புத் தெரிந்தது.


"உங்களுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். அண்ணன் வீட்டுக்குப் 'போ, போ'ன்னு என்னையும் விசுவையும் துரத்தினீங்க. என்ன ஆச்சு? அவன் மன்னி தங்கைக்குச் 'சல்வார் கமீஸ் என்ன, தம்பிக்குக் கிரிக்கெட் பேட், பந்து என்ன' என்று வாங்கிக் குடுத்துக் கொஞ்சிண்டிருக்கான். ச்சீ..." நந்தினி பொரிந்து தள்ளினாள்.

கடைசியாக விசுவைப் பார்த்தேன். அவன் தானே பாக்கி. "மொத்தத்துல அவன் பெண்டாட்டிகிட்ட 'வத்சு, வத்சு'ன்னு நாயாட்டமாக் குழைஞ்சுண்டு கிடக்கிறான் மாமா. யூஸ்லெஸ் ஃபெல்லோ" விசு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்னவோ பரசு, எனக்கு மனசே சரியில்லை நமக்குன்னு இப்படியொரு தறுதலைப் பிள்ளை வாய்ச்சுதேனுருக்குடா" என்றான் சங்கரன்.

ஆறு மாதம் முன்பு மருமகன் செய்ததைத்தானே மகன் இப்பொழுது செய்து கொண்டிருக்கிறான். மருமகன் செய்தால் தங்கம், மகன் செய்தால் தறுதலையா? எனக்குத் தலை சுற்றியது.

— லதா ராஜாராம்



மோகம் என்பது இதுதானோ?

21

சோர்ந்து, சோர்ந்து உட்காரும் மகளைப் பார்த்து ஞானத்திற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. வரவரப் புவனா வின் போக்கே சரியில்லை. ஒரு வருட காலத்திற்குள் மளமளவென்று ராகம் பாடுமளவிற்குத் தேர்ந்துவிட்டாள் என்று இவள் மகிழ்ந்தது போக, "உங்க பொண்ணுக்குப் பாட்டில் அக்கறையே இல்லேம்மா. ஏதாவது தவறைச் சுட்டிக்காட்டினா சிடுசிடுன்னு விழுது..." என்று பாட்டு வாத்தியார் வேறு புகார் செய்தார். ஓரிரு முறை ஆத்திரத்தில் ஞானம் புவனாவை மனநிறைவு கொண்ட மட்டும் அடித்ததும் உண்மையே.

"ஏண்டி... உனக்காக நான் உசிரைக் கொடுத்துக்கிட்டுப் புருசன், மகள் எல்லாரையும் விட்டுட்டு இந்தப் பட்டணத்துலே வந்து அல்லாடறேன். நீயானா திமிர் பிடிச்சு அலையறையே. பாட்டுக் கத்துக்க இஷ்டமில்லைன்னா சொல்லித் தொலையேன். நான் பெத்த பெண்ணே எனக்கு எமனாயிடுத்துன்னு தலை முழுகிடறேன். ஏண்டி, நான் இவ்வளவு கத்தறேன். நீயானா கல்லுளி மங்கனாட்டம் நிக்கறே" என்று ஞானம் அலற, புவனா உண்மையிலேயே கல்லுளிமங்கன் போல் இடுப்பில் இருகைகளையும் பதித்து, கண்களை உருட்டி விழித்தவாறு தன் தாயை முறைத்தபடி நின்றாள்.

"என்னடீ... வாயிலே கொழுக்கட்டையா அடைச்சிருக்கு? நான் பெரிய பாடகி ஆவறதுக்கா பட்டணத்துக்கு வந்தேன். உன்னை நல்லாக் கொண்டு வரணும்னுதானே வந்தேன்."

"ஏன், உனக்கும்தான் குரல் நல்லாயிருக்கு. நீயே பாட்டுக் கத்துக்கிட்டுப் பெரிய பாடகியா ஆயிருக்கலாமே! என்னை ஏன் இங்கே கூட்டிக்கிட்டு வந்தே?"

கூரிய ஆயுதமாகப் புவனாவின் பேச்சு அவள் மார்பில் பாய, அவள் திகைத்து நின்றாள். தன் பெரிய கண்களைப் புவனா கோபத்துடன் உருட்டியதும், சற்றும் கலங்காமல் உறுத்துப் பார்த்ததும், அவளைக் குலை நடுங்கச் செய்தன. தான் செல்லும் பாதை சரியா என்பது பற்றிய குழப்பம், இப்போது புவனாவின் தாக்கலால் பெருக, கையாலாகத்தனம் அழுகையாகவும், புலம்பலாகவும் வெடித்தெழுந்தது. "பெத்தவன்னு பயமில்லாம, ஏண்டி இப்படி மட்டு, மரியாதையில்லாம பேசறே. உனக்காகத்தானே உங்கப்பாவைக் கூடப் பிரிஞ்சு வாழறேன்?"

"அம்மா, சும்மா இந்தக் கதையெல்லாம் என்கிட்டே வச்சுக்காதே. நான் இனிமேலும் பாப்பா இல்லே. எனக்காக மட்டும்தானா, நீ இங்கே வசிக்கறே. உனக்கு இங்கே ஜாலியா இருக்கு; அதனாலே, என்னைச் சாக்கு வச்சு இங்கியே தங்கிட்டே. உண்மையா அப்பா மேலும், லோகு மேலும் உனக்கு ஆசையிருந்தா சினிமாச் செலவையும், புடவைச் செலவையும் குறைச்சு ரெண்டு மாசத்துக்கு ஒரு நடை புருஷனைப் பார்க்க ஊருக்கு ஓட மாட்டாயா? ஒரு வருஷமா நானும் பார்க்கிறேன், வாரம் ரெண்டு வரிக் கார்டோட



உஷா சுப்பிரமணியன்

உன் கடமையை முடிச்சுக்கறே. நெஜமாத் தான் கேக்கறேன். நாம இங்கே வந்து பதினேஞ்சு மாசங்களாச்சே, உனக்கு அப்பாவைப் பார்க்கணும்னு, ஒரு தரம் கூடத் தோணவேயில்லையாம்மா?''

''அது எப்படி இல்லாமலிருக்கும் புவனா? நான் அவரோட இருபது வருஷம் வாழ்ந்தவ....''

ஞானம் வார்த்தையை முடிப்பதற்குள் புவனா குறுக்கிட்டாள்: ''உனக்கு வேணுமானா அப்பாவை மறந்திருக்கலாம். நான் அவரில்லாம இனிமேயும் இங்கே தங்கியிருக்க மாட்டேன். அப்பாவைப் பார்க்காம, அவரோடு பேசாம, என்னால இனிமே பாட்டெல்லாம் பாட முடியாது. நீ வேணுமானா இங்கே இரு. நான் ஊருக்குப் போகிறேன். நான் அப்பாவிடம் போகிறேன்.''

ஆத்திரத்துடன் கைகாலைகளை உதைத்துக் கொண்டு அழும் புவனாவைத் திகிலுடன் பார்த்தாள் ஞானம். புவனாவின் ஏக்கம் அவளுக்குப் புரியாததல்ல. சமீப காலத்தில் அவளுக்கே சுந்தரத்தின் நினைவு அடிக்கடி வரத்தானே செய்தது. அதர்மத்தைச் சந்திக்கும் ஒவ்வொரு முறையும், தர்மத்தின் மாண்பும், கம்பீரமும் மனத்தின் மேலெழுந்ததே... ஆனால் அவள் இப்போது மீளவே முடியாத அதலபாதாளத்திலல்லவா விழுந்துவிட்டாள். சிந்திக்க அவகாசம் தேவை. அது வரை புவனாவுக்கு ஏதாவது சமாதானம் சொல்லியாக வேண்டும்.



புவனாவை நெருங்கி, அவள் தோளை மெல்ல அணைக்க முயன்றாள். ஆனால், அவள் சடாரென உதறித் தள்ளி நின்றாள். ''புவனா, நீ என்னைப் புரிஞ்சுக்கலேம்மா... நானே ஒரு நடை ஊருக்குப் போய் வரணும்னுதான் தவிக்கிறேன். கோடை விடுமுறையின் போது எப்படியும் கிளம்பலாம்னு நெனைச்சேன். ஆனா அப்ப உன் பாட்டு வாத்தியார், 'இப்ப நான் கிளாஸ் எடுக்கறேம்மா, நான் ஊருக்குப் போகறபோது நீங்களும் போங்க'ன்னாரு. உங்கப்பாவுக்கு இதைத்தான் எழுதி, 'நீங்க விடுமுறையிலே பட்டணம் வாங்க, லோகுவுக்கு மாறுதலாயிருக்கும்' என்றேன். உங்கப்பாவுக்குத்தான் தன் பிடிவாதத்தைத் தவிர, வேறே எதுவும் முக்கியமில்லையே! ஆனாலும் லோகுவுக்காகவேனும் கட்டாயம் வருவார்னு எண்ணினேன். அதுக்கும் மொட்டையா கார்டிலே, 'எனக்கு வரச் சௌகரியப்படாது'ன்னு பதில்தானே வந்தது. உனக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே புவனா. நீ அப்பா, அப்பான்னு துடிக்கிற அளவு உங்கப்பா, மகள் வாழ்க்கையிலே ஒரு துளி ஆர்வம் காட்டினா, நான் இப்படி உன் முன்னாலே சிறுமைப்பட்டு நிற்பேனா. சொல்லு! எப்படியும் அடுத்த மாசம் ஊருக்குப் போய் உங்கப்பாவைப் பார்த்துட்டுத் தான் வரணும். அதுவரை பொறுமையாக இரு....''

பொங்கிக் கொண்டிருந்த மகள், அவள் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் அடங்கிப் போனாள். அவள் மனம் அந்த நாட்களுக்காகக் கனவு காணத் துவங்கியது. ஆற்றங்கரைப் படுகையில் கூழாங்கற்களைப் பொறுக்கி வீசியபடி, அப்பாவிடம் குதித்துப் பேச வேண்டும். இந்தச் சென்னை நகரின் காட்சிகள், மனிதர்கள், டைப்ரைட்டிங் வகுப்பில் அவள் சந்திக்கும் இளைஞர்கள் பற்றியெல்லாம் அவரிடம் பேசிச் சிரிக்க வேண்டும். அப்பாவிடமும் சேகரிடமும் அவள் காட்டிய நட்பு மட்டும் அவளால் வேறு எவரிடமும் காட்டவே முடியவில்லை. அக்கம்பக்கத்தில், டைப்ரைட்டிங் வகுப்பில் என எத்தனையோ சக வயதுப் பெண்கள். ஆனால் அவர்கள் யாரிடமும் 'அந்த மேகக் குவியல் அழகாக இல்லே!' என்று கேட்க முடியவில்லை. அவர்களில் யாரும், 'கடலும், மேகமும் ஏன் நீல நிறமாக இருக்கு' என்று சேகரைப் போல் அவளுக்கு விளக்கவில்லை. 'அப்பா, கடவுள் ஒருத்தர்தான்னு சொல்றவங்க, ஏன் சைவம், வைணவம்னு பிரிச்சாங்க?' என்று அவள் கேட்க, அதற்கு அப்பாவைப் போல் ஆத்மா, பரமாத்மா என்று புரிய வைக்க முயலவில்லை. இந்தப் பெண்கள், அவள் அம்மா, ரவீந்திரன் அண்ணன், அவ்வப்போது வந்து போகும்

தமிழ்ச் செல்வன் அண்ணன் அனைவருமே அவளை மூச்சடைக்க நசுக்கி, ஒரு சின்னக் கூண்டுக்குள் அடைக்கிறார்களே தவிர, ஒருவராவது அவளைச் சிறகு விரித்துப் பறக்க விரும்பும் பறவையாகப் பார்ப்பதேயில்லை. சேகருக்காவது அவள் துணிந்து பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதினாள். அவனும் பதிலெழுதினான். ஆனால், அப்பாவுக்கு அவள் எழுதி அலுத்துவிட்டாள். லோகுவும் அப்படித்தான். இவள் நாலு கடிதம் போட்டால், அவள் ஒரு கடிதம் எழுதுவாள். அதிலும்தான் எவ்வளவு அதிர்ஷ்டக் கட்டை என்ற குமுறல் மட்டுமிருக்கும், அப்பாவைப் பற்றிய குற்றச்சாட்டிருக்கும்.

புவனாவுக்கு நம்பிக்கையிருந்தது. அப்பாவை நேரில் சந்தித்துப் பேசினால், அவரை எப்படியாவது சென்னைக்கு அழைத்து வந்து விடலாம். லோகுவும் தனியே உட்கார்ந்து அழாமல், இங்குள்ள மற்ற பெண்கள் போல் டைப், ஷார்ட்ஹேண்ட் கற்று, ஏதாவது வேலைக்காவது போகலாம். எதுவானாலும், அவளுக்கு அப்பாவைப் பார்க்க வேண்டும். அவர்மேல் ஒவ்வொரு சமயம் அவளுக்கு ஆத்திரமாகப் பற்றிக் கொண்டு வந்தாலும், அப்பா தவறுகளுக்கு அப்பாற்பட்டவர் என்ற எண்ணம்தான் தலைதூக்கி நின்றது. சேகரும் இதைத்தானே எழுதுகிறான். நல்லவேளை... அவள் சேகருக்குக் கடிதம் எழுதுவதும், அவன் பதில் போடுவதும் அம்மாவுக்குத் தெரிந்தும், அவள் அதைத் தடுக்க முயன்றும், தொடர்கிறது.

இப்போது புவனாவின் உடம்பில் மட்டும் வளர்ச்சியில்லை. இந்தச் சென்னை வாழ்க்கை அவள் மனத்தையும் நன்கு பக்குவப்படுத்தியிருந்தது. சேகருக்கும், தனக்குமான உறவை வெறும் நட்பென்று அவள் நம்பவில்லை. அதற்குக் காதல் என்று அழகான வடிவம் கொடுத்திருந்தாள். அந்த உணர்வின் பெயர் காதல் என்று நிச்சயமான நிலையில், தான் அந்தக் காதலுக்குத் தன்னை அருகதையுள்ளவளாகச் செய்து கொள்ள வேண்டுமென்றவெறியும்எழுந்ததுஉண்மை. பாட்டுக்கு நடுவிலேயே, படிப்பையும் தொடர்ந்து பட்டம் பெற்றுவிட வேண்டும் என்று உறுதியாக இருந்தாள். அதுபற்றியும் அப்பாவைச்சந்தித்துப்பேசியாகவேண்டும்.

அடுத்த அடி எப்படி எடுத்து வைத்தாக வேண்டும்என்று ஞானத்துக்குப்புரியவில்லை. அவள் வாழ்வில் இப்போது ஒரே குறிக்கோள் தானிருந்தது. 'அந்தப் பாடகி புவனேஸ்வரி யார் தெரியுமா? நம்ம ஞானசுந்தரி பொண்ணுதான். அம்மா மாதிரியே குரல், அழகு எல்லாம்' என்று நாலு பேர் பேச வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய அவள் எதையெல்லாமோ பணயம் வைத்து விட்டாளே...

இலவசமாகவும், அதிக உழைப்பின்றித் தாமாக வருவதுமான விஷயங்களில், விலைப் பட்டியல் தொங்காவிட்டாலும், அவற்றின் பின்னணியில் ஏதாவது ஒரு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் என்று புரியுமுன், அவள் விழ்த்தப்பட்டுவிட்டாளே. மறுக்கவே முடியாதவாறு பணம், செல்வாக்கு, அரசியல் பலம் எல்லாவற்றிற்கும் மேல் மகளை உருவாக்கும் ஆசை எல்லாமாகச் சேர்த்து, வாரம் ஓரிரு முறை தேடி வரும் காரில் மறுப்பின்றி, ஏறிச் செல்லப் பழகி விட்டாளே. ஆரம்ப காலத்தில் உடம்பில் தோன்றிய அருவருப்பு, மனத்தில் ஏற்பட்ட சுயப் பரிதாபம் இவை மறைந்து இப்போது இதெல்லாம் சகஜம் என்ற நிலையுமல்லவா தோன்றிவிட்டது. ரவீந்திரனோ, தமிழ்ச் செல்வனோ, இந்த விஷயங்களைத் தெரிந்ததாகக் கூடக் காட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் தமிழ்ச் செல்வன், 'அண்ணி, தலைவரைப் பார்க்கும்போது நான் அந்தக் கொள்ளிடக் காவாக்கின்னு விஷயமா ஞாபகப்படுத்தச் சொன்னேன் என்று சொல்லுங்க' எனும்போது, நன்றிக் கடனுடன் அந்தக் கட்டளையும்தான் மேற்கொள்கிறாள். அக்கம், பக்கம் அவளைப் பற்றி என்ன பேசினார்களோ தெரியாது. ஆனால் அண்ணன் பட்டம் சூடியவர்களைத் தவிர வேறு எவரும் வீடு தேடி வராததன் பலன் புவனாவுக்கு உள் விஷயங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை.

ம.ரா. அவளிடம் மிக அன்பாகப் பழகினார். அவள் நெருக்கம்தான், தமக்கு வாழ்வில் ருசிக்கும் ஒரே விஷயம் என்பதுபோல் நடந்து கொண்டார். அதற்குப் பதிலாக அவள் அவருடையவளாக மட்டுமே இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார். இந்த வெளிப்படுத்தாத கட்டளையை எப்படி மீறுவது என்று புரியாமல்தான், ஞானமும் ஓராண்டுக்கு மேலாகியும் ஊருக்கு ஒரு நடை கூடச் செல்லவில்லை.

அவள் குற்ற உணர்வு அவளைச் சதா குடைந்து கொண்டிருந்தது. 'ராமனை ஒத்த கணவனுக்கு நீ செய்வது மகா துரோகம்' என்று மனம் குத்திக் காட்டியது. இந்தத் தலைவன் உறவெல்லாம் எவ்வளவு நாள் தொடரும்? அப்படித் தொடரும்போது புவனாவுக்குத் தெரிந்துவிட்டால் என்னவாகும்? என்றெல்லாம் அவள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். நிறைய அரசியல் ஓநாய்களின் பார்வை புவனாவின் மீது படிவது வேறு அவளைப் பயமுறுத்தியது. சில சமயங்களில் இவற்றை எல்லாம் விட்டு விட்டுப் பழைய, நிம்மதியான வாழ்வுக்கு ஓடிவிடலாமா என்று தோன்றுமளவுக்கு அவள் குழம்பினாள். இப்போது புவனாவால் வேறு பிரச்னை. அவளை எப்படியும் ஒரு நடை அவள் தந்தையிடம் அழைத்துச் சென்றாக வேண்டும். ம.ரா.வைப் பார்த்துக் கேட்டாக வேண்டும்.

''அண்ணி...'' ரவீந்திரன் அழைத்தான்.

''என்ன தம்பீ...''

''இன்னிக்கு நம்ப தலைவரோட மாப்பிள்ளை படம் மியூசிக் ரிகார்டிங் துவங்குறாங்களாம். மாலை ஆறு மணிக்கு வாகினியில் பாப்பாவுக்கு வாய்ஸ் டெஸ்ட், ரிகார்டிங் எல்லாம் செய்யப் போறாங்களாம்.

** இறைவனை விளித்து பார்ப்பவர்களும், இறைவனைப் பற்றி விளித்து பேசுபவர்களும், அப்படி பேசப்படுவதை விளித்து கேட்டுக் கொள்பவர்களும் உண்டு. ஆனால் அவனை அறிந்தவர் யாருமில்லை.

தலைவர் கார் அனுப்புவார். நீங்க தயாரா யிருங்க...''

ஞானத்தின் இதயம் சில விநாடிகள் துடிக்கக் கூட மறந்து நின்றது. புவனா பின்னணிப் பாடகியாகப் போகிறாளா.... பெரிய, பெரிய சங்கீத விதூஷிகளுக்கெல்லாம் கிடைக்காத சிறப்பு அவள் மகளுக்குக் கிடைக்கப் போகிறதா.... 'அடியே, புவனா...' குரலெல்லாம் மகிழ்ச்சியாக மகளிடம் செய்தி தெரிவிக்க ஓடினாள்.

'உம்'மென்று உள் அறையில் உட்கார்ந்திருந்த புவனாவுக்கும் இத்தகைய மகிழ்ச்சியும், இறுமாப்பும் தோன்றினாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ''சாயந்திரம் ஸ்டுடியோவுக்குப் போகணுமா... சரி, அப்பாவைப் பார்க்க எப்போ கிளம்பலாம்னு சொல்லு. அப்பத்தான் வருவேன்'' என்றாள் விறைப்புடன்.

''அடி என் ராசாத்தி, என் செல்லமே, உங்கப்பாவிடம் இந்த நல்ல செய்தியைச் சொல்லவாவது போக வேண்டாமா, கட்டாயம் அடுத்த வாரமே போகலாம். இப்போ நீ சூடா ஒரு கிளாஸ் சுக்குத் தண்ணி குடிச்சுட்டு, ஸ்ருதி சேர்த்துக் கொஞ்சம் ஆலாபனை செய்து குரலைச் சரி செய்துப்பியாம்...'' மகளை முத்தமிட்டாள்.

''ப்ராமிஸாக, அடுத்த வாரம் போகலாமா?''

''சத்தியமாக.''

புவனா குதித்து எழுந்து அடுப்பில் வெந்நீர் காய்ச்சக் கிளம்பினாள்.

ஐந்து மணிக்குத் தாயும், மகளும் அழகாக உடுத்திக் கொண்டு, பலமுறை கடவுளை வணங்கிக் கிளம்பினர். ரவீந்தர், ஞானத்தைத் தனியே அழைத்தான். ''அண்ணி, தந்தி ஒண்ணு வந்திருக்கு.... நான் புவனாவிடம் சொல்லலை. அவ மூட் அவுட் ஆயிடும்...''

''சரி.... பிரித்துப் படி...''

''அண்ணி... புவனா அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. உடனே வரணும்னு உங்க உறவுல யாரோ தந்தியடிச்சிருக்காங்க...''

ஞானம் திடுக்கிட்டாள். சுந்தரம் திடகாத்திரமான மனிதர். தந்தியடித்து வரவழைக்கும்படி அவருக்குத் திடீரென்று என்ன உடம்பு வந்திருக்கும். நேற்றுத்தானே அவருடைய வழக்கமான கார்டு வந்தது? ஒன்றுமில்லாததற்குக் கலாட்டாவாக இருக்கும். எதுவானாலும் புவனாவுக்கு ரிகார்டிங் முடியும் வரை தந்தி பற்றித் தெரியக் கூடாது. ரிகார்டிங் முடிந்த பிறகு, தந்தியையே சாக்காக வைத்து ஒரு வாரம் ஊருக்குப் போய்விட்டு வரலாம்.

''ரவித் தம்பி, தந்தியை நீயே வச்சுக்க. இப்ப மூச்சு விடாதே.... அடியே புவனா... கிளம்புடீ...'' ஞானம் தானே ஆடிஷனுக்குப் போவது போன்ற த்ரில்லுடன் கிளம்பினாள்.

(தொடரும்)

மகாத்மாவின்

ஒரு நாட்டின் தூதர் பதவி என்ருல் சொல்ல வேண்டுமா? ஆடம்பரமான பங்களா, அடிக்கடி விருந்துகள். கடமைகள், கவலைகள் உண்டு என்ருலும் வசதியான வாழ்க்கை. இவற்றையெல்லாம் தூக்கி யெறிந்ததோடு, அழகான குடும்பத்தையும் விட்டுப் பிரிந்து, ஓய்வெடுக்க வேண்டிய தமது அறுபத்தைந்தாவது வயதில் தொலை தூரத்துக்கு வந்து, தொழுநோய் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கிருர் ஒருவர். யாராடா அந்த மனிதர் என்று புருவத்தை உயர்த்து கிறீர்களா? வாருங்கள் செட்டிப்பட்டிக்கு....

• ஃபிஷர்



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகில் இருக்கிறது செட்டிப்பட்டி. அந்தக் கிராமத்தின் அமைதியான சூழ்நிலையில் இருக்கிறது ஒரு 'தொழுநோய் மருத்துவமனை'.

''வாங்க ஸார்....எங்கேயிருந்து வர்றீங்க?'' அறிமுகங்கள் முடிந்ததும், மிஸ்டர் ஃபிஷரை (Fisher)ப் பார்க்க வேண்டும்'' என்ருேம்.

''யெஸ்....'' என்றபடி வந்தார் ஃபிஷர்.

''ஏன் நீங்கள் ஒரு வசதியான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, இந்தப் பணியில் இறங்கினீர்கள், மிஸ்டர் ஃபிஷர்....?''

''ஹாஹ்... ஹா... அதைவிடுங்கள். நீங்கள் நல்ல வெயிலில் வந்திருக்கிறீர்கள். அதுவும் சாப்பாட்டு வேளை. நீங்கள் எங்கும் சாப்பிட்டிருக்கமாட்டீர்கள்என்றும்யூகிக்கிறேன். வந்து என்னேடு சாப்பிடுங்கள். பிறகு பேசுவோம்....''

''மிகவும் நன்றி. நாங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் வந்திருக்கிருேம்.''


''உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? கூச்சப்படத் தேவையில்லை!''

''நிஜமாகத்தான் சொல்கிருேம் மிஸ்டர் ஃபிஷர்.''

''சரி அப்படியாளுல் நான் சாப்பிட்டு விட்டு வந்துவிடுகிறேன். அதோடு, என்னைப் பற்றி நீங்கள் எழுதுவதைவிட, இந்தத் தொழுநோய் மருத்துவமனையில் கடந்த இருபத்தாறு வருடங்களாகச் சேவை செய்துகொண்டிருக்கும் டாக்டர் ஃபோம்ஸ்டின் (Vomestein) பற்றி எழுதுவதுதான் சிறப்பாக இருக்கும். இதோ வந்துவிடுகிறேன். ப்ளீஸ் வெயிட்.''

இவ்வாறு சொல்லிவிட்டு, அவர் சாப்பிடச்சென்றுவிட்டார். மேற்குஜெர்மனியில் பிறந்தாலும் ஃபிஷர் வளர்ந்தது சைனுவில்தான். தந்தை ஒரு மொழியியல் வல்லுனர். சைன—ஜப்பான் யுத்தத்தால் ஃபிஷரின் மருத்துவப் படிப்பு பாதியில் நின்றது. ஜெர்மனிக்குச் சென்று சட்டம் படித்துத் தேர்ச்சி பெற்ருர். இடையில் வந்தது உலக யுத்தம். மூன்று வருடங்கள் பிரான்ஸில் யுத்தக் கைதியாக இருந்து விட்டுத் தாய் நாடு திரும்பிய ஃபிஷர், 1950—ல் மேற்கு ஜெர்மன் அயல் நாட்டுப்பணியில் சேர்ந்தார். வியன்ஞ, ஹாலந்து, எத்தியோப்பியா என்று பல்வேறு நாடுகளில் தூதரகப் பணியில் இருந்தாலும், 1960-ல் சென்னையில் தனித்து இயங்கியதுதான் ஃபிஷருக்குப் பிடித்தமான காலகட்டம்!

ஒரு கொஞ்சல்...



• போலியோச் சிறுவன் ராஜாவுடன்

''என்னுடைய இரண்டாவது தாய் வீடு சென்னை!'' என்று பெருமையுடன் சொல்லும் ஃபிஷர், சென்னைக்கு அப்புறம் மலேஷியா, அயர்லாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பணியாற்றி விட்டுக், கடைசியில் இப்போது செட்டிப்பட்டிக்கு வந்துவிட்டார்!

''செட்டிப்பட்டி தொழுநோய் ஆஸ்பத்திரி மீது ஆர்வம் ஏற்படக் காரணம்?''

''1960 என்று நினைக்கிறேன். சென்னை


ளக்குகள்

* ஃபோம்ஸ்டின்



ஒரு தொழுநோயாளியிடம் விசாரிப்பு.....

யில் நான் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, ஃபோம்ஸ்டின் என்னைத் தேடி வந்தார். அப்போதுதான் செட்டிப்பட்டி பற்றி, எனக்குத் தெரியும். உலகெங்கும் தொழுநோயாளிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைப் பார்த்து நான் மிகவும் வேதனை அடைந்திருந்தேன். தொழுநோயாளிகள் சமூகத்தில் வேண்டாதவர்களாகக் கருதப்படுகிறார்கள்.



* ஃபோம்ஸ்டின்: ஒரு தாயின் பரிவோடு

உற்றாரும், உறவினரும் அவர்களை விரட்டி அடிக்கிறார்கள். பொது இடங்களில் அவர்களைக் கேவலமாகப் பார்க்கிறார்கள். ஹோட்டலுக்குள் நுழைய முடியாது; பஸ்ஸில் பிரயாணம் செய்ய முடியாது.... இது மகா கொடுமை. அவர்களும் மனிதர்கள் தாமே! எல்லாராலும் ஒதுக்கப்படும் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பது எத்தனை பெரிய சமூகப் பணி! ஃபோம்ஸ்டின் செய்து கொண்டிருந்த பணியில் நானும் இணைந்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். சென்ற வருடம்தான் அது சாத்தியமாயிற்று!'' என்ற ஃபிஷர், சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டு மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு தொடர்ந்தார்:

"சென்ற நூற்றாண்டின் இறுதியில் தொழுநோயாளர் சட்டம் அமுலுக்கு வந்தது. தொழுநோயாளிகள் பொது இடங்களில் நடமாடுவதைக் கூடத் தடை செய்யும் சட்டம் அது. இந்தச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மத்திய அரசு நிர்வாகிக்கும் பாண்டிச்சேரி போன்ற யூனியன் பிரதேசப் பகுதிகளில் இந்தச் சட்டம் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது. மகாராஷ்டிரா அரசும் ஒழித்துவிட்டது. உங்கள் தமிழ்நாடு அரசு மட்டும் ஏன் இன்னும் ஒழிக்காமல் இருக்கிறது? ஏற்கெனவே இதுபற்றி டாக்டர் ஹண்டேயுடன் பேசியுள்ளேன். ஆயினும் இன்னமும் அது ஒழிக்கப்படுவதற்கான அறிகுறியைக்கூட காணோம்....'' என்று மிகவும் வருத்தப்பட்ட ஃபிஷர் சென்ற வருடம் மேற்கு ஜெர்மனிக்குச் சென்று மூன்று மாத காலம் தங்கியிருந்து பல்வேறு இடங்களிலும், தொழுநோய் பற்றிய கருத்தரங்குகளில் பேசி, நிதி வசூலித்துக் கொண்டு வந்து, அதில் செட்டிப்பட்டி தொழுநோய் மருத்துவமனைக்காக ஒரு ஜீப் வாங்கியிருக்கிறார். மேலும், இளம்பிள்ளைவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காகப் புதிதாக ஒரு போலியோ வார்டும் கட்டியிருக்கிறார். (அரசாங்க உதவியெல்லாம் சிறிதும் கிடையாது.)

இந்த விவரங்களைத் தெரிந்து கொள்வதற்குள் டாக்டர் ஃபோம்ஸ்டின் வந்து விட்டார். "டாக்டரம்மா, உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்று ஃபிஷர் அவரிடம் எங்களை அறிமுகம் செய்ததும், "என்னையா? அவ்வளவு பெரிய ஆளா நான்!'' என்றார், எழுபத்தைந்து வயதான ஃபோம்ஸ்டின். அவர் முகத்திலேயே அன்பும், பாசமும் தெரிந்தது. அவரிடம் பேசிக் கொண்டே ஆஸ்பத்திரியைச் சுற்றி வந்தோம்.

ராசிபுரத்தைச் சேர்ந்த பழனிச்சாமிக்குத் தொழுநோயின் தாக்கம் கண்பார்வை பாதிக்கப்படும் அளவுக்குப் போய்விட்டது. பின்னர், இங்கு வந்து சிகிச்சை பெற்று, நோயைக் கட்டுப்படுத்தி, இப்போது புத்தகங்கள் படிக்குமளவுக்குப் பார்வை வந்துவிட்டது.

"என்ன பழனிசாமி?'' என்று சிறிது கூட அருவருப்பேயின்றி, ஒரு தாயின் வாஞ்சையோடு அவர் தலையைத் தடவிக் கொடுத்து விட்டு நடந்தார் டாக்டரம்மா.

டாக்டரம்மாவைப் பார்த்ததும் ஓடி வந்தான் பதின்மூன்று வயதுச் சிறுவன் ராஜா. அவனுடன் ஒரு கொஞ்சல்.... சேலம் ராமசாமியுடன் ஓர் உரையாடல்....

தொழுநோயையும் போலியோவையும் குணப்படுத்தினால் மட்டும் போதாது. மீண்டும் அவர்கள் இந்தச் சமூகத்தில் ஒரு தொழில் செய்து கௌரவமாக வாழ வேண்டாமா? அதற்காக இந்த மருத்துவமனைக்குள்ளேயே காலணிகள் தயாரித்தல், நெசவு

நெய்தல், தையல் போன்றவற்றையும் கற்றுக் கொடுக்கிறார்கள். இவற்றோடு, கல்வியும் போதிக்கப்படுகிறது.

"அதோ, அந்தப் போட்டோவைப் பாருங்கள். அவர் எங்கள் மேற்கு ஜெர்மன் ஜனாதிபதியின் மனைவி. அவர் போட்டுக் கொண்டிருக்கும் பச்சை நிற கவுன் துணி இங்கு நெய்யப்பட்டதுதான்" என்று ரொம்பவும் பெருமைப்பட்டுச் சொன்னார்கள் ஃபிஷரும் ஃபோம்ஸ்டினும்.

எங்கேயோ, தொலை தூரத்திலிருக்கும் மேற்கு ஜெர்மனியிலிருந்து தொழுநோய் நிவாரணப் பணியில் தங்களை இணைத்துக் கொண்டு செயல்படும் ஃபோம்ஸ்டின், ஃபிஷர் போன்றவர்களைப் பார்க்கும்போது, 'இவர்கள்தான் நமது தேசத் தந்தை மகாத்மாவின் உண்மையான வாரிசுகள்' என்று மனம் நெகிழ்ந்த நாங்கள், "உங்கள் பணி வாழ்க, வளர்க!" என்று வாய் நிறைய, வாழ்த்திவிட்டு வந்தோம்.

— கௌசல்யா

சில பின்குறிப்புகள் ....

** செட்டிப்பட்டி தொழுநோய் மருத்துவமனை 1956—ல் ஏற்படுத்தப்பட்டது.

** இந்த நிலையத்திற்கு ஜெர்மன் தொழுநோய்க் கழகத்திடம் இருந்து உதவி கிடைக்கிறது. இது தவிர தனிப்பட்ட டொனேஷன்களும் உண்டு. அரசு உதவி ஒரு பைசாக் கிடையாது.

** இதுவரை 27,000 பேருக்குச் சிகிச்சை செய்துள்ளனர்.

** செட்டிப்பட்டியைத் தவிர சுற்றுவட்டாரத்தில் உள்ள 28 கிராமங்களுக்கு, வாரம் ஒருமுறை சென்று தொழுநோயாளிகளுக்கும் போலியோ குழந்தைகளுக்கும் வைத்தியம் பார்க்கிறார்கள்.

** உலகில் கிட்டத்தட்ட இரண்டு கோடி பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் ஐம்பது லட்சம் பேர் இந்தியாவில் இருக்கிறார்கள்.

** செட்டிப்பட்டி ஆஸ்பத்திரியில் தொழுநோயாளிகளுக்காகத் தொண்ணூறு படுக்கைகள் உள்ளன.

** தொழுநோய், போலியோ தவிர, மற்ற வியாதிகளுக்கும் வைத்தியம் பார்க்கிறார்கள்.

** நோயாளிகள் தங்களாகக் கொடுக்கும் தொகையை மட்டும்தான் கட்டணமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். கட்டண நிர்ணயம் என்ற பேச்சே கிடையாது.

ரெட்டைவால் குருவி



சில ஏ—ஒன் படங்களைத் தமிழுக்குத் தந்த பாலு மகேந்திரா இப்போது 'ஏ'த்தனமான கதையில் முழுகிப் போனது ஆச்சரியமாக இருக்கிறது. அதுவும் சில வசனங்களைக் கேட்கும்போது, அக்கம்பக்கத்து வீட்டில் பெண்கள் யாரும் இல்லையே என்று நிச்சயித்துக் கொண்டுதான் சிரிக்கவே முடிகிறது.

ஹாஸ்யமான சினிமா என்றால் உடனே இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையைத் தேர்ந்தெடுப்பது வாடிக்கையாகிவிட்டது. பாலு மகேந்திராவாயிற்றே, கொஞ்சம் வித்தியாசம் இல்லாமல் போகவில்லை!

கொஞ்சம் சரிதா, ஏதோ ஒரு ஜாடையில் சுஜாதா — இதுதான் அர்ச்சனா! பிரகாசமான கண்களும், நயமான முகச் சுளிப்புகளும், சுவாரஸ்யமான வெட்கச் சுழிப்புகளுமாய் முதல் பிரைஸைத் தட்டிப் போவது அர்ச்சனாதான். 'ஏன்யா, என்னை உனக்கு நிஜமாவே பிடிச்சிருக்கா?' என்று கேட்கும் ஏக்கம், தப்புச் செய்யும் எந்தக் கணவனையும் யோசிக்க வைக்கும்.

மோகனுக்கு லட்டு மாதிரி ரோல். இரண்டு பெண்களையும் சமாளிக்க, அடுக்கடுக்கடுக்காகப் பொய்களால் சீட்டு மாளிகை கட்டுவதுபோல், சரளமாகக் கட்டுகிறார். கடைசி நிமிடங்களில், ஆஸ்பத்திரியில் இரண்டு பெண்டாட்டிகளும் ஒரே சமயத்தில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் அவஸ்தையில், இங்கேயும் அங்கேயுமாக அவர் பந்தாடப்படும் காட்சிகளில் வளமான கற்பனை.

ராதிகா அநாயாசமாய் வந்து போகும் இரண்டாம் நாயகி. சில இண்டிமேட் காட்சிகளில் கிளுகிளுப்பு ஊட்டவும் டான்ஸ்களையும், பாடல்களையும் செருகுவதற்காகவும் ஜாலியாய் பயன்பட்டிருக்கிறார்.

பாலுமகேந்திராவின் ப்ரசித்த காமிராவுக்கு அவுட்டோர் வேலை கம்மி. பாதி நேரம் வீட்டுக்குள்ளேயே அதிலும் குறிப்பாக, பெட்ரூமையே சுற்றி வந்து இளைப்பாறுகிறது.

இளையராஜா சங்கீதத்தைத் தெளித்திருக்கிறார். அவ்வளவுதான்.

முன் பாதி படத்தை, சென்ஸார் மறுபடியும் பார்க்க வேண்டும்.

— ஜெயமன்மதன்

9



வாழ்க்கை வளம் பெற...

"தம்பி! ஊருக்குப் புதுசு!"

மருந்து சாப்பிடப் பயந்தால் நோய் எப்படிக் குணமாகும்? மருந்து கசக்கக் கூடும். மருந்தின் விலை அதிகமாயிருக்கலாம். "நோயுடன் வாழக் கற்றுக் கொண்டு விட்டேன்!" என்று பலர் நம்மிடையே சுபம் கட்டி இருமிக் கொண்டிருக்கிறார்கள்; தலை குனிந்து நடக்கிறார்கள்.

துணிந்து முடிவெடுக்கத் தைரியமின்றி காரியங்களை ஒத்திப் போடுவதால் சுமைகள் தான் அதிகமாகின்றன. ஒத்திப் போடுவதன் மூலம் நாம் நம் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. நம் பொறுப்புக்களை நாம் என்றாவது சந்தித்தாக வேண்டும்.

யோசித்து எண்ணி முடிவெடுப்பதற்கும், பலன்களை எண்ணி அதைப் பரிசோதித்து முடிவெடுப்பதற்கும் இடையே ஒரு தராசு முனை இருக்கிறது. அந்த உறவை உணர்ந்து, நல்ல பலனை எதிர்பார்த்து,சரியான சமயத்தில் காரியத்தில் இறங்க வேண்டும்.

கிண்டி குதிரைப் பந்தயம், உத்தரப் பிரதேச லாட்டரி என்று பலர் துணிந்து, நூறு, ஆயிரம் என்று பணத்தைப் போடுகிறார்கள். வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் இப்படிச் சூதாடுவதில்லை. காரணம், அந்தச் செயல்களில் அடிப்படை நியாயம் இருப்பதில்லை. நாம் பெறும் பணம் பொதுவாக உழைப்பின் ஈடாக இருக்க வேண்டும்; இதுதான் உலக நியதி. இந்த உலக நியதிக்கெதிராக இருக்கும் நம்பிக்கைகள், செய்யும் காரியங்கள் யாவும் நிரந்தரமான பலனைப் பொதுவாகத் தருவதில்லை.

ஒரு காரியத்தில் இறங்கும்போது, "இதில் நஷ்டம் எத்தனை சதம்?" என்று நாம் கணக்கிடக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் வெற்றி பெறும் வாய்ப்பு எத்தனை சதம் என்பதைக் கணிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். "தொழிலில் வெற்றி பெற்றவர்களெல்லாம், எங்கே வெற்றி வாய்ப்பு அதிகமாயிருக்கிறதோ — மிக அதிகமாக இருக்கிறதோ — அந்தச் சந்தர்ப்பங்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதுதான் அவர்களது வெற்றியின் ரகசியம்" என்று ஹார்வார்டு பல்கலைக்கழக ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது.

"வந்தால் வரட்டும், போனால் போகட்டும்!" என்று சிலர் பேசுகிறார்கள். அந்த மனோபாவமே தவறு. வெற்றி பெறும் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும்போது பணத்தை அத்தகைய தொழில் அல்லது வியாபாரத்தில் போடாமல் கடலில் கொண்டு கொட்டுவதுகூட நல்லது. என்றாவது அது கரையில் சேர்ந்து வேறு யாருக்காவது உபயோகப்படக் கூடும்!

துணிந்து ஒரு காரியத்தில் இறங்கும்போது நம்மிடம் பலனைப் பற்றிய ஓர் எதிர்பார்ப்பு இருக்கிறது. மேலும் இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, நமது முழு உயிரையும் கொடுத்து விளையாடும் ஆட்டம் இருக்கிறதே, அது தரும் உற்சாகம் நமக்குத் துணை நிற்கிறது.

எது எத்தகைய பலன் கொடுக்கும் என்று ஒரு பட்டியல் போடுங்கள். வெற்றி வாய்ப்பின் சதவிகிதத்தைக் கணக்கிடுங்கள்.

சினிமா எடுக்கிறீர்கள். லாப நஷ்டம் எப்படி? இருபதில் ஒருவர் வெற்றியடைகிறார். பத்தில் ஒருவருக்குப் போட்ட பணம் வருகிறது என்கிறார்கள். வாய்ப்பு இவ்வளவு குறைந்திருந்தும் ஏன் பலர் இதை மோகிக்கிறார்கள்? மோகம் ஒரு முக்கியக் காரணம்! அதற்கு அடிமையாகக் கூடாது.

ஸ்டாக் மார்க்கெட்டில், அல்லது தொழிலில் பணம் போடுகிறீர்கள். வெற்றி வாய்ப்பு இன்னும் அதிகம்.



மனை வாங்கி வியாபாரம் செய்கிறீர்கள். நஷ்டமாகும் நிலை மிக மிகக் குறைவு. லாபமும் வெற்றி வாய்ப்புமே அதிகம்.

இன்ஷ்யூரன்ஸ் தொழில் இருக்கிறது. மனிதர்கள் சாவதைவைத்துப் பணம் கொடுக்கிறார்கள். ஏதோ பெரிய சூதாட்டம் போல் தோன்றுகிறது. ஆனால் எவ்வளவு மனிதர்கள் எத்தனை வயதில் என்ன காரணங்களுக்காகச் சாகிறார்கள் என்ற ஆராய்ச்சிப் பின்னணியில் உங்கள் உயிரை 'இன்ஷ்யூர்' செய்கிறார்கள். அந்தக் கணக்கெடுப்பு பாதுகாப்பையும் நல்ல வருமானத்தையும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்குத் தருகிறது.

துணிந்து இறங்கும்போது நாம் 'எந்த விதங்களில் நஷ்டங்களைக் குறைத்துக் கொள்ளலாம்? ஆபத்துக்களின் — நஷ்டங்களின் — தன்மையைக் குறைத்துக் கொள்ள நாம் முயல வேண்டும். 'ரேஸ்' கார் ஓட்டுபவர், கார் நல்ல கண்டிஷனில் இருக்கிறதா என்றும், நல்ல பாதுகாப்புக்களுடன் கட்டப்பட்டிருக்கிறதா என்றும் சரிபார்த்துக் கொள்கிறார். நிறைய இன்ஷ்யூர் செய்து கொள்கிறார். சிறந்த மருத்துவரைத் தன் செலவில் போட்டி மைதானத்தில் தயாராக இருக்க ஏற்பாடு செய்கிறார். சட்டங்களை மீறிக் கண்டபடி ஓட்டும் தன்மை கொண்ட போட்டியாளர்களை நீக்கும்படி சொல்லி — ரேஸ்கோர்சின் சட்ட திட்டங்களைச் சரிவரப் பரிபாலிக்கிறார்களா என்று பார்க்கிறார் — ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்கிறார். அவ்வாறே புதிய தொழில் அல்லது வியாபாரத்தில் ஆர்வமுடன் துணிந்து இறங்கும்போது நஷ்டங்களைத் தவிர்க்க என்னவெல்லாம் செய்யலாம் என்பதையும் யோசிக்க வேண்டும்.

எலெக்ட்ரானிக் கால்குலேட்டரை முதலில் கண்டு பிடித்த மனிதன், எல்லோரும் சிறிய கால்குலேட்டர்களைத் தங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளும் நிலை ஒருநாள் வரும் என்று தீர்க்க தரிசனத்துடன் கூறினார். மற்றவர்கள் சிரித்தார்கள். ஏன்? கால்குலேட்டர் மிகப் பெரிதாக இருந்தது. அதன் விலை அதிகமாய் இருந்தது. எல்லோராலும் வாங்கக்கூடிய நிலையில் அது அன்று இல்லை. அதனால் சிரித்தார்கள். சிரித்தவர்களுக்கு இன்றிருக்கிற நிலையை மீறி எதிர்காலத்தைப் பார்க்கும் தன்மை இல்லை. ஆனால் 'கால்குலேட்டரைக் கண்டு பிடித்தவனுக்கு அந்தத் திறமை இருந்தது. இவ்வாறே தொழில் அல்லது வியாபாரத்தில் எதிர்காலத்தைக் கணித்து அதற்கேற்ப இப்போதே திட்டமிடும் ஆற்றல் அவசியம்.

"பாதுகாப்பு என்பது முக்கால்வாசி மூட நம்பிக்கை. இயற்கையில் அப்படி ஏதுமில்லை. மனித சமுதாயம் அப்படி எதையும் அனுபவித்ததில்லை!" என்கிறார் ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்கப் பெண்மணி; கண்களைப் பிறவியில் இழந்த பிரமுகர் அவர்.

நாம் துணிந்து எதில் இறங்கினாலும், எதைப் புதிதாகச் செய்தாலும் பலர் "தம்பி, ஊருக்குப் புதிசு!" என்று சொல்லி பயமுறுத்தக் கூடும். "அண்ணே, அரசியல்லே என்ன பண்றீங்க?" என்று திருப்பிக் கேளுங்கள். தம்பி ஊருக்குப் புதிசல்ல என்று தெரிந்து கொள்வார்கள்.

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

பொன்மொழிப் போட்டி-2 முடிவு

சரியான விடை:

சிநேகம்: இரண்டு உடல்களில் வாழும் ஒரே ஆன்மா. — அரிஸ்டாட்டில்

கடவுள்: ஒவ்வொரு மதமும் ஒரு முத்து என்றால் அவற்றைக் கோத்து மாலையாக்குகிற நூல். — கீதையில் கண்ணன்

நெருப்புப் பொறி பஞ்சுப் பொதியைப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிடும்; இறைவனின் கருணைத் துளி மலையத்தனை பாபங்களை அடித்துச் சென்றுவிடும்! — சத்யசாயி பாபா

ஞானம், பக்தி என்ற இரண்டில் ஒன்றை ஏற்று மற்றொன்றை நிராகரிப்பவன் ஞானியுமல்ல, பக்தனுமல்ல; ஏமாற்றும் திருடனே!
— விவேகானந்தர்

—மனிதனை நிழல் பின்தொடர்வதுபோல் தீமை செய்தாரைக் கெடுதல் விலகாமல் பின்தொடரும். — திருவள்ளுவர்

சரியான விடையைப் பின்வரும் வாசகர்கள் எழுதி, ரூ. 200 பரிசைச் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள்:

1. வி. அருணாசலம், பெங்களூர் — 36. 2. திருநாவுக்கரசு, திருச்சி — 1. 3. கோ. மீனாட்சி, கொட்டாரம். 4. எஸ். ஆர். ஸ்ரீதரன், மதுரை — 1. 5. ஆர். மீனாட்சி சுந்தரம், மதுரை. 6. த. இராஜவேல், உசிலம்பட்டி. 7. ஜி. எஸ். சௌரிலெக்ஷ்மி, திருச்சி — 3. 8. என். இராமநாதன், மயிலாடுதுறை — 3. 9. ரா. மலர்விழி, சென்னை — 20. 10. வெ. உஷாராணி, பொன்னேரி. 11. மு. அருணாசலம், சேலம் — 7. 12. ஆர். சேகரன், அணைக்கொரை. 13. பரு. குறிஞ்சிவாணன், சென்னை — 78. 14. எஸ். பரீதா சர்புதீன், திருமயம். 15. த. விஜயலக்ஷ்மி, சென்னை — 600 061. 16. ஆர். வைஜயந்தி, கும்பகோணம் — 612 001. 17. மு. சிங்காரவேலு, தஞ்சை. 18. எஸ். கோமதி, கடலூர் — 607001 19. ஜெ. ஜெயலக்ஷ்மி, சேலம் — 6. 20. எஸ். உமாராணி, சிவகாசி. 21. எஸ். குமார், மதுரை — 1. 22. எஸ். பிரபு ராஜ், ஈரோடு — 1. 23. ஜி. காமாட்சி பெங்களூர் — 560 075. 24. டி. முருகேசன், மதுரை — 10 25. திருமதி எஸ். கிரிஜா ராமதாஸ், போடிநாயக்கனூர் — 626513. 26. எஸ். கிருத்திகா, கும்பகோணம்.

உ

ஸ்ரீ ரஸ்து சுபமஸ்து ஸ்ரீவெங்கடேசப்ரசன்ன
ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடன்—

18.4.1987—ல் பத்து நாட்கள் கொண்ட துவாரகை, சோமநாதபுரம் முதலிய சௌராஷ்டிர தேச யாத்திரை புறப்படுகிறது. எல்லா செலவுகளும் உள்பட நபர் ஒன்றுக்கு ரூ 1000/—.

30.4.87—ல் 35 நாட்கள் கொண்ட பத்ரிநாத், கேதார்நாத் உள்ளிட்ட சம்பூர்ண வடதேச ப்ரதக்ஷிண யாத்திரை, 'நகரும் மாளிகை' என வழங்கும் C.T.S. ரயில் பெட்டியில் புறப்படுகிறது. நபர் ஒன்றுக்கு ரூ 3200/—. ஊர் சுற்றிப் பார்க்கும் பஸ் முதலிய செலவுகள் தனி.

10.5.87—ல் 12 நாட்கள் கொண்ட பத்ரி, கேதார் மட்டும் யாத்திரை புறப்படுகிறது. சகல செலவுகள் உள்பட நபர் ஒன்றுக்கு ரூ 1200/—. அனைத்து இடங்களையும் தரிசித்துவிட்டு, பத்ரி, கேதார் தரிசனம் செய்யாதவர்களுக்காகவே இந்த ஏற்பாடு.

மேலும் விவரங்களுக்கு:

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்,
21, அய்யா பிள்ளை வீதி,
திருவல்லிக்கேணி, சென்னை—600 005

டெலிபோன்: 841957

புதிய உமா
ஆசிரியர். ஜி. உமாபதி

கற்கண்டு தமிழில்
சொற்கொண்டு எழுப்பும்
காதல் மாளிகை!

புதினப் பேரரசு கோவி.மணிசேகரன் எழுதும்



தாஜ் மகால்
காதல் கதைத் தொடர்

1-4-87 முதல் ஆரம்பம்

தனிப்பிரதி ரூ.1.50

மற்றும் பிரபலமான
எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்

அட்டைப் படம்:
தமிழக முதல்வரின் வண்ணப்படம்

விற்பனையாளர்கள் வேண்டிய பிரதிகட்கு
முன்னதாகவே பதிவு செய்க.

ஆனந்த் தியேட்டர், 689, அண்ணா சாலை, சென்னை-600006



திரைவிழாப்
படக்கதை

சிறகுகள்

5

லாரியிலிருந்து எல்லாப் பொருட்களும் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. கடைசி நாற்காலி இறக்கப்பட்டதும், அம்மாவும் வீட்டுக்குள் போய்விட்டாள்.

புது இடம் எப்படி இருக்கப் போகிறது? மில்லி அதன் சௌகர்யங்களைப் பற்றிய சந்தேகத்துடன் வீட்டிற்குள் போனாள். மாடியில் அவளுக்கு என்று ஒதுக்கப்பட்ட அறை சின்னதாகக் கச்சிதமாக இருந்தது. ஜன்னலைத் திறந்து வெளியே பார்த்தவள் திகைத்து நின்றுவிட்டாள். இந்த ஜன்னலுக்கு நேரெதிரே இருந்த அடுத்த வீட்டு ஜன்னல் திறந்திருந்தது. கம்பிகள் இல்லாத அந்தச் சதுரம் வழியே கால்களை வெளியே தொங்கவிட்டபடி ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கும் மில்லியைப் போல பதினொன்று வயதுதான் இருக்கும். அவன் எந்நேரமும் விழுந்து விடக் கூடிய அபாய விளிம்பில் உட்கார்ந்திருந்தது மில்லிக்குப் பயமாயிருந்தது.

''ஹலோ.... ஊ....'' என்று கூப்பிட்டுப் பார்த்தாள்.

அவன் திரும்பவில்லை. ஒருவேளை காது கேட்காதோ?

'ட்வீக் ட்வீக்' என்று ஒரு சின்னப் பட்சி குரல் கொடுத்ததும், அவன் திரும்பிப் பார்த்தான். ஆக, அவனுக்கு நிச்சயம் காது கேட்கிறது! அந்தப் பட்சியை வெற்றுப் பார்வையால் வெறித்தான். அப்புறம் ஒரு விநோதமான காரியம் செய்தான்.

இரண்டு கைகளையும் சிறகுகளைப் போல் விரித்து நீட்டிக் கொண்டான். இப்படிக் கொஞ்சம் சாய்ந்தான். அப்படிக் கொஞ்சம் சாய்ந்தான். தலையை முன்னுக்குத் தள்ளிக் கொண்டான். ஆகாயத்திலேயே பறப்பவன் போல் கற்பனை செய்து கொள்கிறானோ என்னவோ?

''ஏய் விழுந்து விடப் போகிறாய். ஜாக்கிரதை.....!''

அவன் நம்ப முடியாத விளிம்போரம் நழுவி வந்தபின் கூடக் கீழே விழாமல் பாலன்ஸ் செய்ததை மில்லி ஆச்சரியத்தோடு பார்த்தாள். அந்தக் காட்சியை அம்மாவுக்குக் காட்ட, அவளைக் கூட்டி வர ஓடிப் போனாள்.

அம்மாவும் அவளுமாய் வந்து ஜன்னல் வழியே பார்த்தபோது, அவன் அங்கு இல்லை. ஓடுகள் பதித்த சரிவான கூரையின் முகப்பில் நின்று கைகளை அதேபோல் விரித்து பாலன்ஸ் செய்து கொண்டு நின்றான்.

அதற்குள் அத்தனை உயரம் எப்படிப் போனான்? படிகளோ, ஏணியோ இல்லாமல் கூரையின் மேல் எப்படிப் போக முடிந்தது? ஒருவேளை பறந்து போயிருப்பானோ என்னவோ?

''அம்மா மனிதர்களால் பறக்க முடியுமா?''

''ஏதாவது பேத்தாதே மில்லி. எனக்குத் தலைக்கு மேல் வேலை இருக்கிறது. சீக்கிரம் குளித்துவிட்டுக் கிளம்பு. புது ஸ்கூலில் உன்னைக் கொண்டு விட்டுப் போகிறேன்...''

ஸ்கூலில் மில்லிக்கு மறுபடியும் ஆச்சரியம் காத்திருந்தது. பக்கத்து வீட்டுப் பையன் அவளுடைய வகுப்பில் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்தான்.

அவனைக் கடக்கும்போது, ''ஹலோ'' என்று புன்னகை புரிந்து நட்புடன் கையை நீட்டினாள். அவன் அவளை உதாசீனம் செய்து, நோட்டிலிருந்து ஒரு தாளைக் கிழித்து,

அதைக் குறுக்கில் மடித்து, காகித ராக்கெட் தயாரிப்பதில் மும்முரமாயிருந்தான்.

''மில்லி நம் வகுப்பிற்கு வந்துள்ள புது மாணவி. எல்லோரும் 'வெல்கம்' சொல்லுங்கள்'' — டீச்சர் அறிவித்தாள்.

எல்லோரும் — அவனைத் தவிர — வெல்கம் சொன்னார்கள்.

''மில்லி, உன்னை அறிமுகம் செய்து கொள்.''

விரித்து..

''எனக்குப் பதினொன்று வயது. என் தந்தை சமீபத்தில் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். என் அம்மாவுக்கு இந்த ஊரில் வேலை கிடைத்ததால் நாங்கள் இன்று காலைதான் வந்தோம். என்னுடைய பொழுதுபோக்கு வீடியோ பார்ப்பது, பந்து விளையாடுவது...''

பேசும்போது அவனையே பார்த்துக் கொண்டு பேசினாள். அவன் ராக்கெட்டை முடித்து ஜன்னல் வழியே அதை வெளியே செலுத்தினான்.

''இதோ, இவன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் நான் குடியிருக்கிறேன்'' மில்லிக்கு அவன் ராக்கெட்டை வகுப்பில் செலுத்தும் போதுகூட யாரும் ஆட்சேபிக்காதது வியப்பாயிருந்தது.

''மில்லி, வகுப்பு முடிந்ததும் நீ வந்து என்னைப் பார்'' என்றாள் டீச்சர்.

''என் பெயர் மிஸஸ் ஷெர்மன்'' என்றாள் டீச்சர், மில்லியிடம். ''உன் தந்தை விபத்தில் இறந்தார் என்று சொன்னதும் நான் அதிர்ந்தேன். எரிக்கிற்கு நடந்த அதே துன்பம் உன் வாழ்விலும் நடந்திருக்கிறது.''

பக்கத்து வீட்டுப் பையனின் பெயர் எரிக் என்று அப்போதுதான் மில்லிக்குத் தெரிந்தது.

''எரிக்கிற்கு ஐந்து வயது இருக்கும்போது அவன் அம்மா, அப்பா இரண்டு பேரும் ஒரு விமான விபத்தில் இறந்துவிட்டார்கள். அன்றிலிருந்து அவன் சற்றுப் பிரமை பிடித்தவன் போலவே இருக்கிறான். அவனால் யாருக்கும் எந்த ஆபத்தும் கிடையாது என்பதால் ஒரு மாறுதலுக்காக, வயசுக்கேற்றபடி அவனை வகுப்பு மாற்றிக் கொண்டிருக்கிறோம்....'' மிஸஸ் ஷெர்மன் குரலில் ஒரு நெகிழ்ச்சி இருந்தது.

''எரிக் தனியாகவா இருக்கிறான்?'' மில்லி வியப்போடு கேட்டாள்.

''ஒரு மாமா இருக்கிறார், அவனுடன். சதா குடித்துக் கொண்டும், போதையில் மிதந்து கொண்டும் இருக்கிறார். எரிக், தன்னால் பறக்க முடியும் என்ற கற்பனையிலேயே இருக்கிறான்.''

''எரிக்கை நல்ல டாக்டர்களிடம் அழைத்துப் போகக் கூடாதா?''

''டாக்டர்கள் கைவிட்ட கேஸ் அவன். ஒருவேளை, உன்னைப் போல ஒரு சிநேகிதியால் அவன் குணமாவானோ என்னவோ? அவன் தனியாகத்தான் ஒதுங்கி ஒதுங்கிப் போவான். நீ அவனிடம் அன்பு செலுத்த முயற்சி செய்து பாரேன்.''

அன்றைக்கு மாலை மில்லி தன் அறை ஜன்னல் வழியே பார்த்தபோது, எரிக், கூரையில் ஏறி அதன் முனையில், வெகு கடைசி அங்குலத்தில் நின்று எங்கோ வானத்தில் பார்வையைப் பதித்திருந்தான்.

மில்லி பதறிக் கொண்டு ஓடினாள்.

''எரிக் இறங்கி விடு... விழுந்தால் எலும்பு கூடக் கிடைக்காது! இறங்கி விடு....!'' அண்ணாந்து பார்த்துக் கத்தினாள். எரிக் கவனிக்கவேயில்லை.

அவசரமாய்த் தேடி ஓர் ஏணியைக் கண்டு பிடித்து அதைச் சுவரோடு சாய்த்து வைத்து மில்லி பரபரப்பாக ஏறினாள். பாதி தூரம் போனதும் மேலே பார்த்தால் எரிக்கைக் காணோம்!

எரிக் விழுந்துவிட்டானோ என்ன?

பரபரப்பாய் இறங்க முற்பட்டபோது, ஏணியின் படிகள் தடுக்கி, கீழே விழப் போனவளை ஜன்னல் வழியே ஒரு கை நீண்டு தாங்கிக் கொண்டது.

எரிக்கின் கை!

மில்லி அந்த ஜன்னல் வழியே மெல்ல உள்ளே தன் உடம்பை நுழைத்துக் கொண்டாள்.

அவள் இறங்கியது எரிக்கின் அறை.

அந்த அறையின் கீழே கம்பளம் விரித்திருந்தது. கம்பளத்தின் இருபுறமும் வர்ண விளக்குகள் மினுக்கி மினுக்கி ஒரு ரன்வேயை நினைவூட்டின.

ஒரு பெரிய விமானப் பொம்மை மேலேயிருந்து தொங்கவிடப்பட்டு மெல்ல அசைந்து கொண்டிருந்தது. மேஜை மேல் புகைப்படத்தில் எரிக்கின் அப்பா — அம்மா.

''உன் பெற்றோர்களா?''

எரிக் பதில் சொல்லாமல் அறைக்குள் கைகளை விரித்துக் கொண்டு சின்னப் பையன் போல் வளைந்து வளைந்து நடந்தான். ஒரே ஒருமுறை மில்லியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

மறுநாள் மில்லி தன் அறையில் கண்ணாடி முன் உட்கார்ந்து தலையை வாரிக் கொண்டிருந்தாள். கண்கள் விரியக் கண்ணாடியில் பார்த்தாள்.

ஜன்னலில் எரிக் உட்கார்ந்திருந்தான். அவனுடைய அறை ஜன்னலுக்கு அவன் எப்படி வந்தான்?

''எரிக், நீ எப்படி இங்கே வந்தாய்? பறந்து

வந்தாயா என்ன?''

'ஆமாம்' என்பது போல் தலையை அசைத்தான்.

''நான் நம்பவில்லை'' என்றாள் மில்லி. திரும்பிக் கண்ணாடிக்குப் போனபோது பின்னால் ஏரிக் இல்லை! அவன் தன் வீட்டு ஜன்னலுக்குப் போயிருந்தான்.

அன்றைக்கு வகுப்பே ஸ்தம்பிக்கும்படி ஏரிக் இன்னொரு காரியம் செய்தான். எப்போதும் மண்பொம்மை போல் நிற்பவன் மில்லி வீசிய பந்தைக் கப்பென்று பிடித்தான்.

மிஸஸ் ஷெர்மன் நெகிழ்ந்து போன குரலில் மில்லியைக் கூப்பிட்டுப் பாராட்டினாள்.

''மில்லி, நீ அவனுள் எதையோ அசைத்து விட்டாய். நாளைக்கு எக்ஸ்கர்ஷனுக்கும் அவனை அழைத்து வா. இயற்கைக் காட்சிகள் அவனுக்கு ஆறுதலாய் இருக்கிறதா என்று பார்ப்போம்.''

சுற்றுலா ஒரு மலைப்பாங்கான இடத்தில் குதூகலமாய்ப் பூத்தது.

மில்லியும், அரை மீட்டர் இடைவெளி விட்டு ஏரிக்கும் மலைமுகடுகளுக்கு முத்தம் கொடுக்கும் மேகங்களைக் கண்டு ரசித்தார்கள். கீழே சலசலத்து ஓடும் அருவிக் கால்வாயை ரசித்தார்கள். சின்ன மரப் பாலத்தில் நடந்தார்கள். அப்போதுதான் மில்லிக்கு அந்த விபரீதமான எண்ணம் வந்தது.

ஏரிக்கிற்கு நிஜமாகவே பறக்கும் சக்தி உண்டா?

கைக்கு எட்டாத உயரத்தில் மரத்தின் உச்சியிலிருந்த ஒரு தங்க நிற மலரைச் சுட்டிக் காட்டினாள். ''ஏரிக், எனக்கு அந்த மலரைப் பறித்துத் தருவாயா?''

ஏரிக் அவள் வார்த்தைகளை அலட்சியம் செய்தான்.

''சரி, நானே ஏறிப் பறித்துக் கொள்கிறேன்'' மில்லி பாலத்தின் கைப்பிடியில் ஏறி, கால் விரல்களால் நின்று அந்தப் பூவைப் பறிக்கக் கையை நீட்டினாள். எட்டவில்லை. இன்னும் எம்பினாள். விழுந்தாலும் ஏரிக் எப்படியும் பறந்து வந்து தன்னைத் தாங்கிப் பிடித்து விடுவான் என்ற நம்பிக்கையுடன். கால் விரல்கள் சரேலென்று நழுவ, மில்லி பாலத்தின் அடியில் இருந்த பாறைகளை நோக்கி விழ ஆரம்பித்தாள். பயத்தில் மூர்ச்சையானாள்.

விழித்தது ஆஸ்பத்திரிக் கட்டிலில்.

அம்மா அழுது கொண்டிருந்தாள். ''உயரத்திலிருந்து உன்னை அந்தப் பைத்தியம் தள்ளிவிட்டது....''

''மேடம்...'' டாக்டர் குறுக்கே பேசினார். ''அவளிடம் எதுவும் ஆத்திரமாகப் பேசாதீர்கள். உண்மையில் நாற்பது மீட்டர் உயரத்திலிருந்து நேரே பாறைகள் மீது விழுந்தவள் நொறுங்கியல்லவா போயிருக்க வேண்டும்? வெறும் மயக்கம்தான் என்பதே மருத்துவத் துறைக்கு ஓர் ஆச்சரியச் செய்தி....''

''ஏரிக் பறந்து வந்து என்னைக் காப்பாற்றியிருப்பான் டாக்டர்....''

''இது என்ன உளறல்....'' என்றாள் அம்மா கோபமாக.

''இல்லை மேடம், நம் எல்லோருக்குமே பறக்க வேண்டும் என்ற ஆசை அடிமனத்தில் இருக்கிறது. இந்த உலகத்தின் பந்தங்களிலிருந்து, வேதனைகளிலிருந்து, வலிகளிலிருந்து தப்பித்து ஆகாயத்திற்குப் பறந்து போய்விட மாட்டோமா என்ற துடிப்பு இருக்கிறது. தந்தையை இழந்த வேதனையிலிருந்து விடுதலை பெற மில்லிக்குப் பறக்கும் கற்பனை உதவுகிறது போலும்.''

''டாக்டர், இது கற்பனையில்லை. ஏரிக்கால் நிஜமாகவே பறக்க முடியும்!''

''சரி, அப்படியே நம்புவோம்'' என்றார் டாக்டர். ''ஆஸ்பத்திரி பில்லை செட்டில் பண்ணிவிட்டு உங்கள் மகளை நீங்கள் அழைத்துப் போகலாம், மேடம்.''

அம்மாவும் டாக்டரும் அப்பால் போனதும், ''மில்லி'' என்று ஜன்னல் புறமிருந்து குரல் வந்தது. முதன்முதலாக ஏரிக் வாய் திறந்து கூப்பிட்ட பெயர்.

''ஏரிக், நீ எப்படி இங்கு...? இது ஆஸ்பத்திரியின் ஏழாவது மாடி!''

''ஏழாவது மாடி என்ன, எழுபதாவது மாடியாயிருந்தாலும் உன்னைப் பார்க்க நான் பறந்து வருவேன், மில்லி! இந்தா...'' அவன் கையில் அந்தத் தங்க நிற மலர் சிரித்தது!

''ஏரிக் உன்னால் பறக்க முடியும் என்றால் அதை ஏன் எல்லோருக்கும் நிரூபித்துக் காட்ட மறுக்கிறாய்?''

''என்னை யாரும் நம்புவதில்லை, மில்லி — உன்னைத் தவிர.... வா, கொஞ்ச தூரம் பறந்துவிட்டு வரலாம்!''


ஏரிக்கின் கையைப் பிடித்துக் கொண்டு மில்லி காற்றில் குதித்தாள். உடம்பு அப்படியே லேசாகிப் போக, பஞ்சு போல் மிதந்தாள். அவன் இழுத்துப் போன திசையில் இலகுவாகப் பறந்தாள். அம்மா திரும்பி வருவதற்குள் ஆஸ்பத்திரிக் கட்டிலில் மறுபடி வந்து படுத்துக் கொண்டுவிட்ட போதிலும் பறந்த அனுபவம் மனத்தில் சந்தோஷ மிச்சமாய் இருந்தது.

வீட்டில் கெடுபிடிகள் அதிகமாயின. ஏரிக்கை சந்திக்கவே கூடாது என்று அம்மா போட்ட தடை உத்தரவு மில்லியைக் கரையான் போல் அரித்தது.

அம்மா அசந்த நேரம் ஏரிக்கைப் பார்க்க ஓடிவிட்டாள். அம்மா இதற்கொரு முடிவு கட்ட வேண்டும் என்று நினைத்தாள் போலும். போலீஸுக்கும் மனநோய் மருத்துவமனைக்கும் போன் செய்துவிட்டாள்.

பள்ளிக்கூடத்தில் அமர்க்களமாய்ப் பொருட்காட்சி நடந்து கொண்டிருந்த நேரம். ஏரிக்கும், மில்லியும் கைகோத்தபடி மிஸஸ் ஷெர்மனின் ஆதரவை நாடி ஓடி வந்தார்கள். மிஸஸ் ஷெர்மனின் அறையில் அவர்களுக்காக போலீஸ் காத்திருக்க, அங்கேயிருந்து

** நவீன விஞ்ஞானம் பல விஷயங்களை நிச்சயப்படுத்துகிறது. அவற்றுள் ஒன்று, நிச்சயமற்ற விஷயங்கள் ஏராளமாய் உள்ளன என்பது!


ஆனந்த் 70MM A/c
தினசரி 4 காட்சிகள்
ஈகா A/c
ஸ்ரீபிருந்தா A/c
ஸ்ரீ கிருஷ்ணா
3 காட்சிகள்
உதயம் A/c
பகல் காட்சி
மற்றும் தமிழகமெங்கும்
K.பாலசந்தர்
வழங்கும்
வேலைக்காரன்
SP.முத்துராமன்
இளையராஜா

ஓட ஆரம்பித்தார்கள். மாடி மாடியாய் ஏறி, கடைசியில் மொட்டை மாடிக்கு வந்துவிட, அங்கேயும் போலீஸ் வந்துவிட்டது.

"வந்து விடுங்கள்! முனைக்குப் போகாதீர்கள்! நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம், வந்து விடுங்கள்!" போலீஸ் அதிகாரி பதறும் குரலில் பேசினார்.

"பொய்! எங்களைப் பிரிக்கத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள்! உங்கள் கையில் நாங்கள் சிக்கமாட்டோம்!" மில்லி கூச்சலிட்டாள்.

ஏரிக்கின் கையைப் பற்றிக் கொண்டு அங்கேயிருந்து குதித்தாள்.

"ஐயோ!" என்று நூற்றுக்கணக்கான குரல்கள் ஒரு சேரக் கத்தின.

ஆனால், ஏரிக்கும் மில்லியும் கீழே விழவில்லை. அப்படியே 'விர்ர்' என்று ஆகாயத்தில் கைகளை விரித்துக் கொண்டு பறந்தார்கள். டீ.வி. நிலையத்துக்கும் பத்திரிகைக் காரியாலயத்துக்கும் செய்தி பறந்தது. ஊரே அந்த அதிசயக் காட்சியில் வாயடைத்துப் போக, மில்லியை அவள் வீட்டு வாசலில் கொண்டு இறக்கினான் ஏரிக்.

"மில்லி, இனிமேல் என்னை நிம்மதியாக இருக்க விட மாட்டார்கள். நான் என் அம்மாவையும், அப்பாவையும் தேடிக் கொண்டு மேகங்களுக்குப் போகிறேன். தொடர்ந்து முயற்சி செய்தால் எந்தச் சாதனையையும் நிகழ்த்தலாம். நீ கூட ஒரு நாள் என்னைப் போல் பறக்கலாம். உன் அன்பை என்றைக்கும் மறக்க மாட்டேன். குட் பை."

ஏரிக் செங்குத்தாய் எழும்பி, கைகளை வீசிக் காட்டியபடி புள்ளியாகி மறைந்தான். மில்லி பொங்கும் கண்ணீரோடு சிரித்தாள். அவனுக்குக் கையை அசைத்து விடை கொடுத்தாள்.

இன்றைக்கும் மழை நாட்களில், மின்னல்களின் வெளிச்சத்தில் ஆகாயத்தில் ஏரிக் தென்படுகிறானா என்று மில்லி ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

— ஜெயமன்மதன்

இங்கிலாந்திலிருந்து வந்து கலந்து கொண்ட படம் The Boy Who Could Fly. குழந்தைகளுக்குக் கூறப்படும் தேவதைக் கதைகள் போல் அதீதக் கற்பனை. எனினும், இழப்பின் துக்கத்தில் சிக்கிக் கிடக்கும் அடிமனத்தின் விடுதலை ஏக்கத்தை ஏரிக் என்னும் பாத்திரத்தில் உருவகப்படுத்தியிருக்கும் நேர்த்திக்காக டைரக்டர் Nick Castle பாராட்டுப் பெறுகிறார். க்ளைமாக்ஸ் ஒரு தந்திரக் காட்சி என்ற போதிலும், சட்சட் என்று மாறும் காமிராக் கோணங்களில் ஏரிக்கும், மில்லியும் கலர் கலரான பொருட்காட்சி அமைப்புகளினூடே பறப்பது, நமக்கே சிறகுகள் முளைத்து விட்டது போல ஓர் அற்புத உணர்வைத் தருகிறது.



பிரியா விடை

கல்கத்தாவை விட்டுக் கிளம்புவதற்கு முன்பே கவர்னர் ஜெனரலின் கடமைகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார் ஸி.ஆர். இரு சந்தர்ப்பங்களில் அவை பற்றிப் பேசவும் செய்தார். கட்சி சார்பற்ற பதவி என்பதை முதலில் உறுதி செய்தார்:

"கவர்னர் ஜெனரல், பல்வேறு கட்சிகளுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்க்க வேண்டியவர். அதேபோல், பல்வேறு வகுப்பு மக்களிடையேயும் அவர் நல்லுறவை வளர்க்க வேண்டும். ஆட்சி புரியும் அமைச்சர்களிடையே மட்டுமின்றி, பெரும்பான்மை பலத்துடன் ஆள்பவருக்கும் ஆளப்படுகின்ற சிறுபான்மையினருக்கும் இடையே மோதல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையில் சுமுகமான நிலையைத் தோற்றுவிக்கவேண்டும். ராஜ்யத்தின் முக்கிய மூன்று பிரிவுகளான நாடாளுமன்றம், நீதிமன்றம், அதிகாரவர்க்கம் ஆகியவை ஒற்றுமையாகச் செயல்பட உதவ வேண்டும். இவையெல்லாம் இல்லை என்றால் பெரும்பான்மையினரின் ஆட்சி என்பது சகிக்க முடியாததாகி விடும்!"

மற்றொரு சந்தர்ப்பத்தில் இரண்டாவதாக ஓர் அம்சம் பற்றிக் குறிப்பிட்டார் ஸி.ஆர். ஒரு நெருக்கடி நிலையில் ஆட்சிப் பொறுப்பை கவர்னர் ஜெனரல் தாமே ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் பற்றி யாரோ கேட்டபோது, ஸி.ஆர். சொன்னார்: "அத்தகைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மட்டுமின்றி என்னையும் இறைவன் காப்பாற்றட்டும்! தேசமே சர்வ நாசமடைகிற பேராபத்தான நிலையில் தான் அத்தகைய அதிகாரத்தைக் கவர்னர் ஜெனரல் ஏற்க வேண்டியிருக்கும். அத்தகைய ஒரு நிலையை நீங்கள் எண்ணிக்கூடப் பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்."

வழக்கம்போல் வழியனுப்பு உபசாரங்கள் தவிர்க்க முடியாமல் தொடர்ந்தன. அத்தகைய கூட்டங்களுள் ஒன்றில் ஸி. ஆர். கூறினார்: "நான் ஏன் தில்லிக்கு வரவழைக்கப்படுகிறேன்? எதனால் நான் இந்தப் பதவிக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டேன்? வங்கத்தில் நான் செய்த பணி சிறப்பாக அமைந்ததால்தான். அதற்கு யாருக்கு நாம் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும் என்றால் வங்க மக்களுக்கே! வங்கத்தின் மரபுகளும் பண்பாடும் கொடிய சக்திகளை வெற்றி கண்டன."

நகரின் முஸ்லிம்கள் ஸி. ஆருக்கு வழியனுப்பு உபசாரம் நடத்தியபோது எல்லா மதத்தினருக்கும் அழைப்பு அனுப்பினர். ஸி. ஆர். உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்:

"பிரமாதமான முயற்சிகளை மேற்கொள்ளாமல், ரொம்பவும் கஷ்டப்படாமல் இங்குள்ள மக்களின் உள்ளங்களை வெற்றி கண்டிருக்கிறேன் என்பதைக் கவனியுங்கள். என்னைப் புகழாதீர்கள்; என்னைப் பின்பற்றுங்கள். கல்கத்தாவின் ஏழைகளுக்கோ வங்கத்தின் ஏழைகளுக்கோ நான் பிரமாதமாக எதையும் செய்துவிடவில்லை. ஆனால் அவர்கள்பால் எனக்கு இருக்கிற அன்பு, பரிவு போன்ற உணர்வுகளை அவர்கள் கண்டு கொண்டு அதனைப் பாராட்டுகிறார்கள். பதிலுக்கு என் மீது அன்பைச் சொரிகிறார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் என்னைப் போலவே நடந்து கொண்டு என்னைப் போலவே வெற்றி பெறவும் முடியும்."

கல்கத்தாவில் நிலவிய அமைதி ஸி. ஆருக்குக் கிடைத்த மிகப் பெரிய பொக்கிஷமாக விளங்கியது. அவர் கேட்டுக் கொண்டதின் பேரில் சட்டசபை உறுப்பினர்கள் ஒரு நிமிஷம் மௌனமாக நின்று பிரார்த்தித்தனர்: "இப்போதுள்ள சந்தோஷமும் பரஸ்பர நம்பிக்கையும் சுறுசுறுப்பான வாழ்க்கையும் இடைவெளியின்றித் தொடரட்டும்" என்று இறைவனை வேண்டிக் கொண்டனர்.

மறுநாள் கவர்னர் மாளிகையின் ஊழியர்கள் அவருக்கு ஒரு ஜதை செருப்பு பரிசாக அளித்தனர். "ஒரு வெள்ளிக் கோப்பை அல்லது தங்கப் பதக்கத்தைவிட அதிக மதிப்புடையதாக நான் இதனைக் கருதுவேன்" என்றார் ஸி. ஆர். "உங்கள் பரிசை வைத்துப் பாதுகாக்க ஓர் இடத்தை நான் தேட வேண்டியதில்லை. அணிந்து கொண்டு விடுகிறேன்! என்னுடன் ரத்த சம்பந்தம் உள்ள உறவினர்களை விட்டுச் செல்வதுபோல் எனக்கு ஓர் உணர்வு உண்டாகிறது". இவ்வாறு தமது ஊழியர்களிடம் அன்பொழுகப் பேசிய ஸி. ஆர். புத்திமதியும் கூறினார்: "எப்போதாவது தவறு செய்யத் தோன்றினால் நான் அருகிலிருந்து உங்களைக் கவனித்துக் கொண்டே

ராஜாஜி வாழ்க்கை வரலாறு—III
ராஜ்மோகன் காந்தி



"தொகுதியைச் சுற்றிப் பார்க்கப் போன எம்.எல்.ஏ. வெளியூரிலிருந்து தந்தி கொடுத்திருக்கார்."

"என்னவாம்?"

"தன்னோட தொகுதி எந்த மாவட்டத்தில் இருக்குதுன்னு தெரியலையாம்!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள்!"

தந்தப் பேழைகள், வெள்ளிக் கிண்ணங்கள் என்று பலபரிசுகளைப் பெற்றார் ஸி.ஆர். கவர்னர் பதவியின் கடைசிநாட்களில்ஏராளமான பரிசுகள் வந்து குவிந்தன. உயர்ந்த கருங்காலி மரத்தில் ஒரு டஜன் கண்ணாடி அலமாரிகள் செய்யச் சொல்லி எல்லாப் பரிசுகளையும் அவற்றிலே அடுக்கி வைத்துவிடச் செய்தார். 'உபயோகமான ஓரிரு பொருள்களையாவது எடுத்துச் செல்லலாமே?' என்று கவர்னர் மாளிகை ஊழியர்கள் யோசனை கூறினர். "தந்தத்தாலான கைத்தடி ஒன்று இருக்கிறதே, அதை மட்டுமாவது எடுத்துப் போகலாமே" என்றார் மெய்க்காவலர் சிங்காரவேலு. ஸி. ஆர். பதிலளித்தார்: "இந்தப்பரிசுகளெல்லாம்கவர்னருக்கு வழங்கப்பட்டவை; ராஜகோபாலச்சாரிக்கு அல்ல! இவை கவர்னர் மாளிகையிலேயே இருக்கும்!" தொடர்ந்து அவர், சிங்காரவேலுவிடம் ஓர் ஆழ்ந்த கருத்தினைத் தமாஷாக வெளியிட்டார்: "உன் யோசனைப்படி தந்தத்தாலான இந்தக் கைத்தடியை நான் எடுத்துப் போனால் என்ன ஆகும் தெரியுமா? ஒருநாள் இதை ஊன்றிக் கொண்டு சென்னை மெரீனா கடற்கரையில் வாக்கிங் போவேன். அப்போது இதன் மதிப்பை நன்கு உணர்ந்திருக்கும் ஒரு திருடன் இதை என்னிடமிருந்து பிடுங்கி, இதனாலேயே என் தலையில் ஒரு போடு போட்டுவிட்டு எடுத்துக் கொண்டு ஓடிப் போய்விடுவான்! அப்போது என்னைப் பாதுகாக்க மெய்காவலன் சிங்காரவேலு என்ன, ஒரு பியூன்கூடப் பக்கத்தில் இருக்க மாட்டானே!"

பதவிக் காலத்தின் கடைசி நாளன்று ஏராளமான பேர் கவர்னரைப் பார்க்க வந்தார்கள். பெருங் கூட்டமாகிவிட்டது. கவர்னரின் ராணுவக் காரியதரிசி சட்டர்ஜி கூறுகிறார்: "எல்லா அமைச்சர்களும் இருந்தனர். அழைக்கப்படாமலே பெரிய மனிதர்களும் சின்ன மனிதர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்களிடையே நடமாடி விடைபெற்ற ராஜாஜி, நெகிழ்ந்து போயிருந்தார். அவரது கறுப்புக் கண்ணாடி கூட அவரது உணர்ச்சிகளை மறைக்க முடியவில்லை." மற்றொரு மெய்க்காவலர் ஹரிதாஸ் பட்டாசார்ஜி சொல்கிறார், "விடையளிக்க வந்திருந்தவர்களின் கண்களும் பனித்திருந்தன" என்று. ஆனால் அந்தச் சமயத்திலும் கூட ஸி. ஆரின் சமயோசிதப் பேச்சு அவரை விட்டுச் செல்லவில்லை! ஒரு பத்திரிகையாளர், "ராஜாஜி! சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியைச் செய்யப் போகிறீர்கள்; கடவுள் உங்களுக்குத் துணை நிற்கட்டும்" என்றார். உடனே ராஜாஜி, "நானா சரித்திரத்தை உருவாக்குகிறேன்? இதில் தவறு செய்யாதீர்கள்! சரித்திரம்தான் என்னை உருவாக்கிக் கொண்டிருக்கிறது!" என்றார்.

கிளம்ப வேண்டிய தருணம் வந்துவிட்டது! ஆனால் சில நிமிஷங்களுக்கு ஒரே பரபரப்பாகிவிட்டது! காரணம் ஸி. ஆரின் கைத்தடியைக் காணோம்! அது ஒன்றுமட்டும் எப்போதுமே கவர்னர் மாளிகையில் அவர் வைத்த இடத்தில் இருந்ததே கிடையாது! இப்போதும் அது தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வரப்பட்டது.

தமக்குப் பிறகு கைலாஸ்நாத் கட்ஜு கவர்னர் பதவி வகிக்கலாம் என்று ஸி. ஆரே யோசனை கூறியிருந்தார். கட்ஜு இப்போது ஸி. ஆருடன் சேர்ந்து கவர்னர் மாளிகையின் வாசல் படிகளில் இறங்கி வந்தார். மாளிகையின் முன்புறம், ராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றார் ஸி. ஆர். வடக்கு வாசலுக்கு வெளியே ஒரு பெருங் கூட்டம் "வந்தே மாதரம்!" என்றும் "ஜெய்ஹிந்த்" என்றும் கோஷங்களை எழுப்பியது. விமான நிலையத்திலும் கடலென மக்கள் தலைகள்!

வழியனுப்பி வைத்த பெரிய மனிதர்களுள் ஒருவர் கேட்டார்: "புதிய பதவி ஏற்கப் போகிறீர்களே, உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது?"

ஸி. ஆர். அளித்த பதில்: "பரீட்சை முடிவுகள் வெளியான அன்று, 'தேறிவிட்டோம்' என்பதைக் கண்ட மாணவனின் மனநிலையில் இன்று நான் இருக்கிறேன்; நாளை பள்ளி திறந்துவிடும்; வகுப்புக்கள் ஆரம்பமாகிவிடும்!"

விமானப் படையைச் சேர்ந்த ஒரு விமானம், நாளைய கவர்னர் ஜெனரலை இன்று பெருமிதத்துடன் தில்லிக்கு ஏற்றிச் சென்றது.

தமிழாக்கம்: **கி. ராஜேந்திரன்**

(ராஜாஜி வாழ்க்கை வரலாறு III முடிவுற்றது. நான்காம் பாகம் கல்கி ஆகஸ்டு 2 ஆண்டு மலரில் ஆரம்பமாகும்.)



At KCUB— we stay tuned-in to your plans and hopes!

Yes. At KCUB we keep pace with the growing needs of today. Maintaining a tempo to suit the times. We offer a wide variety of saving schemes to match your need.

We offer:

- Monthly savings.
- Cash Certificates.
- Vamana Viswarupa Deposit.
- Fixed Deposit.


KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam-612 001

KCUB—The Bank that's committed to growth — your growth.


MCS/KCUB/221



68 குடும்பங்களை அம்போவாக்கிய அரசு!

கைத்தறிக்கென்று தனியாக ஒரு துறையே இருக்கிறது. அதில் ஏகப்பட்ட அதிகாரிகளும் இருக்கிறார்கள். போதும் போதாததற்கு ஓர் அமைச்சரும் இருக்கிறார். அப்படியிருந்தும் தாரமங்கலத்திலிருக்கும் எம்.ஜி. ஆர். நகரிலுள்ள அறுபத்தெட்டு நெசவாளர் குடும்பங்களின் கதி அதோகதியாகத்தான் இருக்கிறது. இத்தனைக்கும் அங்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற ஒரு கூட்டுறவுச் சங்கம் இருந்தும்கூட, அவர்கள் இன்னமும் தனிப்பட்ட சில முதலாளிகளுக்குத்தான் உழைத்து நஷ்டப்பட்டு வருகிறார்கள். இதைக் கூட்டுறவுச் சங்கமும் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. என்ன காரணம்? அரசாங்கத்தின் வழக்கமான மெத்தனம்தான் இதற்கும் காரணம்.

கடந்த 77–ம் ஆண்டு வரை தாரமங்கலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்




தங்கவேலு

ஒழுங்காகத்தான் நடந்து கொண்டிருந்திருக்கிறது. நெசவாளர்களுக்கும் நியாயமான கூலி கிடைத்து வந்திருக்கிறது. பிரச்னை வந்ததே, நெசவாளர்களுக்குச் சொந்தமாக வீடு கட்டித் தர வேண்டும் என்று அரசாங்கம் செயல்பட்டபோதுதான்! நெசவாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுத்து, அதற்கான கிரயத்தை மாதாமாதம் அவர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளும் திட்டம் வரவேற்கப்பட வேண்டிய திட்டம்தான் என்றாலும் அதை ஒழுங்காக நடைமுறைப்படுத்த வேண்டாமா? அதுதான் இல்லை!

நெசவாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் முதல்கட்டமாக, தாரமங்கலம் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கம் அறுபத்தெட்டு வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று அரசு ஆணையிட்டதே தவிர, அதற்கான கடனுதவியை 'ஹட்கோ'விடமிருந்து பெற்றுத் தரவில்லை. ஆயினும் வீடுகள் கட்டப்பட்டாக வேண்டுமென்று கூட்டுறவுச் சங்கத்திற்குக் கடுமையான உத்தரவிட்டது அரசு. வேறு வழியில்லாத சங்கம், சென்ட்ரல் பேங்கிலிருந்து 6,42,000 ரூபாயைக் கடனாகப் பெற்று, அறுபத்தெட்டு வீடுகளைக் கட்டி முடித்துக் கடந்த 82—ல் அவற்றை நெசவாளர் குடும்பங்களிடம் ஒப்படைத்தது. அப்போதும் ஹட்கோவிடமிருந்து வர வேண்டிய கடனுதவி வந்து சேரவில்லை. அந்த ஒப்படைக்கும் விழாவுக்குச் சென்றிருந்த நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அந்த நெசவாளர் காலனிக்கு 'எம்.ஜி.ஆர். நகர்' என்று பெயர் சூட்டுவதில் ஆர்வம் காட்டினார்களே தவிர, ஹட்கோ கடனுதவி வராதது பற்றிக் கவலைப்படவேயில்லை.



கணேசன்



வீரபாகு

ஒருவழியாக —79—ல் வந்திருக்க வேண்டிய ஹட்கோ கடனுதவி, 84—ல் வந்து சேர்ந்தது. அதைக் கொண்டு, சென்ட்ரல் பேங்கில் வாங்கியிருந்த கடனை அடைப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கம் சென்றபோது, வாங்கிய கடனுக்கான வட்டியாக 1,35,000 ரூபாய் செலுத்த வேண்டுமென்று பேங்க் கூறவே, சங்கம் ஸ்தம்பித்துப்போய்விட்டது. விளைவு? அந்த அறுபத்தெட்டு நெசவாளர்கள் நெய்வதற்கான 'பாவு'களைச் சங்கத்தால் தொடர்ந்து கொடுக்க முடியாமல் போனது. நெசவாளர்களும் வேறு வழியின்றிப் பழைய படி தனிப்பட்ட முதலாளிகளின் தயவில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

எம்.ஜி.ஆர். நகர் என்ற அந்த நெசவாளர் காலனியிலுள்ள தங்கவேலு, கணேசன் ஆகிய நெசவாளர்களைச் சந்தித்த போது, "இப்போது நாங்கள் நெய்து கொடுக்கும் நாற்பத்திரண்டு கெஜம் நீளமுள்ள பாவை நெய்து, சங்கத்திடம் கொடுத்தால் நூற்றுப் பதினாறு ரூபாய் கிடைக்கும். சங்கத்தில் எங்களுக்குப் பாவு தரப்படாததால், தனிப்பட்ட முதலாளிகளிடம்தான் வாங்கி நெய்ய வேண்டியிருக்கிறது. அவர்களோ, அறுபதிலிருந்து எழுபது ரூபாய்க்குள்தான் கொடுக்கிறார்கள். ஏறத்தாழப் பாதிக் கூலிதான் கிடைக்கிறது. இந்த நிலையில், எங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்ததற்கான தவணைத் தொகையையும் கட்டச் சொல்கிறார்கள். எப்படிக் கட்ட முடியும்? வயிற்றுக்கே திண்டாட்டமாக இருக்கிறது!" என்றார்கள்.

தாரமங்கலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளரும் கைத்தறி அலுவலருமான வீரபாகுவைச் சந்தித்துப் பேசியபோது, "ஹட்கோவிடமிருந்து கிடைக்க வேண்டிய கடனுதவி மிகவும் காலதாமதமாகக் கிடைத்ததால், சங்கத்திற்கு ஏற்பட்ட 1,35,000 ரூபாய் வட்டிதான் எல்லாவற்றுக்கும் காரணம். அதை சம்பந்தப்பட்ட அந்த அறுபத்தெட்டு நெசவாளர் குடும்பங்களும் கட்டினால் பிரச்னையே இல்லை. அவர்கள் கட்டமாட்டேனென்கிறார்கள். என்ன செய்வது?" என்றார்.

சம்பந்தப்பட்ட நெசவாளர்கள்தான் அந்த வட்டித் தொகையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற வீரபாகுவின் கருத்தை நம்மால் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம், அந்த வட்டித் தொகை வந்ததற்குச் சம்பந்தப்பட்ட நெசவாளர்கள் எந்த விதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள் என்பதுதான். நியாயத்திற்குப் பார்த்தால், ஹட்கோவிடமிருந்து வர வேண்டிய கடனுதவி, மிகவும் காலதாமதமாக வந்ததற்கு யார் காரணமோ அல்லது கடனுதவி வருவதற்கு முன்பே வீடுகள் கட்டப்பட்டாக வேண்டுமென்று, சிறிதும் முன்யோசனையின்றிப் போடப்பட்ட அரசு உத்தரவுக்கு யார் காரணமோ, அவர்கள்தான் அந்த வட்டித் தொகைக்குப் பொறுப்பேற்க வேண்டும். நமது அமைச்சர்களின், அதிகாரிகளின் மெத்தனப்போக்குக்கும் முன்யோசனையற்ற செயல்களுக்கும் ஏழை நெசவாளர்கள் பலியாகிறார்கள்.

— பிரின்ஸ்

மின்வாரியத்தில் மட்டும்தான் நஷ்டமா?



* இவரைவிட?







* நிஜத் தொண்டனுக்கு..





* தலைப்பாகைத் தலைவலி

* ரூ 10 பரிசு பெறுபவர்:
எஸ். சுந்தரராஜ்,
ஒ.எஸ். பிரிவு,
எல்.ஐ.சி. ஆஃப் இந்தியா,
டிவிஷனல் காரியாலயம்,
மதுரை—625 002.

* எம். சிவரேகா, குடியாத்தம்—2

? ஆரம்ப காலம் முதல் கட்சியிலிருக்கும் கே.ஏ.கே. வீட்டுத் திருமணத்திற்குச் செல்லாமல், நடிகையின் திருமண வரவேற்பில் கலந்து கொண்ட எம்.ஜி. ஆர். குணம் எதில் சேர்த்தி?

! எம்.ஜி. ஆர். தி.மு.க.விலிருந்து விலக்கப்பட்டவுடன், எதிர்காலத்தில் எம்.ஜி. ஆரின் செல்வாக்கு எப்படியிருக்கும் என்பது கூடத் தெரியாத அந்த நிலையிலேயே எம்.ஜி. ஆர். பக்கம் வந்தவர் கே.ஏ.கே. அப்படிப்பட்ட நிஜமான எம்.ஜி. ஆர். தொண்டனுக்கு எம்.ஜி. ஆர். கொடுக்கும் மரியாதை இதுதானா? சுயமரியாதை உள்ள அ.இ.அ.தி.மு.க.வினர் அனைவரும் யோசிக்க வேண்டிய விஷயம் இது.

* இராம. பத்மகிருஷ்ணன், விருத்தாசலம்

? தமிழக சட்டசபையின் வேலை நேரம் குறைக்கப்பட்டுள்ளதே?

! வேலை நேரம் கூடினாலும் குறைந்தாலும் 'நிகழ்ச்சிகள்' ஒரேமாதிரிதான் நண்பரே!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? 'பயங்கரக் குற்றவாளிகளை விசாரிக்கும் போது, உண்மைகளை வெளிக் கொணர, அவர்களை அடித்துத் துன்புறுத்திச் சித்திர வதை செய்வதில் தவறில்லை' என்று சபாநாயகர் கூறியுள்ளாரே?

! போலீஸாருக்குத் துப்பறியும் திறன் குறைவாக இருப்பதால், சித்திரவதை செய்கிறார்கள், அப்படியாவது உண்மை வெளி வராதா என்று. பல சமயம், வேதனை தாங்காமல் செய்யாத குற்றத்தைக் கூடச் செய்ததாக ஒப்புக் கொள்வோர் உண்டு. எனவேதான் சித்திரவதை கூடாது என்று சட்டம் சொல்கிறது. ஆனால், நடைமுறையில் அரசியல் கைதிகள் கூட அடித்துத் துன்புறுத்தப்படுகிறார்கள். இது ஆட்சியிலுள்ளவர்களின் பழி வாங்கும் நடவடிக்கையே.

* எஸ். சுந்தரராஜ், மதுரை—2

? மத்திய அரசின் பட்ஜெட்டை ஏழைகளுக்கெதிரானது என்று சாடியிருக்கிறார் என்.டி. ஆர். எம்.ஜி. ஆரோ, ஏழைகளின்

பட்ஜெட் என்று பாராட்டியிருக்கிறார். ஏனிந்த முரண்பாடு?

! அங்கே இ. காங்கிரஸ் எதிர்க் கட்சி. எனவே அவருக்குச் சாடலில் ஆதாயம். இங்கோ இ. காங்கிரஸ் இணைக் கட்சி. எனவே, இவருக்குப் பாராட்டுவதால் ஆதாயம்!

* ஆர். ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்

? சங்க கால ஔவையார், இக்கால நிர்மலா சுரேஷ் — இவர்களுடன் நடுவில் வந்த ஆண்டாளும் உமக்குப் பிடிக்குமோ?

! தூய காதலின் தெய்வீகத் தன்மையையும் பக்தி செலுத்துவதிலே உள்ள காதல் தத்துவத்தையும் சொல்லாலும் செயலாலும் ஆண்டாளைப் போல இத்தனை சிறப்பாக எடுத்துக் காட்டிய இன்னொரு பெண் கவிஞர் தமிழகத்தில் இல்லை. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, கடலில் மிதந்து வந்த எத்தனையோ அழகிய சங்குகள் இருந்தாலும் மதுசூதனன் வாயமுதம் பன்னாளும் உண்ணும் பாக்கியம் பெற்ற பாஞ்சசன்னியத்துக்கு இணை இல்லை என்று ஆண்டாள் உணர்த்தியதுபோல்தான் அவரும் உயர்கிறார்!

* பழ. நாகப்பன், சென்னை — 41

? புதிய 'பூவாளி' — சாவியின் முயற்சி எப்படி?

! காகிதமும் அச்சும் உயர்தரமாக இருக்கிறது. 'பத்து ரூபாய்க்கு அதுகூட வேண்டாமா?' என்று கேட்கலாம். அமைப்பு ரீடர்ஸ் டைஜஸ்ட்டை நினைவூட்டுகிறது. திட்டமிட்டே அப்படிச் செய்திருக்கலாம். பூவாளி நீர் பருகிய கட்டுரைச் செடிகள் அழகாகவே புஷ்பித்துள்ளன. ஆனால் ஒன்று. எந்தத் தோட்டத்திலுமே அபிவிருத்திக்கு இடமிருக்கத்தான் செய்யும்.

* கே. மனோகரன், சென்னை — 112

? நம் தமிழகத்தில் மின்வாரியத்தில் மட்டும் தான் நஷ்டமா?

! நிச்சயமாக இல்லை. மின்வாரியத்தின் நஷ்டம் என்பது தமிழக மக்களுக்கும் நஷ்டம் தான். அதுபோல், எத்தனையோ பல அரசு நிறுவனங்களின் நஷ்டமும் வரி செலுத்தும் மக்கள் தலையில்தான் விடிகிறது.

* இதய கீதா, விருதுநகர்

? இ. காங்கிரஸுடன், கா.கா.தே.கா. இணையப் போகிறதாமே?

! குமரி அனந்தன் தனியாக இருந்து எதையுமே சாதிக்க இயலாது. உதிரிகள் இணைந்து இ. காங்கிரஸைப் பலப்படுத்தினாலாவது, தமிழகத்தில் மூன்றாவதாக ஒரு சக்தி வலிமை பெறும் வாய்ப்புண்டு. அது மாநில சக்தியாக இன்றி தேசிய சக்தியாக இருப்பது மிகவும் நல்லதே.

* கு.கு. நாகராஜன், சாத்தூர்

? மதுரைஸ் பெர்டிலைசர்ஸ் நிறுவன டைரக்டர், நிறுவன விரிவாக்கம் சம்பந்தமாகத் தமிழக முதல்வரைக் கோட்டையில் சந்திக்க, இரண்டு மணி நேரம் காத்திருந்ததாகவும், பிறகு அவரைத் தோட்டத்தில் வந்து சந்திக்குமாறு அதிகாரிகள் கூறியதைக் கேட்டு, வெறுப்புற்ற அந்த டைரக்டர், தற்போது அத்திட்டத்தை உத்திரப்பிரதேசத்திற்கு மாற்றிச் செயல்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அறிந்தேன். புரட்சித் தலைவரின் புரட்சிகளில் இதுவும் ஒன்றோ?

! உங்கள் கேள்வியில் எத்தனை தூரம் உண்மை என்று ஆராய என்னால் இயலாது. ஆனால் மிக முக்கியமான பிரமுகர்கள் கூட எம்.ஜி. ஆரைச் சந்திக்க முடிவதில்லை என்பதும், பல தொழில்கள், தமிழக அரசின் சரியான ஒத்துழைப்பு இல்லாமல் வேறு மாநிலங்களுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன என்பதும் நன்றாகத் தெரியும்.

* கா.சு.வே. ரோகிணி, கோவை — 16

? கண்ணை மூடிக் கொண்டு பதில் சொல்லுங்கள், கின்னஸ் சாதனை ஏற்படுத்தப் போகும் அரசியல்வாதி யார்?

! சட்டமன்றத்தில் அமளி; லஞ்ச ஊழல் போன்றவற்றில் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும்கூட அரசியல்வாதிகள் பெரிய சாதனைகளை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அடிக்கல் நாட்டும் சாதனை தமிழக அரசியல்வாதிக்கே உரியது! கடந்த சில மாதங்களாக மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்யும் எம்.ஜி. ஆர். பல்வேறு திட்டங்களுக்கான அடிக்கற்களையெல்லாம் ஒரே இடத்தில் இருந்து கொண்டு திறந்து வைப்பதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. அவருடைய 'உடல் நிலை சரியில்லை; அதனால் தான்!' என்று பதில் வரலாம். அதற்கு லட்சக் கணக்கான பணத்தை விணடித்துக் கொண்டு அங்கே போவானேன்? கோட்டையிலிருந்து கொண்டே திறந்து வைத்தால் பணத்திற்குப் பணமும் மிச்சம், உடலையும் வருத்திக் கொள்ள வேண்டியதில்லையே!

* ஆர்.கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்

? தலைவலி வந்ததால்தான் தலைப்பாகையை எடுத்துவிட்டேன் என்கிறாரே என்.டி. ஆர்.?

! உண்மையாக இருக்கக் கூடும். ஹெல்மெட் அணிவதால் தலைவலிப்பதாகக் கூறி அவதிப்படும் இரு சக்கர வாகன ஓட்டிகள் உண்டு.



சின்ன தம்பி பெரிய தம்பி

ஹோட்டலில் நுழைந்து, வயிறு புடைக்க, வாய் புடைக்கச் சாப்பிட்டு விட்டுக் காசு கொடுக்காமல் வெளியே வருவதற்காகச் சின்ன தம்பி பிரபுவும், பெரிய தம்பி சத்யராஜும் ஆடுகிற ஆட்டம் சரியான கலகல. வால் ஒன்றுதான் குறைச்சல் இரண்டு பேருக்கும்.

ஆட்டமும் பாட்டமுமாகப் போய்க் கொண்டிருக்கிற வாழ்க்கை, முறைப் பெண்ணால் திசை மாறிவிடுகிறது. சின்ன தம்பியும் வேண்டும் என்கிறார். பெரிய தம்பியும் வேண்டும் என்கிறார். யாருக்கு ஓட்டுப் போடுவது என்று கொஞ்ச நேரத்திற்கு நமக்கே புரியவில்லை. பிரபு என்று முடிவானதும், சத்யராஜ் என்று முடிவாயிருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்ற ஒரு கேள்வி எழத்தான் செய்கிறது. சத்யராஜ் என்று முடிவானாலும் இதே கேள்வி எழுந்திருக்கும் என்பதால் மனம் சமாதானமாகிவிடுகிறது.

மீசைக்கார முருகேசனும், கோட்சூட் ரவியும் திடீரென்று என்னமாய்ப் பல்டி அடிக்கிறார்கள்! லட்ச ரூபாயைக் கொடுத்து நதியாவை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவதும்கூடவே கார்ச் சாவியை வாங்கித் துக்க சாகரத்தில் தள்ளி விடுவதும் — 'அடப்பாவி' என்று முணுமுணுக்கவைத்துவிடுகிறார் அந்தமீசைக்கார அண்ணாச்சி.

அப்படியே அவர்கள் காணாமல் போயிருந்தால் ஒன்றும் குறைந்து போயிருக்காது. அநாவசியமாக ரவியை வில்லனாக்கி (வில்லன் உடை கொஞ்சமாவது பொருந்தினால் தானே?) இன்ஸ்பெக்டரை வளைத்துப் போட்டு, ஜிப்பாக்காரரை வளைத்துப் போட்டு.... கதையை வளர்த்துக் கொண்டு போக உதவியிருக்கிறார்.

வயல்வெளியில் பிரபுவும் சத்யராஜும் பாடுகிறார்களே, ஒரு பாட்டு — நல்ல வேடிக்கை.

இந்தப் பிரபு காதல் காட்சியில் நடப்பது, உதட்டைக் குவிப்பது, வாயை அசைப்பது எல்லாமே, அப்பாவை நகலெடுத்துப் பண்ணியிருக்கிறார். கொஞ்சம் சுயபாணி என்ன என்று யோசித்து அதையும் சேர்த்தால் மெருகேற்றலாம்.

சத்யராஜ் வழக்கம்போல் கொடிகட்டிப் பறக்கிறார். அவருக்கு ஜோடி சேர்ப்பதற்கென்றே தொடக்கத்திலிருந்து சுதாவை வெள்ளைப் புடைவையில் காக்க வைத்திருக்கிறார்கள். விஜயனும், சுதாவும் மனத்தில் நின்றுவிடவில்லை, டைரக்டர் எதிர்பார்க்கிற அளவுக்கு.

நதியா, 'பூவே பூச்சூடவா'விலேயே சிகரத்தைத் தொட்டுவிட்டதால், அவர் இனிமேல் என்ன பண்ணினாலும் இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்திருக்கலாமே என்று எண்ண வைத்துவிடுகிறார்.

ஆரம்பத்தில் இருந்த கலகலப்பு கடைசி வரை இருந்திருந்தால் சந்தோஷமாய் இருந்திருக்கும். ஆனால் இப்போதுஒன்றும்கெட்டுப் போய்விடவில்லை. சண்டை, வில்லத்தனம், செண்டிமெண்ட் என்று கலந்து கட்டிக் கடைசி வரை லிட்டில் தெளிய விடாமல் செய்திருக்கிறார்கள். அதுவே வெற்றிதான்.

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 31543 4 34 157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 26, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

கைபடாத சேவரிட் சேமியா
மணக்குமே உங்கள் கைபட்டதும்!



சேவரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு இயந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

உயர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும் சேவரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து போகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும், சேவரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசியமில்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மையாக இருக்கும்!

சிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள் சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!

ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத் தலைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!



முத்தான அம்மா சமைப்பது
சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா


இயற்கையான சந்தனத்
தைலத்தின் செழுமை
மைசூர் சாண்டல் சோப்பில் பரிமளிக்கிறது
மைசூர் சாண்டல் சோப்
ஒரு மோகன ஸ்பரிசம்
Mysore Sandal Soap
MYSORE SANDAL SOAP
தயாரிப்போர்: கர்நாடகா சோப்ஸ் & டிடர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
விற்பனை ஏற்பாடு: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்